# தமிழ்

## ழகரம்

இரண்டாம் பருவம்



தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை – 600025.

www.tamilvu.org

# தமிழ்

## ழகரம்

## இரண்டாம் பருவம்

தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600025.

**தமிழ்நாடு அரசு**

**முதல்பதிப்பு - 2025**

விலை: ரூ. 310.00

**பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்**

தமிழ் இணையக் கல்விக்கழகம்

**நூல் அச்சாக்கம்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

| ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும்<br>(18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்) |
|---|
| குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?<br>அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098<br>உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்<br>CHILD LINE 1098 NIGHT & DAY |
| மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?<br>தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?<br>அழையுங்கள் 14417<br>உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்<br>14417 கல்வித் தகவல் மையம் |

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

-'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.

## தமிழ்த்தாய் வாழ்த்து - பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும் பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப்பெண்ணே! தமிழ்ப்பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன்வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

| பாடம் | பாடப்பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 17 | **தமிழரின் அடையாளம் – பொருநை**<br>தெரிந்துகொள்வோம்: தெரிநிலைப் பெயரெச்சம்<br>கேட்டல் கருத்தறிதல்: மனிதநேயம்<br>செந்தமிழ்ச்செல்வம்: நல்வழி | 1 |
| 18 | **கொடைப்பண்பு (வில்லுப்பாட்டு வடிவம்)**<br>தெரிந்துகொள்வோம்: தெரிநிலை வினையெச்சம்<br>கேட்டல் கருத்தறிதல்: உழைப்பே சிறந்த செல்வம்<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 17 |
| 19 | **அறிவியல் புனைகதை**<br>தெரிந்துகொள்வோம்: வினைமுற்று<br>கேட்டல் கருத்தறிதல்: அறிவியல் அறிஞர் ஜெகதீஸ் சந்திர போஸ்<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 31 |
| 20 | **உயிர்காக்கும் வங்கிகள்**<br>தெரிந்துகொள்வோம்: இரட்டுற மொழிதல்<br>கேட்டல் கருத்தறிதல்: உடல்நலம் காப்போம்<br>செந்தமிழ்ச்செல்வம்: பதிற்றுப்பத்து | 42 |
| 21 | **இயற்கை மொழி ஆய்வு**<br>தெரிந்துகொள்வோம்: வேற்றுமைத்தொகை<br>கேட்டல் கருத்தறிதல்: தாய்மை உள்ளம்<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 55 |

| பாடம் | பாடப்பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 22 | **தமிழரின் கப்பல் கட்டுமானத் தொழில்நுட்பம்**<br>தெரிந்துகொள்வோம்: உவமைத்தொடர்கள்<br>கேட்டல் கருத்தறிதல்: மலர்க்கொத்து<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 68 |
| 23 | **மனத்துக்கண் மாசிலன் ஆதல் (சிறுகதை)**<br>தெரிந்துகொள்வோம்: வழுவமைதி<br>கேட்டல் கருத்தறிதல்: உயர் அலுவலர் தந்த பரிசு<br>செந்தமிழ்ச்செல்வம்: நாலடியார் | 78 |
| 24 | **அறநூல்கள்**<br>தெரிந்துகொள்வோம்: வல்லினம் மிகா இடங்கள்<br>கேட்டல் கருத்தறிதல்: நிலத்தில் கிடைத்த மோதிரம்<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 92 |
| | **மீள்பார்வை – பயிற்சிகள்** | 104 |
| 25 | **உடல்நலம் காப்போம்**<br>தெரிந்துகொள்வோம்: திணை, பால், எண், இடம், காலம் காட்டும் விகுதிகள்<br>கேட்டல் கருத்தறிதல்: உணவே மருந்து<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 108 |
| 26 | **உயிர் காத்த மருத்துவர் (வானொலி உரைச்சித்திரம்)**<br>தெரிந்துகொள்வோம்: வல்லினம் மிகும் இடங்கள்<br>கேட்டல் கருத்தறிதல்: அறுவை சிகிச்சை மருத்துவத்தில் ரோபோக்கள்<br>செந்தமிழ்ச்செல்வம்: கம்பராமாயணம் | 120 |

| பாடம் | பாடப்பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 27 | **ஆபிரகாம் பண்டிதர்**<br>தெரிந்துகொள்வோம்: புணர்ச்சி இலக்கணம்<br>கேட்டல் கருத்தறிதல்: உலகமும் மனிதநேயமும்<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 132 |
| 28 | **கண்டுபிடிப்புகளின் பேரரசன்**<br>தெரிந்துகொள்வோம்: தொடர் வகைகள்<br>கேட்டல் கருத்தறிதல்: நேர்மை தந்த பரிசு<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 144 |
| 29 | **மணிமேகலை**<br>தெரிந்துகொள்வோம்: நேர்க்கூற்று – அயற்கூற்று<br>கேட்டல் கருத்தறிதல்: நம்பிக்கையே வாழ்க்கை<br>செந்தமிழ்ச்செல்வம்: திருவருட்பா | 155 |
| 30 | **ஜீன் ஹென்றி டுனாண்ட்**<br>தெரிந்துகொள்வோம்: ஆறு சொல் கொண்ட தொடர்கள்<br>கேட்டல் கருத்தறிதல்: உதவி வரைத்தன்று உதவி<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 170 |
| | **மீள்பார்வை – பயிற்சிகள்** | 181 |

பாடம்

17

## 17.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

தொல்லியல் அகழாய்வு நிகழ்ந்த பகுதிகளுக்கு நீங்கள் சென்று வந்த அனுபவம் பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 17.2 படிப்போம்

# தமிழரின் அடையாளம் – பொருநை

உலகின் பல பகுதிகளில் அகழாய்வு நடைபெறுகிறது. அகழாய்வின் மூலம், மனிதன் வாழ்ந்த காலத்தையும் அவனது பண்பாட்டையும் அறிந்துகொள்ள முடிகிறது. இன்றைய தொழில்நுட்பத்தின் உதவியுடன் அகழாய்வில் கிடைக்கப்பெறும் பொருள்களைக் கொண்டு, அவற்றின் தொன்மை நிறுவப்படுகிறது. அவ்வகையில், **'தமிழ்ப் பண்பாட்டின் தொட்டில்'** என்று சிறப்பிக்கப்படும் **'பொருநை'** ஆற்றங்கரையில் நடைபெற்ற அகழாய்வு தமிழரின் தொன்மை, பண்பாட்டுக்கூறுகள் முதலியவற்றை வெளிப்படுத்தியுள்ளது.

இன்று தாமிரபரணி ஆறு என அழைக்கப்படும் பொருநை ஆற்றின் சிறப்பினைத் தமிழ் இலக்கியங்களில் காணலாம். 'பொருநை', 'பொருநல்', 'பொருந்தம்', 'தண்பொருநை', என இலக்கியங்களிலும் 'தண்பொருந்தம்', 'தாம்பபண்ணி' எனக் கல்வெட்டுகளிலும் பல பெயர்களில் இந்த ஆறு குறிக்கப்பட்டுள்ளது.

**'காவிரி, தென்பெண்ணை, பாலாறு – தமிழ்**
**கண்டதோர் வையை, பொருநை நதி**

எனத் தமிழ்நாட்டின் வளம் பெருக உதவிய ஆறுகளுள் பொருநையையும் பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் முதல் அகழாய்வு, பொருநை ஆற்றங்கரை இடங்களில் ஒன்றான ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்டது. இந்த ஊர், பொருநை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. ஜெர்மனியைச் சேர்ந்த **முனைவர் ஜாகோர்** என்பவர், 1876ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூர் பறம்பில் ஆய்வு செய்துள்ளார். இரண்டாவது அகழாய்வினை **அலெக்சாண்டர் ரீ** என்பவர் 1903ஆம் ஆண்டில் மேற்கொண்டார். அவர் அகழ்ந்து எடுத்த தொல்பொருள்களைச் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் இப்போதும் காணலாம்.

இந்திய அரசின் தொல்லியல் கண்காணிப்பாளர் **சத்தியமூர்த்தி** 2003 – 2005ஆம் ஆண்டுகளில் மீண்டும் அகழாய்வு செய்தார். இங்கு நூற்று அறுபதுக்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் மட்பாண்டங்கள், வெண்கலம், இரும்பினால் செய்யப்பட்ட கிண்ணங்கள் முதலிய பொருள்கள் இருந்தன.



முதுமக்கள் தாழிகள்



கறுப்பு – சிவப்பு நிற மட்பாண்டங்கள்



இரும்புக் கருவிகள்

அகழாய்வில் கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள், நான்கு கால் உள்ள சாடிகள், வீடுகளின் களிமண் தரையைத் தேய்க்க உதவும் கற்கள், அரைவைக் கற்கள், கிண்ணங்கள் உள்ளிட்ட பொருள்கள் கிடைத்தன.

இரும்பால் செய்யப்பட்ட எறிவேல், ஈட்டி உள்ளிட்ட 32 வகையான வேட்டைக்கருவிகள், செம்பாலும் இரும்பாலும் செய்யப்பட்ட மோதிரங்கள், தந்தத்தில் செய்யப்பட்ட மணிகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட மணிகள், தங்கத்தாலான பட்டங்கள் முதலிய அணிகலன்களும் கண்டெடுக்கப்பட்டன.

கழிவுநீர் செல்வதற்காகக் கிடைமட்டத்தில் அமைக்கப்பட்ட சுடுமண் குழாய்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மொத்தம் 847 தொல்பொருள்கள் இங்குக் கிடைத்துள்ளன. இத்தொல்பொருள்கள் பல ஆண்டுகளுக்குமுன் இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை, தொழில், பழக்கவழக்கங்கள் முதலியவற்றை உலகறியச் செய்துள்ளன.

பொருநை ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ள ஊர், **'சிவகளை'**. இங்கு நடத்தப்பட்ட முதல்கட்ட அகழாய்வில், **'ஆதன்'** என்ற **தமிழி எழுத்து** பொறிக்கப்பட்ட பானை ஓடு கிடைத்தது. கறுப்பு - சிவப்பு வண்ணக்கலயங்கள், குடுவைகள், பானைமூடிகள் முதலியன கிடைத்தன. இவை அழகிய வடிவமைப்பில் வெள்ளை வண்ண வேலைப்பாடுகளுடன் இருந்தன.

தமிழி (தமிழ்பிராமி)



ஆதன்

சிவகளையில் கண்டெடுக்கப்பட்ட உமி நீக்கப்பட்ட நெல், கரிமப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இதனை அமெரிக்காவிலுள்ள **பீட்டா பகுப்பாய்வுச் சோதனை ஆய்வகம்** மேற்கொண்டது. இச்சோதனையின் முடிவில், உமி நீக்கப்பட்ட நெல்லின் காலம் கி.மு. 1155ஆம் ஆண்டு என வரையறை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்கு மனித நாகரிகம் தோன்றியுள்ளது என்பதை அறிய முடிகிறது.

பொருநை ஆற்றங்கரையில் அமைந்துள்ள **கொற்கை** என்னும் இடத்தில் 1968ஆம் ஆண்டு அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த அகழாய்வில் சேகரிக்கப்பட்ட கரிமம் ஒன்றைப் பகுப்பாய்வு செய்ததில், இதன் காலம் கி.மு.785ஆம் ஆண்டு எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கொற்கை அகழாய்வில் சங்கு வளையல்கள், வெள்ளி முத்திரைக் காசுகள், மெருகூட்டப்பட்ட கருமை நிறப் பானைகள் முதலியன கிடைத்தன. சங்கு வளையல்கள் அதிக அளவில் கிடைத்துள்ளதால், இங்குச் சங்கு வளையல் தயாரிக்கும் தொழில் நடைபெற்றிருக்கலாம் என அறிய முடிகிறது.

சதுர வடிவிலான செங்கல் கட்டுமானம் ஒன்றும் இங்குக் கிடைத்துள்ளது. இச்செங்கற்கள், சங்க காலத்தைச் சேர்ந்தவை என அடையாளம் காணப்பட்டுள்ளன. இக்கட்டுமானத்திற்கு அருகில் துளைகளுடன் கூடிய ஒன்பது அடுக்கு கொண்ட வடிகட்டும் குழாய் உள்ளது. இதன் அருகே மேற்கத்திய நாட்டுப் பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. இச்சான்றுகள், நெடுங்காலமாகத் தமிழ்நாடு பிறநாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பதைத் தெரிவிக்கின்றன.

ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய ஊர்களைப் பெற்றுள்ள பொருநை ஆற்றங்கரை நாகரிகம் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அகழாய்வின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இங்குக் கிடைக்கப்பெற்ற வெண்கலம் முதலான பொருள்கள் தமிழர்களின் வளமான பொருளாதாரத்திற்கும் சமூக வாழ்க்கை நிலைக்கும் சான்றுகளாய் உள்ளன.

## பொருள் அறிவோம்

1. மட்பாண்டங்கள் – மண்ணால் செய்த பொருள்கள்
2. தாழி – புதைத்து வைக்கப் பயன்படுத்தப்பட்ட மட்கலன்
3. பகுப்பாய்வு – பரிசோதனை செய்தல்
4. உமி – நெல்லின் மீதுள்ள தோல்
5. சான்று – சாட்சி

## பயிற்சிகள்

### (அ) விடை காண்போம்.

1. பொருநை ஆற்றங்கரையில் அகழாய்வு நடைபெற்ற இடங்களைக் கூறுக.
2. ஆதிச்சநல்லூரில் கிடைத்த அணிகலன்கள் யாவை?
3. பொருநை ஆற்றுக்கு வழங்கும் வேறு பெயர்களை எழுதுக.
4. சிவகளை ஆய்வில் கண்டறியப்பட்டவற்றைக் கூறுக.
5. கொற்கை அகழாய்வில் கிடைத்த தொல்பொருள்கள் என்னென்ன?
6. அகழாய்வு செய்வதன் நோக்கங்கள் யாவை?

## ஆ) சேர்த்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. வடக்கு | + | கரை | = | வடகரை |
| 2. கருமை | + | நிறம் | = | ________ |
| 3. தொழில் | + | நுட்பம் | = | ________ |
| 4. பானை | + | ஓடு | = | ________ |
| 5. முதல் | + | கட்டம் | = | ________ |

## இ) பிரித்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. அகழாய்வு | = | அகழ் | + | ஆய்வு |
| 2. மட்பாண்டங்கள் | = | ________ | + | ________ |
| 3. வண்ணக்கலயம் | = | ________ | + | ________ |
| 4. ஆற்றங்கரை | = | ________ | + | ________ |
| 5. பழக்கவழக்கம் | = | ________ | + | ________ |

## ஈ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. சிவகளை | - | சங்கு வளையல்கள் |
| 2. ஆதிச்சநல்லூர் | - | உமி நீக்கப்பட்ட நெல் |
| 3. கொற்கை | - | வேட்டைக் கருவிகள் |

## உ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சிவகளை என்னும் ஊர் பொருநை ஆற்றின் ________ கரையில் உள்ளது.

   அ) கிழக்கு ஆ) மேற்கு இ) வடக்கு ஈ) தெற்கு

2. இந்தியாவில் முதன்முதலில் அகழாய்வு நடைபெற்ற இடம் ________.

   அ) சிவகளை ஆ) ஆதிச்சநல்லூர் இ) கொற்கை ஈ) சென்னை

3. ஆதன் என்ற தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானைகள் கிடைத்த இடம்

   அ) ஆதிச்சநல்லூர் ஆ) சிவகளை இ) பறம்பு ஈ) பொதிகை

## ஊ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(பொருநை, அமெரிக்கா, கொற்கை, ஆதிச்சநல்லூர், தாமிரபரணி)**

1. பொருநை ஆறு இன்று ________ என அழைக்கப்படுகிறது.
2. பொருநை ஆற்றின் தென்கரையில் ________ அமைந்துள்ளது.
3. பீட்டா பகுப்பாய்வுச் சோதனை ஆய்வகம் ________ வில் உள்ளது.
4. சதுர வடிவில் செங்கல் கட்டுமானம் ________ யில் காணப்பட்டது.
5. 'தமிழ்ப் பண்பாட்டின் தொட்டில்' எனச் சிறப்பிக்கப்படும் ஆற்றங்கரை ________.

## 17.3 தெரிந்துகொள்வோம்

### அ) தெரிநிலைப் பெயரெச்சம்

பெயரைச் சார்ந்து முடியும் எச்சம் செயலையும் காலத்தையும் உணர்த்தினால் அது தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்




இறுதி எழுத்து மறையாமல் வருவது, ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சம்.
இறுதி எழுத்து மறைந்து வருவது, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
(ஈறு – இறுதி எழுத்து; கெடாத – மறையாத)

| உடன்பாட்டுப் பெயரெச்சம் | ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சம் | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
|---|---|---|
| ஓடுகிற குதிரை | ஓடாத குதிரை | ஓடாக் குதிரை |
| பாடும் பெண் | பாடாத பெண் | பாடாப் பெண் |
| இயங்கிய பேருந்து | இயங்காத பேருந்து | இயங்காப் பேருந்து |

### உடன்பாட்டுப் பெயரெச்சம்



ஓடுகிற குதிரை



பாடும் பெண்



வாடிய மலர்

| ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சம் | | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| --- | --- | --- |
| ஓடாத குதிரை |  | ஓடாக் குதிரை |
| பாடாத பெண் |  | பாடாப் பெண் |
| இயங்காத பேருந்து |  | இயங்காப் பேருந்து |
| அழாத குழந்தை |  | அழாக் குழந்தை |

## ஆ) குறிப்புப் பெயரெச்சம்

காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பை மட்டும் உணர்த்துவது, குறிப்புச் பெயரெச்சம் ஆகும்.

| | |
|---|---|
|  | பெரிய மலை |
|  | புதிய வீடு |
|  | அழகிய ஓவியம் |
|  | நல்ல பையன் |

## பயிற்சிகள்

**அ. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சத்தை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாக மாற்றுக.**







1. மேயாத பசு
   மேயாப் பசு

2. வாடாத மலர்
   __________ மலர்

3. அணையாத விளக்கு
   __________ விளக்கு

**ஆ. கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியிலிருந்து ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சச் சொற்களை எடுத்து எழுதுக.**

காவிரி வளநாட்டிலுள்ள திருவையாறு என்னும் சிற்றூரில் பூஞ்சோலை ஒன்று இருந்தது. அது வெயில் புகாத பூஞ்சோலை ஆகும். அங்கு வாடாத மலர்கள் நிரம்ப இருந்தன. அங்கே வற்றாத குளம் ஒன்றும் இருந்தது. பசுமை மாறாத செடிகொடிகளை உடைய அச்சோலை கண்களுக்கு விருந்தளிப்பதாக இருந்தது.

1. __________ 2. __________ 3. __________ 4. __________

**இ. கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியிலிருந்து ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சச் சொற்களை எடுத்து எழுதுக.**

திருக்குறளுக்கு இல்லாச் சிறப்புகளே இல்லை. பிற நூல்கள் கூறாக் கருத்துகளை இந்நூல் கூறுகிறது. இதனால்தான், உலக மக்களுக்குத் திருக்குறள் மீது தீராக் காதல் உள்ளது. இந்நூலில் கூடா நட்பு, கூடா ஒழுக்கம் போன்றவற்றால் ஏற்படும் தீமைகள் விளக்கப்பட்டுள்ளன. இவற்றை மாணவர்கள் கற்று நல்வழியில் நடக்கவேண்டும்.

1. __________ 2. __________ 3. __________

4. __________ 5. __________

## ஈ. கீழ்க்காணும் தொடர்களைப் படித்து, அட்டவணையை நிரப்புக.

1. புனையா ஓவியம் போல் நின்றாள்.
2. மன்னனைப் பாடிய புலவர் பரிசில் பெற்றுச் சென்றார்.
3. வற்றாத வளம் நிறைந்த தமிழ்நாடு.
4. உழைக்கும் மக்கள் தேடிய செல்வமே 'செல்வம்' எனப்படும்.
5. நதி இல்லா நாடு வளத்தினில் சிறக்காது.
6. மகனைக் காணாத தாய் வருத்தம் அடைந்தாள்.

| உடன்பாட்டு எதிர்மறைப் பெயரெச்சம் | ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சம் | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

## உ. கீழ்க்காணும் உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள குறிப்புப் பெயரெச்சங்களை எடுத்தெழுதுக.

எங்கள் பள்ளி பெரிய பள்ளி. அதன் அருகில் சிறிய தோட்டமும் உள்ளது. அத்தோட்டத்தில் நாள்தோறும் அழகிய மலர்கள் பூத்துக் குலுங்கும். "நானும் என் நண்பர்களும் அந்த இனிய காட்சியைக் கண்டு மனமகிழ்ச்சி அடைவோம்" என பூவண்ணன் தன் தாத்தாவிடம் கூறினான்.

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________

## ஊ. கீழே தரப்பட்டுள்ள குறிப்புப் பெயரெச்சங்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. அழகிய – அழகிய வானம்
2. இனிய – ______________________
3. சிறிய – ______________________
4. பெரிய – ______________________
5. புதிய – ______________________

## 17.4 மொழியோடு விளையாடுவோம்

### குறிப்புகளைப் படித்துச் சொல்லைக் கண்டறிக.

**1. மூன்றெழுத்துச் சொல்.**

- இறுதி எழுத்து, தமிழ் மாதங்களுள் ஒன்று.
- முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் சேர்த்தால் அது குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும்.
- இரண்டாம், மூன்றாம் எழுத்துகளைச் சேர்த்தால், செடி முளைப்பதற்கு அடிப்படை ஆகும்.
- முதல், இரண்டாம் எழுத்துகளைச் சேர்த்தால், பாடல் எழுதுபவரைக் குறிக்கும்.

அச்சொல் எது?

| | | |
|---|---|---|
| | | |

**2. நாலெழுத்துச் சொல்**

- ஐந்திணையுள் ஒன்று.
- முதல், இரண்டாம் எழுத்தைச் சேர்த்தால், வெண்ணெய்யிலிருந்து கிடைக்கும்.
- முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் சேர்த்தால், உணவுப் பயிரைக் குறிக்கும்.

அச்சொல் எது?

| | | | |
|---|---|---|---|
| | | | |

**3. ஐந்தெழுத்துச் சொல்**

- தமிழ்க் கவிஞர்களுள் புகழ்பெற்றவர்.
- முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் சேர்த்தால், உலகத்தைக் குறிக்கும்.
- முதல் எழுத்தையும் மூன்றாம் எழுத்தையும் சேர்த்தால், ஒரு பொருளைச் சமமாகப் பிரிப்பதைக் குறிக்கும்.
- நான்கு, ஐந்து இவ்விரு எழுத்தையும் சேர்த்தால் வினாச்சொல் கிடைக்கும். அச்சொல்லைப் பெயராகக் கொண்டவர் யார்?

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

## கருத்து விளக்கப்படம்

# உலகக் குடும்ப நாள்



கருப்பொருள்:

குடும்பங்களும் புதிய தொழில்நுட்பங்களும்

நிகழ்வுகள்

- ❖ பாடல் நிகழ்ச்சி
- ❖ நடன நிகழ்ச்சி
- ❖ பேச்சுப் போட்டி
- ❖ கட்டுரைப் போட்டி

முன்பதிவு செய்ய இறுதி நாள்: மே 13

நாள்: 15.05.2023

நேரம் மாலை 5.00

இடம்: கலைவாணர் அரங்கம், சென்னை.

அனுமதி இலவசம்,

அனைவரும் வருக!

## வினாக்கள்

1. உலகக் குடும்ப நாள் எப்போது கொண்டாடப்படுகிறது?
2. நிகழ்ச்சி நடைபெறும் அரங்கத்தின் பெயர் என்ன?
3. கொண்டாட்டத்தின் நிகழ்வுகளைக் கூறுக.
4. முன்பதிவு செய்ய வேண்டிய இறுதி நாளைக் குறிப்பிடுக.
5. உலகக் குடும்ப நாளின் கருப்பொருள் என்ன?

## சுவைச்செய்தி

பழங்கால உலக அதிசயங்களுள் ஒன்று பிரமிடுகள். நைல் நதிக்கரை நாகரிகத்தில் மிகச்சிறப்பான இடம் இவற்றிற்கு உண்டு. எகிப்தில் கிஸா நகரிலுள்ள பெரிய பிரமிட் சுமார் 481.4 அடி உயரமானது. மிகப்பெரிய எடை உடைய கற்களைப் பிரமிடின் உச்சிக்கு எப்படிக் கொண்டு சென்றார்கள் என்பது இன்று வரை வியப்பாகவே உள்ளது. இது உலகின் வியக்கத்தக்க கட்டட அமைப்பாக உள்ளது.



பிரமிடுகள்

## 17.5 கேட்டல் கருத்தறிதல்

### மனிதநேயம்

திருவூர் என்னும் சிற்றூரில் மருத்துவர் ஒருவர் இருந்தார். அவர்மீது ஊரில் உள்ளோர் மிகவும் மதிப்பு வைத்திருந்தனர். ஏனெனில், தம்மிடம் மருத்துவம் பார்த்துக் கொள்பவர்கள் வசதி இல்லாதவர்களாக இருந்தால் அவர்களிடம் பணம் எதுவும் கேட்க மாட்டார். வசதி படைத்தவர்களிடமே பணம் கேட்டு வாங்குவார். ஒருநாள் இரவு பத்து மணிக்கு அவருடைய வீட்டுக்கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்தார் மருத்துவர். அங்கு முதியவர் ஒருவரும் இளைஞன் ஒருவனும் நின்றிருந்தனர். இளைஞன் மிகவும் பதற்றத்துடன், "ஐயா, என் மனைவிக்கு உடல்நலமில்லை. உங்களை அழைத்துப்போக வண்டிகூட இருக்கிறது. எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை. உடனே வந்து மருத்துவம் செய்யுங்கள்" என்று கூறினான். மருத்துவர் முதியவரைப் பார்த்தார். இப்போது முதியவர், மருத்துவரைப் பார்த்து, "ஐயா, என் பேரனுக்கு உடல்நலமில்லை. என்னிடம் செலவு செய்யப் பணமில்லை. அதனால்தான், இரண்டு நாளாக உங்களிடம் எப்படி வருவதென்று தயங்கினேன். ஆனால், எப்படியாவது உங்களைப் பார்க்க நினைத்து இங்கு வந்தேன்" என்றார்.

இருவர் கூறியதையும் கேட்ட மருத்துவர், இளைஞனைப் பார்த்து, "தம்பி, எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்கிறாய். வண்டிகூட வைத்திருக்கிறாய். அதனால், பக்கத்து ஊரில் ஒரு மருத்துவர் இருக்கிறார். அவர் பணம் வாங்காமல் மருத்துவம் பார்க்க மாட்டார். அதனால், உன்னிடம் வண்டி இருப்பதால் காலத்தை வீணாக்காமல் உடனே அவரிடம் செல். உன் மனைவிக்கு மருத்துவ உதவி கிடைக்கச் செய். இந்த முதியவரிடம் பொருள் இல்லை. நானும் இல்லாதவர்களிடம் பணம் வாங்குவதில்லை. நான் இவருடன் செல்கிறேன். நீயும் புறப்படு" என்று சொல்லிவிட்டு முதியவருடன் சென்றார் மருத்துவர். ஏழைகளின் கண்களுக்கு அவர் மருத்துவராக மட்டுமன்றி மனிதநேயம் மிக்க மனிதராகவும் தெரிந்தார்.

### வினாக்கள்

1. கதை நிகழ்வு நடைபெற்ற ஊரின் பெயர் என்ன?
2. ஊர்மக்கள், மருத்துவர்மீது மிகுந்த மதிப்பு வைத்திருக்கக் காரணம் என்ன?
3. மருத்துவரைப் பார்க்க வந்த இளைஞன் என்ன கூறினான்?
4. மருத்துவர் ஏன் முதியவருக்கு உதவ நினைத்தார்?
5. மருத்துவரிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பண்பு எது?

## 17.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 17.7 செந்தமிழ்ச்செல்வம்

### நல்வழி

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்ஆறு
ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து.

– (பாடல் - 9)

– ஔவையார்

(அடி - பாதம்; நல்கூர்ந்தார் – வறுமையுற்றார்)

**பொருள்:**

ஆறு, தன்னிடத்தே நீர் வற்றி மணல் சூடான காலத்திலும், ஊறுகின்ற நீரை உலகோர்க்குத் தந்து உதவும். அதுபோல, வளமிக்க குடும்பத்தில் பிறந்தவர்கள் வறுமை நிலை அடைந்தாலும், தம்மை நாடி வருபவர்க்கு இல்லை என்று கூறாமல் தம்மால் இயன்ற அளவிற்கு உதவுவார்கள்.

**பழமொழி**

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

பண்டைக்கால மனிதர்களின் வரலாற்றை அறிவதற்கு அவர்கள் விட்டுச் சென்ற பொருள்கள் சான்றாக உள்ளன. இவற்றை ஆய்வு செய்து அறிவியல் முறைப்படி நிறுவுவதே தொல்லியல் ஆய்வாகும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. பண்பாடு
2. அகழாய்வு
3. அருங்காட்சியகம்

## 17.8 மொழிபெயர்ப்போம்

Thamirabarani River originates from the Pothigai hills of western ghats and flows through Tirunelveli and Thoothukudi districts of Tamilnadu.

________________________________________

________________________________________

## 17.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. அகழாய்வு | – | Excavation |
| 2. தொழில்நுட்பம் | – | Technology |
| 3. தொன்மை | – | Antiquity |
| 4. ஆற்றங்கரை | – | River bank |
| 5. கல்வெட்டு | – | Inscription |
| 6. தொல்பொருள்கள் | – | Antiquities |
| 7. அருங்காட்சியகம் | – | Museum |
| 8. கண்காணிப்பாளர் | – | Supervisor |
| 9. முதுமக்கள் தாழி | – | Burial urn |
| 10. மட்பாண்டங்கள் | – | Mud vessels |
| 11. வெண்கலம் | – | Bronze |
| 12. பழக்கவழக்கம் | – | Habits |
| 13. பொருளாதாரம் | – | Economics |
| 14. பீட்டா பகுப்பாய்வு ஆய்வகம் | – | Beta Analytical Laboratory |

## 17.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் படத்திற்குப் பொருத்தமாகக் கொடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு தொடர்களை உருவாக்குக.**

(நூல்கள் - அனுமதி - பதிவு - விற்பனை - சலுகை)




## 17.11 உயர்நிலைத் திறன்

**கீழ்க்காணும் குறிப்புகளை விரிவாக்கிச் செய்தித்தாளில் வெளியிடுவதற்கு ஏற்ப, செய்தி உருவாக்குக.**

பள்ளியில் நடைபெற்ற கலை, பண்பாட்டு நிகழ்ச்சி- இரண்டு நாள் – மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் – கைவினைப் பொருள்கள் காட்சிப்படுத்துதல் – பன்னாட்டுப் பண்பாட்டை விளக்கும் காணொலிகள் – அறுசுவை விருந்து – சிறப்பு விருந்தினர் வாழ்த்துரை – விழா நிறைவு.

## 17.12 செயல்திட்டம்

உங்கள் ஊருக்கு அருகிலுள்ள அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டுப் பழங்காலப் பொருள்கள் பற்றிய படத்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.

## 18.1 பேசுவோம்

பாடம்

18



## கலந்துரையாடுவோம்

தமிழர்களின் பண்பாடு மற்றும் பழக்கவழக்கங்கள் குறித்து நீங்கள் அறிந்தவற்றை வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 18.2 படிப்போம்

# கொடைப்பண்பு
# (வில்லுப்பாட்டு வடிவம்)

தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லினில் பாட - ஆமாம்
வில்லினில் பாட
வந்தருள்வாய் தமிழ்மகளே...
தானத் தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லினில் பாட - ஆமாம்
வில்லினில் பாட
வந்தருள்வாய் தமிழ்மகளே...
வந்தருள்வாய் தமிழ்மகளே

**குழு** : அண்ணே! இன்னைக்கு என்னண்ணே தெரிஞ்சுக்கப் போறோம்?

**தலைவர்** : இன்னைக்குத் தமிழ் மன்னர்களின் கொடைச்சிறப்பைத் தெரிஞ்சுக்கப் போகிறோம்.

**குழு** : அது சரிங்கண்ணே. கொடை, கொடை அப்படின்னு சொல்றீங்களே? அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

**தலைவர்** : சொல்றேன் கேளுங்க. பொருள் உள்ளவங்க பொருள் இல்லாதவங்களுக்குக் கொடுக்கறதுதான் கொடை.

**குழு** : அடடே, அப்படியாங்கண்ணே!

**தலைவர்** : ஆமாமா! புறநானூறுல கூட "செல்வத்தின் பயனே ஈதல்" அப்படின்னு சொல்லியிருக்காங்க. சரி, சரி, நாம இப்ப கொடையில் சிறந்து விளங்கிய வள்ளல்களைப் பற்றிப் பாடலாமா?

**குழு** : ஓ, பாடலாம் அண்ணே.

**தலைவர்** : கதை கேளு கதை கேளு
கடையெழு வள்ளல்களின் கதை கேளு
கொடையில் சிறந்து விளங்கிய
குறுநில மன்னர்களின் கதை கேளு

# கொடைப்பண்பு

## வில்லுப்பாட்டு

வேலன் இன்னிசைக் குழுவினர்
ஆதனூர், விளாத்திக்குளம்.



**குழு** : ஒஹோ, அப்படியா அண்ணே!

**தலைவர்** : ஆமா. பாரின்னு ஒரு வள்ளல். அவர் என்ன செய்தார் தெரியுமா? முல்லைக்கொடிக்குத் தன்னோட தேரையே கொடுத்தாரு.

**குழு** : அட, முல்லைக்கொடிக்கே தேரைக் கொடுத்தாரா? எப்படிண்ணே?

**தலைவர்** : அட, ஆமாங்க. பாரி வள்ளலுக்கு அவ்வளவு இரக்கக் குணம். அவரு தேர்ல ஒருநாள் நகர்வலம் போனாராம். அப்போ, ஒரு முல்லைக்கொடி படருவதற்கு எதுவுமில்லாம தரையில் படர்ந்து இருந்ததாம். அதைப் பார்த்ததும் அவரு மனம் வருந்தினாராம். உடனே தன்னோட தேரை முல்லைக்குப் படரக் கொடுத்துவிட்டு, அரண்மனைக்கு நடந்தே சென்றாராம்.

**குழு** : அட, பாரி வள்ளல் பெரிய ஆளா இருப்பார்போல. அடுத்ததா, பேகனைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கண்ணே.

**தலைவர்** : சொல்றேன் தம்பி, நல்லா கேட்டுக்கங்க. ஒரு மயிலு தன்னோட தோகைய விரிச்சு ஆடிக்கிட்டு இருந்ததாம். அதைப் பார்த்த பேகன் என்ன நினைச்சாரு தெரியுமா? அடடா! இந்த மயிலு குளிரால நடுங்குதே, என்ன செய்யலாம்னு

யோசிச்சு, உடனே தம் உடல்மேல போர்த்தியிருந்த போர்வையை எடுத்து, மயிலுக்குப் போர்த்தினாராம்.

குழு : ஓஹோ! அப்படிப்பட்டவரா, அந்தப் பேகன்?

தலைவர் : ஆமாங்க. இவரும் பாரியைப்போலத்தான். தம்மை நாடி வந்தவர்களுக்கு மட்டுமல்லாம, ஐந்தறிவு உயிர்களுக்குக்கூட நல்லது செஞ்சிருக்காரு.

குழு : ஓஹோ! மற்றவர்களைப் பற்றியும் சொல்லுங்க, தெரிஞ்சுக்கிறோம்.

தலைவர் : ஓ! தெரிஞ்சுக்கலாமே. ஆனா, இன்னொரு நாள் சொல்றேன். அதனால நேரம் கருதி இப்ப விடைபெறுவோம்.

வாழிய, பல்லாண்டுக் காலம்!

வாழிய, வாழிய, வாழியவே!

வாழிய, வாழிய, வாழியவே!

## அறிந்துகொள்வோம்

**வில்லுப்பாட்டு**

**தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்று வில்லுப்பாட்டு. வில்லினைப் பயன்படுத்திப் பாடல் வழியாகக் கதை கூறுவதால் வில்லுப்பாட்டு எனப்படுகிறது.**

## பொருள் அறிவோம்

1. இரத்தல் - யாசித்தல்
2. ஈதல் - கொடுத்தல்
3. இரக்கம் - பரிவு
4. நகர்வலம் - ஊரைச் சுற்றி வருதல்
5. வருந்துதல் - துன்பப்படுதல்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. கொடை என்பதன் பொருள் யாது?
2. 'செல்வத்தின் பயனே ஈதல்' என்பதன் பொருள் யாது?
3. முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல் யார்?
4. பேகனின் இரக்கப் பண்பை வெளிப்படுத்திய நிகழ்வை எழுதுக.
5. வில்லுப்பாட்டு என்றால் என்ன?

### ஆ) கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

**(முல்லைக்கொடி, கொடுத்தல், வில்லுப்பாட்டு, பேகன்)**

1. நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்று ________________.
2. ஈதல் என்பதன் பொருள் ________________.
3. பாரி ________________ படர்வதற்குத் தன் தேரைக் கொடுத்தார்.
4. மயிலுக்குப் போர்வை தந்த வள்ளல் ________________.

### இ) சேர்த்து எழுதுக.

1. கொடை + சிறப்பு = ________________
2. புறம் + நானூறு = ________________
3. உயிர் + இரக்கம் = ________________
4. சங்கம் + இலக்கியம் = ________________
5. பல + ஆண்டு = ________________

### ஈ) பிரித்து எழுதுக.

1. வில்லுப்பாட்டு = ________________ + ________________
2. வந்தருள்வாய் = ________________ + ________________
3. மனநிறைவு = ________________ + ________________
4. இரக்கக்குணம் = ________________ + ________________
5. ஐந்தறிவு = ________________ + ________________

### உ) பொருத்துக.

| பேச்சுவழக்குச் சொற்கள் | – | எழுத்துவழக்குச் சொற்கள் |
|---|---|---|
| 1. இன்னைக்கு | - | போகிறோம் |
| 2. சொல்றேன் | - | இருக்கவேண்டும் |
| 3. சொல்லுது | - | இன்றைக்கு |
| 4. போறோம் | - | சொல்கிறேன் |
| 5. இருக்கணும் | - | சொல்கிறது |

## 18.3 தெரிந்துகொள்வோம்

# தெரிநிலை வினையெச்சம்

ஒரு வினையெச்சத் தொடரில் காலத்தையும் செயலையும் உணர்த்தி நின்று, ஒரு வினைமுற்றினைக் கொண்டு முடிவுறும் எச்சவினைச்சொல் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

**வினையெச்ச வகைகள்**

- உடன்பாட்டு வினையெச்சம்
- எதிர்மறை வினையெச்சம்

# உடன்பாட்டு வினையெச்சம்



அழகன் **எழுதிப்** பார்த்தான்.



மான் **துள்ளிக்** குதித்தது.



மாலதி **வரைந்து** பார்த்தாள்.



மாணவர்கள் **விளையாடி** மகிழ்ந்தனர்.



யானைகள் **நடந்து** சென்றன.

# எதிர்மறை வினையெச்சம்



இனியா கொடுத்த உணவை,
நாய்க்குட்டி **உண்ணாமல்** சென்றது.

கண்ணன் ஊதல் ஒலி கேட்டும்
**ஓடாது** இருந்தான்.





யானையைக் கண்ட புலி
**அசையாது** இருந்தது.

கந்தன் பாம்பைக் கண்டும்
**அஞ்சாது** சென்றான்.



## பயிற்சிகள்

**அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்திற்குப் பொருத்தமான எதிர்மறை வினையெச்சத் தொடர்களை எழுதுக.**





1. வரையாது இருந்தான்

2. ______________________





3. ______________________

4. ______________________



5. ______________________

ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்திற்குப் பொருத்தமான உடன்பாட்டு வினையெச்சத் தொடர்களை எழுதுக.



1. ______________________________



2. ______________________________



3. ______________________________



4. ______________________________

## 18.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | | 2 | |
| | | | | 4 |
| | | 3 | | |
| | | | 5 | |
| | 6 | | 7 | |
| 8 | | | | 9 |

| **இடமிருந்து வலம்** | **வலமிருந்து இடம்** |
|---|---|
| 1. முல்லைக்குத் தேர் தந்த வள்ளல்<br>2. வில் வித்தையில் சிறந்த வள்ளல்<br>7. மீன் பிடிக்க உதவும் பொருள்<br>8. ஈகைச் சிறப்பைக் குறிக்கும் சொல் | 5. இனிப்பு, கசப்பு என்பனவற்றைக் குறிக்கும் சொல்<br>9. உலகத்தைக் குறிக்கும் ஒரு சொல் |
| **மேலிருந்து கீழ்** | **கீழிருந்து மேல்** |
| 1. பாடலைக் குறிக்கும் சொல்<br>3. அதியமானிடமிருந்து நெல்லிக்கனி பெற்றவர்<br>6. வினா கேட்டால், இது கிடைக்கும். | 4. கடையெழு வள்ளல்களுள் இவரும் ஒருவர்<br>9. முல்லையும் குறிஞ்சியும் வளம் குறைந்தால் உருவாகும் நிலம் |

### தகவல்துளி

பிரான்ஸ் நாட்டிற்கும் ஆஸ்திரிய நாட்டிற்கும் இடையே போர் நடைபெற்றது. போரில் இரு நாட்டைச் சேர்ந்த வீரர் பலர் உயிர் துறந்தனர். பல்லாயிரக்கணக்கான வீரர்கள் காயமடைந்து துன்பப்பட்டனர். அவர்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் கிடைக்கவில்லை. வீரர்களுக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு, அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்க ஒரு சங்கம் உருவானது. போர் நடைபெறும் காலங்களில் அந்தச் சங்கத்தின் பணி இன்றியமையாததாக இருந்தது. அதுதான், 'செஞ்சிலுவைச் சங்கம்' (Red Cross Society). அச்சங்கம் 1919ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.



## 18.5 கேட்டல் கருத்தறிதல்

### உழைப்பே சிறந்த செல்வம்

பணக்காரர் ஒருவர் வெளியூருக்குச் சென்றார். இரவு நேரமாகிவிட்டதால், தங்கும் விடுதி ஒன்றில் ஓய்வெடுத்தார். சிறிது நேரத்திற்குப் பின், அவருக்குத் திடீரென விழிப்பு வந்தது. அப்போது, தமக்கு அருகில் படுத்திருந்த ஒருவர், தம் காதிலிருந்த விலையுயர்ந்த கடுக்கனைக் கழற்றுவதை அவர் கண்டார். ஆயினும், அந்தப் பணக்காரர் ஒன்றும் தெரியாததுபோல் கண்களை மூடிக்கொண்டிருந்தார். இப்போது, அந்த ஆள், தம்முடைய மற்றொரு காதிலிருந்து கடுக்கனைக் கழற்றுவதற்கு வசதியாக அந்தப் பணக்காரர் மறுபக்கமாகத் திரும்பிப் படுத்தார். அந்த ஆளும் இதைத்தானே எதிர்பார்த்தோம் என்பதுபோல, பணக்காரரின் இன்னொரு கடுக்கனையும் கழற்றி, இரண்டையும் தம் காதில் அணிந்துகொண்டார்.

மறுநாள், பணக்காரர் தம் ஊருக்குப் புறப்பட ஆயத்தமானார். அப்போது, காவலர் இருவர் அவரைத் தேடி வந்தனர். அவர்களுடன் கைகளில் விலங்கிட்ட நிலையில் நேற்று காதணிகளைக் களவாடியவரும் இருந்தார். காவலர்கள், பணக்காரரைப் பார்த்து, 'ஐயா, இந்தக் காதணிகள் உங்களுடையதா எனப் பாருங்கள்' என்று கேட்டனர். அவற்றைப் பார்த்த பணக்காரர் 'காதணிகள் என்னுடையவைதாம். அவற்றை நான் இவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டேனே' என்றார். 'அப்படியா, தவறு செய்துவிட்டோம். எங்களை மன்னித்துவிடுங்கள்' என்று கூறிய காவலர்கள் அந்த ஆளின் கைவிலங்கை எடுத்துவிட்டு, அவரை அங்கேயே விட்டுச்சென்றனர். அந்த ஆள், பணக்காரரின் கைகளைப் பிடித்துக்கொண்டு 'ஐயா, என்னை மன்னித்து விடுங்கள். நான் திருடினேன் என்று தெரிந்தும் என்னைக் காட்டிக்கொடுக்காமல் இருந்தீர்கள். உங்களுடைய நல்லெண்ணத்தைப் புரிந்துகொள்ளாமல், இந்தப் பொருளைத் திருடிவிட்டேனே' என்று கூறினார். 'பரவாயில்லை. இதனை இப்போது நான் இழந்தாலும் மீண்டும் உழைத்துப் பெற்றுக்கொள்வேன். உழைப்பினால் கிடைக்கும் செல்வத்திற்கு ஈடுஇணையில்லை. இந்தப் பொருளை விற்றால், நீ சில நாள் வசதியாக வாழலாம். அதன் பிறகு என்ன செய்வாய்? மீண்டும் இதுபோல் பிறரிடமிருந்து எதையாவது கவர வேண்டும் எனத்தானே நினைப்பாய்? அதனால், இந்தப் பொருளை மூலதனமாகக் கொண்டு ஏதாவது வியாபாரம் செய்து பிழைத்துக்கொள். காலம் முழுதும் மனநிறைவோடு வாழலாம்' என்று பணக்காரர் கூற, அந்த நபர் அப்படியே செய்வேன் என்று உறுதி அளித்தார்.

## வினாக்கள்

1. பணக்காரர் எங்குச் சென்றார்?
2. பணக்காரர் எதற்கு ஆயத்தமானார்?
3. காவலர்கள், பணக்காரரிடம் என்ன கேட்டனர்?
4. காதணி பற்றிக் கேட்ட காவலர்களிடம் பணக்காரர் என்ன கூறினார்?
5. காதணிகள் திருடியவரைப் பணக்காரர் எவ்வாறு திருத்தினார்?

## 18.6 படம் பார்த்துக் கருத்து கூறல்




## 18.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

- (குறள்-105)
- திருவள்ளுவர்

(வரைத்தன்று – அளவைப் பொருத்தது அன்று;
சால்பு – பண்பு)

பொருள்:

உதவி என்பது செய்யப்படும் அளவைப் பொருத்தது அன்று. அந்த உதவியினைப் பெற்றுக் கொண்டவரின் பண்பைப் பொருத்தே அதன் அளவு அமையும்.

பழமொழி

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. வள்ளல் அதியமான் ஔவையாருக்கு நெல்லிக்கனி தந்தார்.
2. ஓரி என்னும் வள்ளல் வில்லாற்றலில் சிறந்து விளங்கியதால் வல்வில் ஓரி என அழைக்கப்பட்டார்.
3. பாரி என்னும் வள்ளல் பறம்பு மலையை ஆட்சி செய்தார். அவருக்கு அங்கவை, சங்கவை என மகள்கள் இருவர் இருந்தனர்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. கொடை
2. புகழ்
3. செல்வம்
4. உழைப்பு

## 18.8 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. நாட்டுப்புறக்கலை | - | Folk art |
| 2. வில்லுப்பாட்டு | - | Bow song |
| 3. கொடை | - | Gift |
| 4. மனநிறைவு | - | Contentment |
| 5. எதிர்பார்ப்பு | - | Expectation |
| 6. புகழ் | - | Fame |
| 7. செல்வம் | - | Wealth |
| 8. தேர் | - | Chariot |
| 9. இரக்கம் | - | Kindness |
| 10. அரண்மனை | - | Palace |

## 18.9 மொழிபெயர்ப்போம்

பாரி என்னும் மன்னன், வீரத்திலே சிறந்தவன்; பண்பிலே நிறைந்தவன்; எல்லாவற்றிற்கும் மேலாகக் கொடையிலே இணையற்றவன். அவன் தன்னை நாடி வருபவர்களுக்கு உணவு தருவான்; உடை தருவான்; பொருள் தருவான்; ஓர் ஊர் முழுவதையும் புலவருக்கு அளித்து அதனால் மனநிறைவு கொள்வான்.

## 18.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் பாடலைத் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.**

உதவி செய்தே வாழ்ந்திடுவோம்

உள்ளம் மகிழ்ந்தே கொடுத்திடுவோம்

_______________________

_______________________

_______________________

_______________________

_______________________

______________ மகிழ்ந்திடுவோம்

## 18.11 உயர்நிலைத்திறன்

**பின்வரும் படக்காட்சிக்குப் பொருத்தமாக உரையாடல் உருவாக்குக.**



## 18.12 செயல்திட்டம்

கடையெழு வள்ளல்களுள் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றைக் காணொலிக் காட்சியாக உருவாக்கி வருக.

பாடம்

# 19

## 19.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

நீங்கள் புதிதாக ஒன்றைக் கண்டுபிடிக்க முயன்றபோது ஏற்பட்ட சந்தேகங்கள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 19.2 படிப்போம்

# அறிவியல் புனைகதை

**குறிப்பு:** கி. பி. 2147 ஆம் ஆண்டில் நிகழும் கதை. செவ்வாய்க் கோள் குடியேற்றத்தில் பணிசெய்யும் ஒரு ரோபோ, தான் பணி செய்யும்போது இறந்துவிட்டதாகக் கனவு காண்கிறது. அந்தப் பின்னணியில் நடந்த நிகழ்வுகளின் சுருக்கப்பட்ட வடிவமே இக்கற்பனைச் சிறுகதை. இதனை எழுதியவர் சுஜாதா. இவர், அறிவியல் புனைகதை எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

கண்களைத் திறக்க முயற்சி செய்தேன், முடியவில்லை. யாரோ இறுக்கமாக அழுத்திப் பிடித்ததுபோல் இருந்தது. பலம் கொண்டு மெதுவாகத் திறந்து பார்த்தேன். குளிரூட்டப்பட்ட ஒரு கண்ணாடிப் பேழைக்குள் நான் கிடத்தப்பட்டிருந்தேன்.

அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ புறநகரிலுள்ள என் வீட்டின் பெரிய வரவேற்பறை அது. நேர்த்தியாக உடை அணிந்து பலர் நின்று கொண்டிருந்தார்கள். பக்கவாட்டில் தலை திருப்பிப் பார்த்தேன். மனைவி ஜோஷ்னாவும் மகள் காவ்யாவும் அழுதுகொண்டிருந்தனர். எனக்கு ஒன்றும் புரியவில்லை. என்னை எதற்கு இந்தக் கண்ணாடிப் பேழைக்குள் கிடத்தி இருக்கிறார்கள்?

நான் அவர்களை நோக்கி உரக்கக் கத்தினேன். "ஜோஷ்னா...ஜோஷ்னா..." "காவ்யா... காவ்யா..." அவர்கள் என் முகத்தைப் பார்த்து அழுதுகொண்டிருந்தார்களே தவிர... என் அசைவோ, குரலோ அவர்களுக்குக் கேட்கவே இல்லை. என்ன ஆயிற்று எனக்கு? கடைசியாக நிகழ்ந்ததை மெதுவாக மனத்திரைக்குக் கொண்டு வந்தேன்.

நான் அமெரிக்கா நாசா விண்வெளி நிறுவனத்தில் நுண்ணுயிரிப் பொறியியல் துறையின் தலைமை ஆராய்ச்சி மருத்துவர். தற்போதைய செயல்திட்டம் - மார்ஸ் ஓரியன் ஆர்கானிக் பயோ கேப்சூல்-ஹியூமன் காலனி X5. புவியிலிருந்து செவ்வாய்க் கோளுக்கு அனுப்பியிருக்கும் விண்வெளி ஆய்வு மையத்தில், இயற்கை விவசாயம் வளர்க்கும் நுண்ணுயிரிப் பொறியியல் குழுமத்தின் டெக்னாலஜி டைரக்டர் நான்.

நேற்று செய்த வேலை நினைவில் நிழலாடியது. மார்ஸ் தாவர ஆய்வு மையத்தின் பழுதடைந்த பயோ கேப்சூலை நானும் ஜேம்ஸ் டிராவிஸும் அண்டத்தில் மிதந்து சரிசெய்து கொண்டிருந்தோம். பணி வெற்றிகரமாக முடியும்போதுதான் அது நிகழ்ந்தது. ஒரு பிரகாச ஒளி எங்களுக்குப் பின்னே வெடித்துச் சிதறியது. எங்கள் இருவராலும் கமாண்ட் கேப்சூலுக்கு உள்ளே வர இயலவில்லை. வெடித்த ஒளிப்பிழம்பில் ஒரு சிறிய ஒளிக்கீற்றாய் எங்கள் உடல் குபுகுபுவெனப் பற்றி எரிய, அணு நொடியில் இருவரும் தொடர்பற்று, பிரபஞ்சத்தில் துகள்களாய்க் கரைந்தோம்.

இதுதான் என் கடைசி நினைவு. இப்போது புரிந்தது. நான் இறந்துவிட்டேன்.. சில நொடிகள் இருக்கும்... கண்ணாடிப் பேழையை யாரோ தட்டுவது போல் இருந்தது. நான் சிலிர்த்து மேல் நோக்கினேன். கருப்பு நிற சூட்டில் இருந்தார் ஒருவர். அவரது கருப்பு நிற சூட்டின் மார்புப் பகுதியில், கணினித்திரை ஓடிக்கொண்டிருக்க, கண் கண்ணாடிக்கு வெளியே நீர்த்திரையாய் கணினி எழுத்துகள் பச்சை நிறத்தில் நகர்ந்துகொண்டிருந்தன.

"நான் எமன். உங்களை அழைத்துச்செல்ல வந்திருக்கிறேன்" என்றார். நான் அவரைப் பின்தொடர ஆரம்பித்தேன். லேசர் ஒளிக்கதிர் போல் சிவப்பு நிறத்தில் ஏதோவொன்று என்னை அவருடன் பிணைத்திருந்தது. வீட்டு வாசலில் நின்றிருந்த இராணுவ வாகனத்தில் நான் பின்புறம் அமர, அவர் முன்னே அமர்ந்தார். கதவு தானே அடைத்துக்கொள்ள, வாகனம் திடீரென அசுரவேகம் எடுத்துக் காற்றில் கரைந்தது.

அடுத்த நொடி, வெள்ளைப் படலமென இருந்த ஒரு கோளின் ஏதோ ஒரு பகுதியில் அந்த வாகனம் நேராகத் தரை இறங்கியது. சில நொடியில், குறுக்காக வெட்டிய முட்டை வடிவில் ஒரு வாகனம் சப்தமின்றி நிற்க, இருவரும் தானாக உள்ளே அமர்த்தப்பட்டோம். உள்ளே எவருமில்லை. வாகனத்தின் பக்கவாட்டுச் சுவரெங்கும் ஒலியற்ற டிஜிட்டல் சமிக்ஞைகள். எமன் என் ஆட்காட்டி விரலை ஒரு பச்சை நிற ஒயருடன் பிணைக்க, வாகனம் தானாகக் கதவடைத்து, சப்தமின்றிக் கிளம்பியது. அடுத்த சில நொடிகளில், அந்த வாகனத்தின் உட்புறம் முழுவதும் கணினித் திரையாக மாறி இருந்தது. அதில் என் பால்யம் முதல், கடந்த நொடிவரை வாழ்ந்தது திரைப்படம்போல் ஓடியது.

எமன் அமைதியாக ஒரு டிஜிட்டல் தகட்டில் குறிப்பெடுக்க, திரை மறைந்தது. வாகனம் மௌனமாக நின்றது. கதவுகள் தானாகத் திறந்துகொண்டன, சில நொடியில், எனக்கும் எமனுக்கும் நடுவில் பாதரசமாய் ஒரு புதிய உருவம் கண்டேன். பயத்தின் உச்சத்தில் என் இருதயம் இரைச்சலிட, கால்கள் நடுங்கின. எமன் டிஜிட்டல் தகட்டை அதன் தலையின் பின்புறம் செருகினார். அடுத்த நொடி எதிரே இருந்த பெரிய திரையில் அவர்கள் உரையாடல் எந்திரமொழியில் ஓடத்துவங்கியது. பாதரசம் டிஜிட்டலில் பேசியது, "இவனின் கடந்த வாழ்க்கைக் குறிப்பை நம் கிரக மொழிக்கு மாற்ற முடியவில்லை." "பூமியில் உள்ளவன், அறிவியலில் நமக்கு மேல் போய்விட்டான்." "இவனை இப்போது தண்டிக்க முடியாது. திரும்ப அனுப்பிவிடு." BUT.. "YOU HAVE BEEN TERMINATED FOR MAINTAINING AN INCOMPETENT SYSTEM" - என்றது. எமன் அலற... பாதரசம் கரைந்தது. கூடவே, எமனும் சிறுசிறு துகள்களாய்க் கரைந்தார். என் உடல் மெதுவாக அதிரத்தொடங்க, சிறு புகையாய் நானும் மறைந்தேன். மின் அணு வருடம் #2147 | MARS SPACE MISSION COMMAND CENTER | ALASKA BASE CAMP. USA |

என் உடல் குப்பென வியர்த்திருந்தது. கட்டிலிலிருந்து போர்வையை விலக்கினேன். அப்போ... கண்டது கனவா? நெஞ்சு படபடத்தது. அறையின் மேல் கூரையைப் பார்த்தேன். நேரம் 4.13 AM | வெளி வெப்பம் - 47°F என லேசர் ஒளியில் பிரதிபலிக்க, கண்ணாடிக் கதவுக்கு வெளியே கடும் பனி பொழிந்து கொண்டிருந்தது. "You woke up so early today" என்ற சமிக்ஞை மின்னி மின்னி மறைந்தது. என் கழுத்தின் பக்கவாட்டில் பிணைத்திருத்த "Virtual Brain Scanner" இலிருந்து பதிவிறக்கம் செய்துமுடித்த சப்தம், பீப்.. பீப் ஒலியோடு மெலிதாகக் கேட்டது. கட்டிலிலிருந்து எழுந்து, எதிரிலிருந்த "DATA CENTER" அறையின் கணினி மேசை நோக்கினேன். நேற்று இரவு கழற்றிக் கணினியுடன் பிணைத்துவைத்த என் கபாலத்தின் கண்களில் பச்சைநிறம் காட்டியது.

"DATA CENTER" அறையின் கணினி மேசை நோக்கி நடந்தேன். கபாலம் பிணைத்திருந்த அகன்றதிரையில் "DATA ARCHIVE COMPLETED. REPLICATION SERVER UPLOAD IN PROGRESS.." எனக் காட்ட, கண்ட கனவு வெள்ளோட்டமாய் ஓடிக்கொண்டிருந்தது. "Virtual Brain Scanner" ஐ அணைத்தேன். ஒயர்களுடன் பிணைத்த கரத்தில் கபாலத்தைக் கரம்பற்றித் தலையற்ற உடலுடன் கண்ணாடி நோக்கி நடந்தேன்

## பொருள் அறிவோம்

1. பேழை - பெட்டி
2. அண்டம், - உலகம்
3. சப்தம் - ஒலி
4. பால்யம் - இளமைக்காலம்
5. கபாலம் - மண்டை ஓடு
6. கரம் - கை
7. பிணைத்திருந்தது - சேர்த்திருந்தது
8. பலம் - வலிமை
9. மௌனம் - அமைதி
10. பயம் - அச்சம்
11. மார்ஸ் கிரகம் - செவ்வாய்க்கோள்
12. சமிக்ஞை - குறிப்பு
13. நோக்கு - பார்
14. பொழிதல் - பெய்தல்
15. இரைச்சல் - சத்தம்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. அறிவியல் புனைகதை எந்த ஆண்டு நிகழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது?
2. அறிவியல் புனைகதையில் இடம்பெறும் கதைமாந்தர்கள் எப்படிப்பட்டவர்கள்?
3. நுண்ணுயிரிப் பொறியியல் துறையின் ஆராய்ச்சி மருத்துவருக்கு என்ன ஆயிற்று? அவர் ஏன் கண்ணாடிப்பேழைக்குள் இருந்தார்?
4. கண்ணாடிப் பேழைக்குள் இருந்த ஆராய்ச்சி மருத்துவரை அழைத்துச் சென்றவர் யார்?
5. பாதரச உருவம், ஆராய்ச்சி மருத்துவரைத் தண்டிக்கக்கூடாது என ஏன் கூறியது?
6. அறிவியல் புனைகதையைப் பற்றி நீங்கள் புரிந்துகொண்டதைச் சுருக்கமாகக் கூறுக.

### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக

1. அறிவியல் புனைகதை, ஒரு ரோபோ தன் கதையைக் கூறுவதுபோல் உள்ளது. (   )
2. பழுதடைந்த கேப்சூலைச் சரிசெய்யும்போது, ஆராய்ச்சி மருத்துவரும் அவருடன் பணி செய்தவரும் விபத்தில் சிக்கினர். (   )
3. எமன், ஆராய்ச்சி மருத்துவரைக் கப்பலில் அழைத்துச் சென்றார். (   )
4. ஆராய்ச்சி மருத்துவர் ரஷ்ய விண்வெளி மையத்தில் பணிபுரிந்தார். (   )

### இ) சேர்த்து எழுதுக.

1. உடை + அணிந்து - ____________________
2. மனம் + திரை - ____________________
3. ஒளி + கீற்று - ____________________
4. மின் + அணு - ____________________
5. நேற்று + இரவு - ____________________

## 19.3 மொழிக்கூறு

### வினைமுற்று

ஒரு செயல் முடிந்ததைக் குறிப்பது, வினைமுற்று. இது திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றைக் காட்டும்.




- உயர்திணை
- நிகழ்காலம்
- ஆண்பால்
- ஒருமை
- படர்க்கை

**வினைமுற்று இருவகைப்படும்.**

**வினைமுற்று**

- தெரிநிலை வினைமுற்று
- குறிப்பு வினைமுற்று

### தெரிநிலை வினைமுற்று

தெரிநிலை வினைமுற்று செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறினையும் வெளிப்படையாக உணர்த்தும்.


அப்பா பொம்மை செய்தார்

- **செய்பவர்** அப்பா
- **கருவி** மண்
- **நிலம்** வீடு
- **செயல்** பொம்மை செய்தல்
- **காலம்** இறந்தகாலம்
- **செய்பொருள்** பொம்மை

தெரிநிலை வினைமுற்று இருவகைப்படும்.

- தெரிநிலை வினைமுற்று
  - உடன்பாட்டு வினைமுற்று
  - எதிர்மறை வினைமுற்று

**உடன்பாட்டு வினைமுற்று**



கமலி புத்தகம் படிக்கிறாள்.

**எதிர்மறை வினைமுற்று**



கமலி புத்தகம் படிக்கவில்லை.

## பயிற்சிகள்

**அ) தெரிநிலை வினைமுற்றுச் சொற்களை எடுத்தெழுதுக.**

(நட, பாடினாள், ஓடு, எழுதுகிறான், பேசு, ஆடுவார்கள், படித்தேன், பறக்கிறது, மேயும்)

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________

**ஆ) கீழ்க்காணும் தொடர்களிலிருந்து திணை, பால், எண், காலம் ஆகியவற்றை எடுத்து எழுதுக.**

1. மாணவர்கள் விளையாட்டுத் திடலில் பந்து விளையாடுகின்றனர்.
2. சிட்டுக்குருவி மரக்கிளையில் கூடு கட்டியது.

| திணை | | பால் | எண் | காலம் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |

**இ) கீழ்க்காணும் தொடர்களைச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் பிரித்து எழுதுக.**

1. குயவன் பானை வனைந்தான்.
2. குயிலி கட்டுரை எழுதுகிறாள்.

| செய்பவர் | கருவி | நிலம் | செயல் | காலம் | செய்பொருள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

## 19.4 மொழியோடு விளையாடுவோம்

**விடுகதையைப் படித்து விடை கண்டறிக.**

1. இரவில் விரியும்; பகலில் சுருங்கும். அது என்ன?
2. பச்சை வீட்டிற்குச் சிவப்பு வாசல். அது என்ன?
3. செம்பு நிறைய சிவப்பு முத்து. அது என்ன?
4. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துகள். அவை என்ன?
5. கடல்நீரில் வளரும்; மழைநீரில் மடியும். அது என்ன?







## தகவல்துளி

விண்வெளி உடை என்பது சிறிய விண்கலம்போல் இருக்கும். சூரியக் கதிர்வீச்சிலிருந்தும் விண்வெளிப் பொருள்களிலிருந்தும் காக்கும் வகையில் இந்த உடை வடிவமைக்கப்பட்டு இருக்கும். இந்த விண்வெளி உடைக்குள் சுவாசிக்க உயிர்க்காற்று (ஆக்சிஜன்), குடிப்பதற்குத் தண்ணீர் ஆகியவை உண்டு. விண்வெளி நடை மேற்கொள்வதற்குப் பல மணி நேரத்துக்கு முன்பே இந்த ஆடையை விண்வெளி வீரர்கள் அணிந்துகொள்வார்கள்.



## 19.5 கேட்டல் கருத்தறிதல்

### அறிவியல் அறிஞர் ஜெகதீஸ் சந்திர போஸ்

இந்திய அறிவியல் அறிஞர் ஜெகதீஸ் சந்திர போஸ் ஒருமுறை இங்கிலாந்து சென்றிருந்தார். அவரது கண்டுபிடிப்புகளை நேரடியாகக் காண்பித்து விளக்க ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. தாவரங்கள் விலங்குகளைப் போலவே வலியை உணரும் தன்மை படைத்தவை என்பதே போஸின் முடிவு. அவற்றைப் பிடுங்கும்போது, அவை வலியால் துடிக்கின்றன என்பதையும் விஷம் கொடுக்கப்பட்டால், அவை துடிதுடித்து இறக்கின்றன என்பதையும் அவர் நேரில் செய்துகாட்ட விழைந்தார். அங்கு விஞ்ஞானிகள் உட்படப் பலர் கூடி இருந்தனர். போஸ் விஷம் நிரப்பப்பட்ட ஊசியை எடுத்து ஒரு தாவரத்தின் மீது செலுத்தினார். அப்போது, அவரது கண்டுபிடிப்பின்படி அத்தாவரம் துடிதுடித்திருக்க வேண்டும். ஆனால், ஒன்றுமே நிகழவில்லை. இதைப் பார்த்த அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர். போஸோ, தன் நிதானத்தை இழக்கவில்லை. யோசிக்க ஆரம்பித்தார். இந்த விஷம் தாவரத்தை ஒன்றும் செய்யவில்லை எனில், என்னையும் ஒன்றும் செய்யாது என்ற முடிவுக்கு வந்தார். அவர் அதே விஷத்தைத் தன்மீது ஏற்றுமாறு கூறினார். உடனே, அங்கு வந்திருந்தோருள் ஒருவன், 'தான் விஷத்திற்குப் பதில் அதே நிறத்திலுள்ள சாயத் தண்ணீரை வைத்துவிட்டேன்' என ஒப்புக்கொண்டான். அதன் பின்னர், போஸ் உண்மையான விஷத்தை எடுத்துத் தாவரத்தின் மீது செலுத்த அது துடிதுடித்து இறந்தது. அனைவரும் பார்த்து வியந்தனர். தன்னையே சோதனைக்குட்படுத்திக் கொள்ளவும் தயங்காத மேதையாக ஜெகதீஸ் சந்திர போஸ் விளங்கினார்.

### வினாக்கள்

1. ஜெகதீஸ் சந்திர போஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
2. ஜெகதீஸ் சந்திர போஸ், தமது கண்டுபிடிப்பை எந்த நாட்டில் நிகழ்த்தினார்?
3. ஜெகதீஸ் சந்திர போஸின் கண்டுபிடிப்பு யாது?
4. தாவரத்திற்கும் உயிர் உண்டு என்பதை ஜெகதீஸ் சந்திர போஸ் எவ்வாறு மெய்ப்பித்தார்?
5. தம்மையே சோதனைக்கு உட்படுத்தவும் ஜெகதீஸ் சந்திர போஸ் தயங்கவில்லை. ஏன்?

## 19.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 19.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து

- (குறள் -667)
- திருவள்ளுவர்

(எள்ளாமை - இகழாமை; அச்சாணி – வண்டியைத் தாங்கும் சிறிய ஆணி)

**பொருள்:**

உருளுகின்ற பெரிய தேர்க்கு அச்சிலிருந்து தாங்கும் சிறிய ஆணி போன்றவர்களும் உலகில் உள்ளனர். ஆகையால், ஒருவரது உருவத்தின் சிறுமையைக் கண்டு இகழக்கூடாது.

**பழமொழி**

கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.
2. இயற்கை வேளாண்மை முறைகளைக் கையாள வேண்டும்.
3. வீடுகளில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைக்க வேண்டும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. விண்வெளி ஆராய்ச்சி
2. அகன்ற திரை
3. செயல்திட்டம்
4. இயற்கை விவசாயம்

## 19.8 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. அறிவியல் புனைகதை | - | Science fiction |
| 2. கண்ணாடிப்பேழை | - | Glass box |
| 3. விண்வெளி ஆய்வு மையம் | - | Space Research Center |
| 4. நுண்ணுயிரிப் பொறியியல் | - | Micro biology Engineering |
| 5. செயல்திட்டம் | - | Project |
| 6. செவ்வாய்க்கோள் | - | Mars Planet |
| 7. கருப்பு நிற சூட் | - | Black colour Suit |
| 8. ஆட்காட்டி விரல் | - | Index finger |
| 9. பாதரசம் | - | Mercury |
| 10. மின்னணு வருடம் | - | Digital age |
| 11. லேசர் ஒளி | - | laser light |
| 12. தரவு மையம் | - | Data center |
| 13. வருடி | - | Scanner |

## 19.9 மொழிபெயர்ப்போம்

நீர்வாழ் தாவரங்கள் என்பவை நீரில் ஒரு பகுதி அல்லது முற்றிலும் மூழ்கி வாழும் தாவரங்கள் ஆகும். தாமரை, வாலீஸ்னீரியா முதலானவை சில நீர்வாழ் தாவரங்கள். இத்தாவரங்கள் கடல்நீர் அல்லது நன்னீரில் வாழ்கின்றன.

## 19.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் நுண்கதையைப் படித்து அதன் முடிவை மாற்றிக் கூறுக.**

### நரியும் சேவலும்

ஒரு நாள், ஒரு சேவலானது மண்மேட்டின்மீது நின்று கூவிக்கொண்டிருந்தது. அப்பொழுது, அங்கே நரி ஒன்று வந்தது. அது, சேவலைப் பார்த்து,"ஓ! சேவலே! உன்னுடைய முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா? உன்னைப்போன்ற முக அழகுடைய வேறொரு பறவையை நான் பார்த்ததே இல்லை. உனது குரலைப் போல இனிமையான குரலையும் நான் வேறெங்கும் கேட்டதில்லை." எனப் புகழ்ந்து பேசியது. நரி எதற்காக இவ்வாறு தன்னைப் புகழ்ந்து பேசுகிறது எனச் சேவல் எண்ணவில்லை. மேலும், நரி சேவலைப் பார்த்து,"நீ கண்ணை மூடிக் கொண்டு கூவும்பொழுது, மிகவும் இனிமையாக இருக்கும்" என்று கூறியது. சேவல், தன் கண்களை நன்றாக மூடிக்கொண்டு கூவியது. இதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நரி, திடீரென்று சேவலின் மேல் பாய்ந்து, அதனை வாயில் கவ்விக் கொண்டு விரைந்து ஓடியது.

## 19.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் படத்தைப் பார்த்து, விடையளிக்கும் வகையில் வினாக்கள் உருவாக்குக.**




## 19.12 செயல்திட்டம்

மரங்களும் விலங்குகளும் யார் தமக்குள் சிறந்தவர் எனப் பேசிக்கொள்வது போல், கற்பனைக் கதை எழுதி, அதனைக் காணொலியாகத் தயாரித்து வருக.

பாடம்
20

## 20.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

உங்கள் பகுதியில் நடைபெற்ற மருத்துவ முகாமில் கலந்துக்கொண்ட அனுபவம் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.

## 20.2 படிப்போம்

### உயிர் காக்கும் வங்கிகள்

**(மருத்துவர்களுடன் மாணவ, மாணவியர் கலந்துரையாடல்)**




**மாணவர்கள்** : வணக்கம். உங்களுடன் கலந்துரையாடுவதில் மகிழ்ச்சி. மருத்துவ உலகில் ஏற்பட்டுள்ள புதுமைகள் பற்றிச் சொல்லுங்கள்.

**மருத்துவர்கள்** : வணக்கம். மருத்துவ உலகில் ஏற்பட்டுள்ள புதுமைகளுள் குறிப்பிடத்தக்கவை உயிர் காக்கும் வங்கிகள்.

**மாணவர்கள்** : உயிர் காக்கும் வங்கிகளா? அப்படி என்றால் என்ன?

**மருத்துவர்கள்** : பொதுவாக, வங்கி என்பது நம்முடைய பணத்தையும் பொருளையும் சேமித்து வைக்கும் இடம். நமக்குத் தேவைப்படும்போது, அவற்றை எடுத்துப் பயன்படுத்தலாம். அதுபோல, உடல் உறுப்புகளைச் சேமித்து வைக்கும் இடமே உயிர் காக்கும் வங்கிகள். இவை, உயிருக்குப் போராடும் ஒருவருக்குத் தக்க நேரத்தில் உதவும்.

**மாணவர்கள்** : உண்மையிலேயே புதுமைதான். எந்தெந்த உறுப்புகளை இவ்வாறு சேமித்து வைக்கலாம்? அவற்றைப் பற்றி ஒவ்வொன்றாகச் சொல்லுங்கள்.

**கண்மருத்துவர்** : முதலில் கண் வங்கி பற்றிச் சொல்கிறேன். உலகின் முதல் கண் வங்கியை நியூயார்க்கில் 1944ஆம் ஆண்டு மருத்துவர் ஆர். டௌன்லி பேடன் என்பவர் தொடங்கினார். கண் வங்கியின் மூலம், கண்தானம் ஊக்குவிக்கப்படுகிறது. இதன்மூலம் பெறப்படும் கருவிழிகள் முறையாகப் பரிசோதிக்கப்படுகின்றன. பின்னர், இவை கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவருக்கு அனுப்பப்படுகின்றன. கருவிழி கூம்பல், விழி வெண்படலம், வடு போன்ற கண் திசுக்களும் இந்தக் கண் வங்கியில் தானமாகப் பெறப்படுகின்றன.

**மாணவர்கள்** : கண் வங்கி பற்றி அறிந்து கொண்டோம். இதுபோல, இரத்தத்தையும் சேமிப்பார்கள் என அறிந்துள்ளோம்.

**பொதுநல மருத்துவர்** : ஆம். இரத்தத்தைச் சேமிக்கும் வங்கியே இரத்த வங்கி. எதிர்பாராத விபத்துகள், நோய்கள், அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றின்போது நோயாளிகளுக்கு இரத்தம் தேவைப்படுகிறது. அவர்களுக்குத் தேவைப்படும் இரத்தத்தை இரத்த வங்கிகள் வழங்குகின்றன. 18 வயதிற்கு மேற்பட்ட, 50 கிலோ எடை கொண்ட, நல்ல உடல்நலத்துடன் இருக்கும் ஆண்களும் பெண்களும் இரத்த தானம் செய்யலாம். மேலும், இரத்த தானம் செய்பவர்கள் 6 மாதத்திற்கு ஒருமுறை தம் இரத்தத்தைத் தானமாக வழங்கலாம்.

**மாணவர்கள்** : இரத்த வங்கியின் மூலம் பெறப்படும் இரத்தம், உயிர் காக்க உதவுகிறது என்பதைப் புரிந்துகொண்டோம். அடுத்து எந்த வங்கியைப் பற்றிச் சொல்லப் போகிறீர்கள்?

**உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மருத்துவர்** : எலும்பு வங்கி பற்றிக் கூறுகிறேன். விபத்து, கிருமித்தொற்று, புற்றுநோய் காரணமாக எலும்புகள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட எலும்பை எடுத்துவிட்டு, அங்கு மாற்று எலும்பைப் பொருத்துவதே எலும்பு மாற்றுச் சிகிச்சை. இதற்கு எலும்பு வங்கி உதவுகிறது. இறந்தவர்கள், மூளைச்சாவு ஏற்பட்டவர்கள் மற்றும் விருப்பம் உள்ளவர்கள் முதலானோரிடமிருந்து எலும்புகள் தானமாகப் பெறப்படுகின்றன. அவ்வாறு பெறப்பட்ட எலும்புகள், எலும்பு வங்கியில் முறையாகப் பாதுகாக்கப்படுகின்றன.

**மாணவர்கள்** : எலும்பு வங்கியின் இன்றியமையாமையைத் தெரிந்துகொண்டோம். அடுத்த வங்கி பற்றிச் சொல்லுங்கள்.

**தோல் மாற்று அறுவை சிகிச்சை**

**மருத்துவர்** : மூளைச்சாவு, இயற்கை மரணம் அடைந்தவர்களின் உடலிலிருந்து தோல் தானமாகப் பெறப்படுகிறது. முதுகு, பின்னங்கால், பின்னந்தொடை ஆகிய உறுப்புப் பகுதிகளிலுள்ள தோல் சேகரிக்கப்படுகிறது. அதனைத் தோல் வங்கியில் உரிய முறைப்படி பாதுகாக்கின்றனர். தீ, அமிலம், மின்சாரம், மருந்து ஒவ்வாமை, ஆறாத புண் போன்றவற்றால் தோல் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இந்த வங்கியிலிருந்து தோலைப் பெற்றுச் சிகிச்சை அளிக்கின்றனர்.

**மாணவர்கள்** : உயிர் காக்கும் வங்கிகள் பற்றிய செய்திகளை நன்கு தெரிந்து கொண்டோம். எங்களுக்கு மிகவும் பயனுள்ளவையாக இருந்தன.

**மருத்துவர்** : உடல் உறுப்புத் தானம் பற்றிய விழிப்புணர்வும் உங்களுக்குத் தேவை. உடல் உறுப்புத் தானம் என்பது, ஒருவர் இறந்த பிறகு அவரது உடல் உறுப்புகளைத் தேவைப்படும் மற்றொருவருக்கு அளிப்பதாகும். இதனால் பல உயிர்கள் காப்பாற்றப்படும். 2005ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் ஆகஸ்ட் 13ஆம் நாள் உலக உடல் உறுப்புத் தான நாளாகக் கொண்டாடப்படுகிறது. மாணவர்களாகிய நீங்கள், உங்கள் பெற்றோர்க்கும் உறவினர்க்கும் உறுப்புத் தானத்தின் இன்றியமையாமையை எடுத்துக்கூற வேண்டும்.

**மாணவர்கள்** : நீங்கள் கூறியபடி, உயிர் காக்கும் வங்கிகள் பற்றியும் உறுப்புத் தானத்தின் தேவை பற்றியும் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவோம். மிக்க நன்றி.

## பொருள் அறிவோம்

1. வங்கி – பொருளைச் சேமிக்கும் இடம்
2. பரிசோதித்தல் – ஆய்வு செய்தல்
3. தானம் – கொடுத்து உதவுதல்
4. சிகிச்சை – மருத்துவம்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. உயிர்காக்கும் வங்கிகளின் பெயர்களை எழுதுக.
2. கண் வங்கி என்றால் என்ன?
3. இரத்த தானம் வழங்குவதற்கு என்னென்ன விதிமுறைகள் உள்ளன?
4. உடல் உறுப்புத் தானம் என்றால் என்ன?
5. உயிர்காக்கும் வங்கிகளுக்கு மாணவர்கள் எவ்வாறு உதவலாம்?

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இரத்த தானம் செய்வதற்கு உரிய வயது ______.

   அ) 18 ஆ) 21 இ) 20 ஈ) 25

2. முதல் கண் வங்கியைத் தொடங்கியவர்

   அ) எஸ். அகர்வால் ஆ) ஆர். டௌன்லி பேடன்
   இ) எம். வாசன் ஈ) ஆர். மேத்யு பேடன்

3. உடல் உறுப்பு தான நாள்

   அ) நவம்பர் 13 ஆ) டிசம்பர் 13 இ) ஆகஸ்ட் 13 ஈ) ஜனவரி 13

4. முதல் கண் வங்கி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது.

   அ) 1940 ஆ) 1942 இ) 1944 ஈ) 1946

5. இரத்த தானம் எத்தனை மாதங்களுக்கு ஒரு முறை வழங்கலாம்.

   அ) 6 ஆ) 4 இ) 2 ஈ) 8

### இ) சேர்த்து எழுதுக.

1. உடல் + உறுப்பு = ______
2. ஆண்டில் + இருந்து = ______
3. மருத்துவம் + உலகம் = ______
4. விழிப்பு + உணர்வு = ______
5. மூளை + சாவு = ______

### ஈ) பிரித்து எழுதுக.

1. கருவிழி = ______ + ______
2. வெண்படலம் = ______ + ______
3. கிருமித்தொற்று = ______ + ______

## 20.3 மொழிக்கூறு

### இரட்டுற மொழிதல்

**ஒரு சொல் / சொற்றொடர் இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல்.**



**கவின்** : என்னை அறிவில்லாதவன் என்று அண்ணன் சொன்னான், அப்பா.

**அப்பா** : சரியாகத்தான் சொல்லியிருக்கிறான்.

**கவின்** : என்னப்பா? நீங்களும் இப்படிச் சொல்கிறீர்கள்?

**அப்பா** : ஆமாம், கவின். நீ அறிவில் ஆதவன். அதாவது, அறிவில் சூரியனைப்போல ஒளி வீசுபவன். அதனால்தான், அண்ணன் அப்படிச் சொன்னான். புரிந்ததா?

**பேசுபவர்** : இலக்கிய மன்ற விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் விழாத் தலைவரை வருக வருக என வரவேற்கிறேன். அவர் எங்கும் எப்போதும் விழாத் தலைவர் எனக் கூறி என் உரையைத் தொடர்கிறேன்.





**ஒருவர்** : என்னாச்சு? ஏன் பின்தங்கிவிட்டீர்கள்?

**மற்றொருவர்** : முட்டாளுடன் நடந்ததால், பின்தங்க நேர்ந்தது.

**ஒருவர்** : என்ன ஐயா? என்னை முட்டாள் என்று சொல்கிறீரா?

**மற்றொருவர்** : அடடே, அப்படியெல்லாம் இல்லை. காலில் முள் தைத்துவிட்டது. அதனால், முள்தாளுடன் (முட்டாளுடன் – முள் தைத்த பாதத்துடன்) நடந்ததால், வலி மிகுந்து மெதுவாக நடக்கிறேன் என்று சொல்ல வந்தேன்.

## மேலும் சில சிலேடைச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. மாசம்பத்து | - | மாசம் | + | பத்து (பத்து மாதம்) |
| | - | மா | + | சம்பத்து (பெருஞ்செல்வம்) |
| 2. எட்டு | - | எட்டு (ஓர் எண்) | | |
| | - | எள் | + | து (எள்ளை உண்) |
| 3. அந்தமான் | - | அந்தமான் (ஒரு தீவு) | | |
| | - | அந்த | + | மான் (ஒரு விலங்கு) |
| 4. கம்பமா | - | கம்பு | + | மா (கம்பு மாவு) |
| | - | கம்பு | + | மா (கம்பத்தில் கட்டப்படும் விலங்கு (யானை)) |
| 5. மலைத்தேன் | - | மலை | + | தேன் (மலைப்பகுதியிலுள்ள தேன்) |
| | - | மலைத்தேன் (வியப்படைந்தேன்) | | |

## பயிற்சிகள்

### அ) பின்வரும் சொற்களுக்கு இருபொருள் தருக.

1. பலகை - அ) ________________, ஆ) ________________.
2. விழாத்தலைவர் - அ) ________________, ஆ) ________________.
3. செங்கல்பட்டு - அ) ________________, ஆ) ________________.
4. தாமரை - அ) ________________, ஆ) ________________.
5. அண்டங்காக்கை - அ) ________________, ஆ) ________________.

### ஆ) பின்வரும் தொடர்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**(நாடு, பெருங்காயம், அந்த மான், தங்கவீடு, மலைத்தேன்)**

1. வீடு பார்க்க வந்தவர், அங்கிருந்த ஒருவரிடம் இங்குத் ________________ கிடைக்குமா? என்று கேட்டார். அதற்கு மற்றவர், இல்லை. இங்குச் செங்கல்வீடுதான் உள்ளது என்றார்.
2. நாம் ஒவ்வொருவரும் நமது நாட்டை விரும்பவேண்டும். அதனால்தான், கவியரசர் கண்ணதாசன் "நாடு அதை ________________ நாடாவிட்டால் ஏது வீடு" என்று பாடினார்.
3. அப்பா, நீங்கள் வாங்கி வந்த தேன் மிகவும் சுவையாக இருந்தது. அதனைக் கண்டு நான் மிகவும் ________________.
4. காலில் என்ன ________________ என்றார் ஒருவர். மற்றவர், கல் தடுக்கி விழுந்ததால் ஏற்பட்டது இது என்றார்.
5. நான் அந்தமானுக்குச் சென்றேன். அங்கு ஒரு மானைக் கண்டேன். ________________ அழகாக இருந்தது.

## 20.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் இருதொடருக்கும் ஒரே சொல் விடையாக வரும். அதனைக் கண்டறிக.**

1. புல்லை மேய்வது எது?

   குளத்தில் பூப்பது எது?

2. காலைக்குப் பின் வருவது எது?

   மலர்களால் கட்டப்படுவது எது?

3. வீரர்கள் வீழ்வது எதனால்?

   சாம்பார் மணப்பது எதனால்?

4. வடக்கிலிருந்து வீசுவது எது?

   விரும்பாத மணத்தைத் தருவது எது?

5. வெண்ணிறப் பறவை எது?

   வெண்சோற்றைக் குறிப்பது எது?

### தகவல்துளி

**மருத்துவ உலகில் புதிய சாதனை**

அமெரிக்காவைச் சேர்ந்தவர் டேவிட் பென்னட் (David Bennett). இவர், இதய நோயால் பாதிக்கப்பட்டார். இவருக்கு மாற்று இதயம் பொருத்துவதற்கு மருத்துவர்கள் முயன்றனர். மனிதரின் இதயம் அவருக்குப் பொருந்தவில்லை. இறுதியில், மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயம் அவருக்குப் பொருத்தப்பட்டது. இந்த அறுவை சிகிச்சையை மேரிலாண்ட் பல்கலைக்கழக மருத்துவர்கள் செய்தனர்.

## கருத்து விளக்கப்படம்

மகளிர்
தினத்தை
முன்னிட்டு

விவேகானந்தா
அறக்கட்டளை

நடத்தும்



**இரத்தச்சோகை (Anemia) இலவச மருத்துவ மற்றும் விழிப்புணர்வு முகாம்**

நாள் : 12.03.2023, ஞாயிற்றுக்கிழமை,

இடம்: அண்ணா பல்கலைக்கழக வளாகம், சென்னை

**மருத்துவ முகாம்**

வரவேற்பறையில், காலை 9.00 முதல் மதியம் 12 மணி வரை

**விழிப்புணர்வு முகாம்**

அண்ணா பல்கலைக்கழக விளையாட்டுத் திடல் மதியம் 12.00 முதல் 1.00 மணி வரை

குறிப்பு: இரத்தச்சோகையைக் கண்டறியும் பரிசோதனை சிறப்பு சலுகையில் எடுக்கப்படும். தாய்மார்கள் தங்களது பருவ வயதைத் தொட்ட மகள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவிகளை அழைத்துவரவும்.

**அனுமதி இலவசம்**

### வினாக்கள்

1. விழிப்புணர்வு முகாம் எதனைப் பற்றியது?
2. விழிப்புணர்வு முகாமில் யார் யாரெல்லாம் பங்கேற்கலாம்?
3. விழிப்புணர்வு நடத்தப்படும் நாள் எது?
4. விழிப்புணர்வு எந்த நாளை முன்னிட்டு நடத்தப்படுகிறது?
5. எந்த நோயைப் பற்றி விழிப்புணர்வு முகாம் நடத்தப்படுகிறது?

## 20.5 கேட்டல் கருத்தறிதல்

### உடல்நலம் காப்போம்

நாம் சாப்பிடும்போது சில நேரங்களில் உணவானது உணவுக்குழாய்க்குப் போகாமல், காற்றுக் குழாய்க்குள் போய்விடும். இதனால் மூச்சுக்காற்று தடைபடும். இதுவே புரையேறுதல். இதனைத் தடுக்க நாம் பேசாமல் சாப்பிடவேண்டும். அவசர அவசரமாகவோ, தண்ணீர் குடிக்காமல் உண்பதாலோ விக்கல் ஏற்படுகிறது. விக்கலின் போது குரல்வளை நாண்கள் மூடுவதால் 'இக்கு' எனும் ஒலி ஏற்படுகிறது. ஒருமுறை மட்டுமோ, தொடர்ந்து பலமுறையோ விக்கல் ஏற்படலாம். ஏற்ற இறக்கங்களும் இடைவெளியும் பொதுவாக ஒரே அளவில் இருக்கும். பொதுவாக ஐந்து மணித்துளி மூச்சை ஆழமாக இழுத்து வெளியிட்டால் விக்கல் நின்றுவிடும். தொடர்ந்து விக்கல் ஏற்பட்டால் பொதுவாகச் சிறிது நேரம் கழிந்தபின் தானாகவே நின்றுவிடும். இருப்பினும் மக்கள் பொதுவாக தண்ணீர், பழச்சாறு குடித்தால் விக்கல் நின்றுவிடும் என்பது போன்ற சில தீர்வுகளை மேற்கொள்கின்றனர். இருப்பினும் சிலருக்கு அரிதாகச் சிலவேளைகளில் மருத்துவ உதவி தேவைப்படலாம்.

### வினாக்கள்

1. புரையேறுதல் என்றால் என்ன?
2. விக்கல் எப்படி உண்டாகிறது?
3. விக்கல் ஏற்பட்டால் அதை நிறுத்தும் வழிமுறைகள் யாவை?
4. புரையேறுதலைத் தடுக்க நாம் என்ன செய்ய வேண்டும்?
5. எத்தனை மணித்துளி மூச்சை ஆழமாக இழுத்து வெளியிட்டால் விக்கல் நின்றுவிடும்?

## 20.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 20.7 செந்தமிழ்ச்செல்வம்

### பதிற்றுப்பத்து

"........ மீன்தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள் ஊசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்........"

- (பாடல் -42)

- பரணர்

**பொருள்:**

சிச்சிலி என்னும் மீன்கொத்திப் பறவை, தன் நீண்ட, சிவந்த அலகைக் கீழ்நோக்கிச் சாய்த்து, மின்னலென நீருக்குள் மூழ்கி, மீனைப் பிடித்து, மீண்டும் மேல்நோக்கி எழும்புகிறது. இக்காட்சியானது, காயம்பட்ட வீரர் மார்பில் வெண்மையான ஊசியைக்கொண்டு, குருதியினுள் நுழைந்தும் மீண்டும் வெளியே வந்தும் தைப்பதைப்போல் உள்ளது.

இன்றைய மருத்துவத்தின் உயரிய நிலையான அறுவைச் சிகிச்சை முறைக்குத் தமிழர்கள் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளனர் என்னும் செய்தியை இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

பழமொழி
பல் போனால் சொல் போகும்.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

உயிர் காக்கும் வங்கிகள் பற்றி மாணவர்கள் அனைவரும் விழிப்புணர்வு பெற வேண்டும். அனைவரும் உறுப்புத் தானம் அளிக்க விருப்பத்துடன் முன்வர வேண்டும். அது சமுதாயத்திற்குப் பேருதவியாக அமையும். இதனால், பல உயிர்கள் காப்பாற்றப்படும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. அறுவைச் சிகிச்சை
2. உடல்நலம்
3. விழிப்புணர்வு

## 20.8 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. உடலுறுப்பு | - | Organ |
| 2. உறுப்புத் தானம் | - | Organ donation |
| 3. உறுப்புமாற்று அறுவை சிகிச்சை | - | Organ transplantation |
| 4. இரத்த வங்கி | - | Blood bank |
| 5. பரிசோதனை | - | Testing |
| 6. எலும்பு | - | Bone |
| 7. தோல் | - | Skin |
| 8. ஒவ்வாமை | - | Allergy |
| 9. மருத்துவ முகாம் | - | Medical camp |

## 20.9 மொழிபெயர்ப்போம்

Organ donation takes healthy organs and tissues from one person for transplantation into another. Experts say that the organs from one donor can save or help as many as 50 people. Organs you can donate include: Kidneys, heart, liver, pancreas, intestines, lungs etc.

______________________________

______________________________

## 20.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் கதையின் தொடக்கத்தைப் படித்துத் தொடர்ந்து எழுதுக.**

மீனாவும் மணிமொழியும் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்கள். இருவரும் சிறந்த தடகள வீரங்கனைகள். படிப்பிலும் சிறந்து விளங்கினார்கள். அன்று, பள்ளிகளுக்கு இடையே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. வெவ்வேறு பள்ளிகளிலிருந்து மாணவர்கள் பலர் கலந்து கொண்டார்கள். விளையாட்டுப் போட்டிகள் விறுவிறுப்பாக நடந்துகொண்டிருந்தன. தடகளப்போட்டியில் மீனாவும் மணிமொழியும் கலந்துகொண்டு சிறப்பாகச் செய்தனர். அப்போது, திடீரெனப் பரபரப்பு ஏற்பட்டது. தடகளப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர் ஒருவர் கீழே விழுந்ததால், அவருக்குக் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அவர் வலியால் கதறினார். அங்கு வந்த மீனா, ______________

______________________________

______________________________

______________________________

## 20.11 உயர்நிலைத்திறன்

**பின்வரும் கடிதத்தில் கோடிட்ட இடத்தை நிரப்பி, முழுமையாக்குக.**

(திருக்குறள், சிறப்பு நிகழ்வுகள், குடும்பத்தினரும், வலையொளி, கற்பனையாற்றல், ஓவியங்கள், கண்காட்சி)

15, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

**அன்புள்ள யாழினி,**

இங்கு நானும் என் குடும்பத்தாரும் நலம். அவ்வாறே, நீயும் உன் ____________ நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் தீராக்காதல் திருக்குறள் என்னும் தலைப்பில், அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ____________ நடைபெற்றது. மாணவர்கள் வரைந்த ____________ அங்குக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றைப் பார்த்து நான் மலைத்து நின்றேன். திருவள்ளுவரின் ____________ கருத்திற்கேற்ப மாணவர்களின் சிந்தனையில் ஓவியங்கள் புதுப்பொலிவு பெற்றிருந்தன. அவர்களின் ____________ பாராட்டும் வகையில் அமைந்திருந்தது. இத்துடன் அங்கு நடைபெற்ற கண்காட்சியின் ____________ இணைப்பை இணைத்துள்ளேன். அதனை நீயும் பார்த்து மகிழவேண்டும். இதுபோல, உங்கள் ஊரில் ஏதேனும் ____________ இருப்பின் அவற்றை எனக்குக் கடிதம் வாயிலாகத் தெரியப்படுத்து.

உன் அன்புத் தோழி,
மகிழினி

வலையொளி இணைப்பு: https://www.youtube.com/watch?v=EaaNNCfZ4wM

உறைமேல் முகவரி
ப. யாழினி,
சிங்கப்பூர் டிரைவ்,
சிங்கப்பூர்.

## 20.12 செயல்திட்டம்

உங்கள் பகுதியில் செயல்படும் உயிர் காக்கும் வங்கிகளுக்குச் சென்று, அவற்றைப் பார்வையிட்டு, செய்திகளைத் திரட்டி, தொகுப்பேடு உருவாக்குக.

பாடம்
# 21

## 21.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

கணினித் தொழில்நுட்பத்தில் தமிழ்மொழியின் வளர்ச்சி குறித்து உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 21.2 படிப்போம்

### இயற்கை மொழி ஆய்வு




மனிதன் பேசுவது இயற்கை மொழி. இம்மொழியைத் தான் வாழும் சூழலிலிருந்து பெறுகிறான். இதனைக்கொண்டு, தன் தேவைகளை நிறைவு செய்கிறான். இதன் அடிப்படையில் மொழிகற்றல், திறம்படக் கையாளுதல் ஆகியவை உற்றுநோக்கப்படுகின்றன. இவற்றை அறிந்துகொண்டு கணினிக்கு அளிக்கும் வழிமுறைகள் ஆராயப்படுகின்றன. இதனையே இயற்கை மொழி ஆய்வு எனக் கூறுகிறோம்.

ஒரு மொழியிலுள்ள மொழிக்கூறுகளை எளிமையாகப் புரிந்துகொள்ளவும் அம்மொழிக்கூறுகளைச் செயற்கையாக உருவாக்கவும் இயற்கை மொழி ஆய்வு உதவுகிறது. இதன் வாயிலாக, செயற்கை மொழித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அரிய மொழித் தொழில்நுட்பக் கருவிகள் உருவாக்கப்படுகின்றன.

தானாகச் செய்துமுடிக்கின்ற ஒரு கருவியை உருவாக்குவதே இயற்கை மொழி ஆய்வின் நோக்கமாகும். அதாவது மனிதன் செய்வதுபோலத் தானே பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய செயல்களை மேற்கொள்ளும் கணினியியல் மாதிரிகளை உருவாக்குதலாகும். இத்தகைய கணினியியல் மாதிரிகள் மனிதர்களுக்கும் கணினிக்கும் இடையே இருக்கின்ற தொடர்பியல் தடைகளை நீக்குகின்றன.

மனிதர்களால் செயற்கையாக உருவாக்கப்பட்ட மொழிகள் இயற்கை மொழியிலிருந்து வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, கணினியில் பயன்படுத்தும் நிரலாக்க மொழிகளான C, C++, JAVA, Perl, Python போன்றவை செயற்கை மொழிகளாகும்.

இரு இயற்கை மொழிகளுக்கிடையே பேச்சையோ நூலையோ கணினி மூலம் மொழிபெயர்ப்பது இயந்திர மொழிபெயர்ப்பு ஆகும். இது கணினி மொழியியலின் ஒரு பிரிவாகும். மூல நூலின் பொருளைக் கணினி மொழிக்கு மாற்றி, பின்னர் இலக்கு மொழியில் அதனை மீண்டும் மொழிபெயர்ப்பதே இயந்திர மொழிபெயர்ப்பாகும். மூலமொழிப் பனுவலைக் கணினி மொழிக்கு மாற்ற, அந்த மொழியின் கூறுகள் அனைத்தையும் அதாவது இலக்கணம், பொருண்மை, தொடர், மரபுத்தொடர் முதலானவற்றைப் பற்றி பகுப்பாய்வு செய்ய வேண்டும். அத்துடன் அம்மொழியின் பண்பாட்டுக் கூறுகளையும் அறிந்திருக்க வேண்டும்.

இன்றைய சூழலில் மொழியியல் ஆய்வுகள், கணினி அறிவியலுக்கு மிகவும் தேவைப்படுகின்றன. கணினியானது மொழியின் அமைப்பை ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் என்ற நிலைகளில் ஆய்வதற்கு உதவுகிறது. மேலும், மொழிக்கருவிகள் உருவாக்குவதற்கும் பயன்படுகின்றது. அகராதி தயாரிக்கும் மென்பொருள்களைப் பயன்படுத்தி மிக எளிதாக அகராதிகள் தயாரிக்கப்படுகின்றன.

கணினியின் உதவியால் மொழி கற்பது தற்போது இனிய அனுபவமாக மாறியுள்ளது. கற்றல் மென்பொருள்களைப் பயன்படுத்திக் குழந்தைகள் விளையாடிக் கொண்டே ஆர்வத்துடன் மொழியைக் கற்கின்றனர். உரைப்பகுதியைப் பேச்சாகவும் பேச்சை உரையாகவும் மாற்றும் மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கணினியின் பயன்பாட்டால் மொழிபெயர்ப்பு எளிய வேலையாக மாறியுள்ளது. வருங்காலத்தில் செல்பேசியில் ஒருவர் ஆங்கிலத்தில் பேசினால் அதனை எதிர்முனையில் இருப்பவர் தமிழில் கேட்க முடியும். நாளைய உலகம் கணினியின் கையில் என்பது உறுதியாகத் தெரிகிறது.

## பொருள் அறிவோம்

1. சூழல் – சுற்றுப்புறம்
2. நிறைவு – முழுமை
3. திறம்பட – மிகச்சிறப்பாக
4. கையாளுதல் – மேற்கொள்ளுதல்
5. பனுவல் – நூல்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. இயற்கை மொழி ஆய்வு என்றால் என்ன?
2. மனிதர்கள் பேசுவது எவ்வகை மொழி?
3. செயற்கை மொழிகளுக்கு எடுத்துக்காட்டு தருக.
4. இயற்கை மொழி ஆய்வின் நோக்கம் யாது?
5. இயந்திர மொழிபெயர்ப்பு என்றால் என்ன?
6. இயற்கை மொழி ஆய்வின் பயன்கள் குறித்து எழுதுக.

## ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக

1. மனிதன் பேசும் மொழியைச் செயற்கை மொழி என்கிறோம். ( )
2. அகராதிச் சொற்களைத் தயாரிக்க உருபனியல் பகுப்பாய்வு தேவை. ( )
3. கையெழுத்துச் செய்திகளைக் கணினி படித்து, சொல் வடிவங்களாக மாற்றுவதற்கு ஒளிவருடி உதவுகிறது. ( )
4. கணினியில் பயன்படுத்தும் நிரலாக்க மொழிகளுள் ஒன்று, பெர்ல். ( )
5. உரையைப் பேச்சாக மாற்றுவதற்கு மென்பொருள்கள் இல்லை. ( )

## இ) சேர்த்து எழுதுக.

1. மொழி + ஆய்வு = ____________
2. சொல் + அடைவு = ____________
3. உள் + ஈடு = ____________
4. தொடர் + இயல் = ____________
5. தொழில் + நுட்பம் = ____________

## ஈ) பிரித்து எழுதுக.

1. கணினியியல் = ____________ + ____________
2. தொடர்பியல் = ____________ + ____________
3. நிரலாக்கமொழி = ____________ + ____________
4. பகுப்பாய்வு = ____________ + ____________
5. சொற்களஞ்சியம் = ____________ + ____________

## உ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

**(கணினியின், இயந்திரமொழிபெயர்ப்பு, நிரலாக்க மொழி, மொழியியல், இயற்கை மொழி)**

1. மனிதன் தான்வாழும் சூழலிலிருந்து பேசுவது ____________.
2. கணினியில் பயன்படுத்தப்படும் மொழி ____________.
3. கணினி மூலம் மொழிபெயர்ப்பது ____________.
4. இன்றைய சூழலில் ____________ ஆய்வுகள், கணினி அறிவியலுக்கு மிகவும் தேவைப்படுகின்றன.
5. நாளைய உலகம் ____________ கையில் என்பது உறுதியாகத் தெரிகிறது.

## 21.3 தெரிந்துகொள்வோம்

### வேற்றுமைத்தொகை

- ஒரு சொல்லுக்கும் மற்றொரு சொல்லுக்கும் இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது வேற்றுமைத்தொகை. (தொகை – மறைந்து வருதல்)
- இரண்டாம் வேற்றுமை உருபு முதல் ஏழாம் வேற்றுமை உருபு வரை (ஐ, ஆல், கு, இன், அது, கண், இல்) மறைந்து வரும்.
- முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை.

| | | |
|---|---|---|
|  | கயல்விழி தண்ணீர் குடித்தாள். | இரண்டாம் வேற்றுமைத்தொகை (தண்ணீர் + ஐ = தண்ணீரை) |
|  | எழிலி தலை வணங்கினாள். | மூன்றாம் வேற்றுமைத்தொகை (தலை + ஆல் = தலையால்) |
|  | கவின் நண்பன் கபிலன். | நான்காம் வேற்றுமைத்தொகை (கவின் + கு = கவினுக்கு) |

| | | |
|---|---|---|
|  | மக்கள் மலை வீழ்அருவி கண்டு மகிழ்ந்தனர். | ஐந்தாம் வேற்றுமைத்தொகை (மலை + இன் = மலையின்) |
|  | காற்றில் மரக்கிளை ஆடியது. | ஆறாம் வேற்றுமைத்தொகை (மரம் + அது = மரத்தினது) |
|  | அம்மா வீட்டின்கண் நிற்கிறாள். | ஏழாம் வேற்றுமைத்தொகை (வீடு + கண் = வீட்டின்கண்) |

## பயிற்சிகள்

### அ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. நான்காம் வேற்றுமைத்தொகை | – | என் பை |
| 2. ஐந்தாம் வேற்றுமைத்தொகை | – | காட்டு யானை |
| 3. ஆறாம் வேற்றுமைத்தொகை | – | ஊர் நீங்கினான் |
| 4. ஏழாம் வேற்றுமைத்தொகை | – | என் மகன் |
| 5. இரண்டாம் வேற்றுமைத்தொகை | – | வெள்ளிக்கிண்ணம் |
| 6. மூன்றாம் வேற்றுமைத்தொகை | – | பாடம் படித்தான் |

## ஆ) கீழ்க்காணும் வேற்றுமைத்தொகைத் தொடர்களை விரித்து எழுதுக.

1. பால் பருகினான் – <u>பாலைப் பருகினான்</u>

2. தமிழ் கற்றாள் – ____________________

3. வாள் வீசினர் – ____________________

4. ஊர் நீங்கினான் – ____________________

5. என் வீடு – ____________________

## இ) பொருந்தாததைத் தெரிவு செய்க.

1. எனது மகள். / எனது வண்டி.

2. கையால் எழுதினான். / கையை எழுதினான்.

3. மாணவனுக்குப் பரிசு கொடுத்தார். / மாணவனைப் பரிசு கொடுத்தார்.

4. செடிக்கு நீர் ஊற்றினான். / செடியில் நீர் ஊற்றினான்.

5. இந்தியாவின் வடக்கு இமயம். / இந்தியாகண் வடக்கு இமயம்.

## ஈ) சரியான சொற்றொடருக்கு (✓) குறியிடுக.

1. ஓவியா வீட்டிற்குச் சென்றாள். ☐

   ஓவியா வீட்டில் சென்றாள். ☐

2. மாறன் கையால் தொழுதான். ☐

   மாறன் கையைத் தொழுதான். ☐

3. முருகனது புத்தகத்தைக் காணவில்லை. ☐

   முருகனுக்குப் புத்தகத்தைக் காணவில்லை. ☐

4. யானை வலியால் துடித்தது. ☐

   யானை வலியில் துடித்தது. ☐

5. கொடையில் சிறந்தவர் பாரி ☐

   கொடையால் சிறந்தவர் பாரி ☐

**உ) கீழ்க்காணும் படத்திற்குப் பொருத்தமாக வேற்றுமைத்தொகைத் தொடர்களை எழுதுக.**



மலர் பறித்தாள்.



______________________



______________________



______________________



______________________

**ஊ) கீழ்க்காணும் உரைப்பகுதியில் மறைந்துள்ள வேற்றுமைத் தொகைகளை விரித்து எழுதுக.**

மனிதன் மொழி கண்டறிந்தான். அதன்வழியே சிந்தனை வளர்த்தான். அவன் அறிவு விரிவடைந்தது. தன் கருத்து உணர்த்தினான். பிறர் எண்ணம் புரிந்து கொண்டான்.

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________

## 21.4 மொழியோடு விளையாடுவோம்

**வட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள சொல் முடியுமாறு புதிய சொற்கள் உருவாக்குக.**

**பேசி**

கைப்பேசி
தொலைபேசி
அலைபேசி
செல்பேசி

**கை**

**தை**

**இயல்**

**கலை**

### தகவல்துளி

அவலோகிதம் (Tamil Prosody Analyzer) என்பது தமிழ் யாப்பு மென்பொருள் ஆகும். ஒரு செய்யுளை உள்ளீடு செய்தால் அதன் சீர், வாய்ப்பாடு, தளை, அடி முதலிய யாப்பு அமைப்புகளைக் கண்டறியும். அந்தச் செய்யுளின் பாவகை அறிந்து தெரிவிக்கும். இந்த மென்பொருள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பாக்களையும் அவற்றின் இனங்களையும் கண்டறியும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை வடிவமைத்தவர் வினோத்ராஜன் என்னும் பொறியாளர்.

## 21.5 கேட்டல் கருத்தறிதல்

### தாய்மை உள்ளம்

வேடன் ஒருவன் காட்டிற்குச் சென்றான். எங்குத் தேடியும் ஒரு விலங்கும் அவன் கண்ணில் படவில்லை. களைப்பின் மிகுதியால் அங்கிருந்த ஆற்றங்கரை ஓரம் சிறிது ஓய்வெடுத்தான். அப்போது பறவை ஒன்று ஆற்றிலிருந்து ஒரு மீனைக் கவ்விக்கொண்டு பறந்தது. அதனைக் கண்ட வேடன், உடனே அம்பைக் கொண்டு அதனை வீழ்த்தினான். அந்தப் பறவை அடிபட்டுக் கீழே விழுந்தது. ஆயினும், மெதுவாகப் பறந்து சென்றது. அதனைப் பின்தொடர்ந்து அந்த வேடனும் சென்றான். அவ்வளவு வலியிலும் அந்தப் பறவை தன் அலகில் கௌவியிருந்த மீனைக் கீழே விடவில்லை. அது மெதுவாகப் பறந்து சென்று, அருகிலிருந்த மரத்தின் கூட்டில் அந்த மீனைப் போட்டது. அடுத்த நொடியில், அந்தப் பறவை கீழே விழுந்தது. அங்கு வந்த வேடன், அந்தப் பறவையைக் கையில் எடுத்தான். அது அசைவற்றுக் கிடந்தது. அம்பினால் அடிபட்ட பின்பும் இந்தப் பறவை ஏன் மீனைக் கீழே விடவில்லை? அதை எங்குக் கொண்டு சென்றது? என அந்த வேடன் எண்ணினான். அவன் நின்றிருந்த இடத்தில் கீச், கீச் என ஒலி வந்ததைக் கேட்டான். நிமிர்ந்து பார்த்தான். அந்த மரத்தின் உச்சியில் ஒரு கூடு இருந்தது. மரத்தின் மீது ஏறி அந்தக் கூட்டின் அருகில் சென்றான். அங்கு நான்கு குஞ்சுப் பறவைகள் அந்த மீனைக் கொத்திக் கொண்டிருப்பதைக் கண்டான். தரையில் வீழ்ந்து கிடந்த அந்தப் பறவையைப் பார்த்தான். அதன் தாய்மை உள்ளத்தைக் கண்டு பெருமிதம் கொண்டான். அதே நேரத்தில், அந்தப் பறவையின் இறப்புக்குத் தான் காரணமாகிவிட்டதை எண்ணி மிகவும் மனம் வருந்தினான்.

### வினாக்கள்

1. வேடன் ஏன் களைப்படைந்தான்?
2. பறவையைக் கண்ட வேடன் என்ன செய்தான்?
3. அம்பினால் துளைக்கப்பட்ட பின்பும் பறவை ஏன் பறந்து சென்றது?
4. பறவையைப் பின்தொடர்ந்து சென்ற வேடன் கண்ட காட்சி யாது?
5. பறவையின் செயலைக் கண்டு வேடன் ஏன் பெருமிதம் கொண்டான்?

## 21.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 21.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

- (குறள் – 355)
- திருவள்ளுவர்

பொருள்:

எப்பொருள் எத்தகைய தன்மை உடையதாக இருந்தாலும் அப்பொருளின் உண்மையான இயல்பைக் காண்பதே அறிவாகும்.

பழமொழி
முள்ளை முள்ளால் எடு

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

இரு இயற்கை மொழிகளுக்கிடையே பேச்சையோ, பனுவலையோ கணினி மூலம் மொழிபெயர்ப்பது இயந்திர மொழிபெயர்ப்பு. இது கணினி மொழியியலின் ஒரு பிரிவாகும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தொழில்நுட்பம்
2. மொழிபெயர்ப்பு
3. செல்பேசி
4. அகராதி

## 21.8 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. இயற்கை மொழி ஆய்வு | – | Natural Language Processing |
| 2. செயற்கை மொழி | – | Artificial Language |
| 3. கணினியியல் மாதிரிகள் | – | Computational Models |
| 4. நிரலாக்க மொழிகள் | – | Programming languages |
| 5. மரபுத்தொடர் | – | Idioms |
| 6. அகராதிகள் | – | Dictionaries |
| 7. சொற்களஞ்சியம் | – | Vocabulary |
| 8. தரவுகள் | – | Data |
| 9. அதிகபட்சம் | – | Maximum |
| 10. உருபனியல் பகுப்பாய்வு | – | Morphological analysis |
| 11. ஒளி வருடி | – | Scanner |
| 12. கணினி அறிவியல் | – | Computer Science |
| 13. உள்ளீடு | – | Input |
| 14. விசைப்பலகை | – | Keyboard |
| 15. தொடரியல் | – | Syntax |
| 16. பொருண்மையியல் | – | Semantics |
| 17. மென்பொருள்கள் | – | Softwares |
| 18. மொழிபெயர்ப்பு | – | Translation |
| 19. ஒளி எழுத்துணரி | - | Optical Character Recognizer (OCR) |

## 21.9 மொழிபெயர்ப்போம்

தகவல் தேடுபொறி (Search Engine) என்பது, தகவல்களைப் பெற உதவும் ஒரு கருவி. தமிழில் தகவல் தேடுபொறிகள் பெருமளவில் வெற்றி அடைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, வினா விடை அறியும் கருவியானது, தமிழ் போன்ற இயற்கை மொழியில் கேட்கப்படும் வினாக்களைப் புரிந்து கொள்கிறது. கேட்கப்பட்ட வினாவிற்குச் சரியான தகவலுடன் விடையளிக்கிறது.

## 21.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் படக்குறிப்புகளைக் கொண்டு கதை உருவாக்கிக் கூறுக.**



## 21.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் குறிப்புகளைப் படித்து விளம்பரம் உருவாக்குக.**

- பதினைந்து நாளில் கணினிவழி ஓவியப் பயிற்சி.
- வாரத்தில் மூன்று நாள் மட்டும் நடைபெறும்.
- ஒரு குழுவில் ஐந்துபேர் மட்டுமே அனுமதி.
- கட்டணம் மிகவும் குறைவு.
- விரும்பிய நாள்களில் மாற்றிக் கொள்ளலாம்.
- விருப்பமுடையோர் பின்வரும் மின்னஞ்சலைத் தொடர்பு கொள்க.
- Highclasscomputer@gmail.com

## 21.12 செயல்திட்டம்

பள்ளியில் நடைபெறும் ஏதேனும் ஒரு விழாவிற்கான அழைப்பிதழைக் கணினியில் உருவாக்குக.

பாடம் 22

## 22.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

தமிழர்களின் கப்பல் கட்டுமானத் தொழில்நுட்பம் குறித்து உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 22.2 படிப்போம்

# தமிழரின் கப்பல் கட்டுமானத் தொழில்நுட்பம்

தொழில்நுட்பம் என்பது பல்வேறு அறிவியல் துறைகளின் அடிப்படையில் இயந்திரங்கள், கட்டடங்கள், சாலைகள், விமானங்கள், கப்பல்கள் போன்றவற்றை உருவாக்குதலும் அவற்றைப் பராமரித்தலும் ஆகும். இத்தகைய தொழில்நுட்ப அறிவைப் பழந்தமிழர்கள் பெற்றிருந்தனர். வேளாண்மை, பாதுகாப்பு, கட்டுமானம், கைவினைப்பொருள்கள், உற்பத்தி எனப் பல நிலைகளிலும் பழந்தமிழர்கள் தம் தொழில்நுட்ப அறிவை வெளிப்படுத்தினர்.

தமிழரின் கட்டுமானத் தொழில்நுட்ப அறிவை அவர்கள் உருவாக்கிய கப்பல்களில் காணலாம். அவர்கள் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கியதற்கு இத்தொழில்நுட்பமும் ஒரு சான்றாக உள்ளது. துறைமுகங்களில் கப்பல்கள் சுற்றித் திரிந்த காட்சிகள், இலக்கியங்களில் கவினுற விளக்கப்பட்டுள்ளன.



பரிசல்

தமிழர் கடல் போக்குவரத்திற்காகப் பல்வேறு கலன்களை உருவாக்கினர். கடலில் செலுத்தப்படும் மரக்கலன்கள் பல பெயர்களில் அழைக்கப்பட்டன. வங்கம், பாதை, தோணி, யாணம், மதலை, திமில், பாறு, அம்பி, ஓங்கல், ஓடம், கலம், கட்டை, சொங்கு, கரிசல், வள்ளம், பஃடு, பஃறி, பகடு, பட்டிகை, படுவை, புணை, மிதவை, தெப்பம், சதா, நவ்வி, போதம், தொள்ளை, நாவாய், கப்பல் என்பன மரக்கலத்தின் வகைகளைக் குறிக்கும் பெயர்களாகும்.

தமிழர்கள் தாம் பயன்படுத்திய மரக்கலன்களை அவற்றின் பயன்பாட்டிற்கு ஏற்ப பல்வேறு வடிவங்களில் உருவாக்கினர். குதிரை, யானை, பறவை, மனிதன் எனக் கப்பலின் முகப்பில் பல்வேறு முக வடிவங்கள் இருந்தன.

கடலில் செல்லும் பெரிய கலத்தை நாவாய் என அழைத்தனர். பூம்புகார்த் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த நாவாய்கள் அலைகளால் அசைந்தன. அவை பார்ப்பதற்குக் கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானைகள் அசைவதுபோல் இருந்தன என்னும் செய்தி தமிழ் இலக்கியத்தில் உள்ளது. பெரிய நாவாய்கள் காற்றின் துணைகொண்டு இயங்கின. அவை பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன. உப்பங்கழிகளில் செலுத்துவதற்குச் சிறிய படகுகளும் கடலில் செலுத்துவதற்குப் பெரிய நாவாய்களும் பயன்படுத்தப்பட்டன.



தோணி



அரிமுக அம்பி



அன்னமுக அம்பி



கரிமுக அம்பி



பரிமுக அம்பி

கடல் வாணிகத்தில் ஈடுபடுத்தப்படும் கலன்களில் பழுது ஏற்பட்டால் அவற்றை நீக்குவதற்காகக் கப்பல் பொறியாளர்கள் பணி அமர்த்தப்பட்டனர். பயணம் செய்யும்போது இவர்களும் உடனிருப்பர். இவர்களைப் '**பண்ணிய விலைஞர்**' எனப் பதிற்றுப்பத்து என்னும் நூல் குறிப்பிட்டுள்ளது.

கப்பல் கட்டுமானக் கூடத்தின் ஒரு பகுதியாக, பழுதுபட்ட கலன்களைச் செப்பனிடும் தொழிற்கூடம் அமைந்திருந்தது. கப்பல் கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் வல்லுநர்கள் '**கம்மியர்கள்**' என அழைக்கப்பட்டனர். இவர்களைக் கப்பல் பயணத்தின்போது உடன் அழைத்துச் செல்லும் வழக்கம் இருந்ததை மணிமேகலை என்னும் காப்பிய நூல் குறிப்பிட்டுள்ளது.

கடல் கடந்து செல்லும் வகையில், பலவகையான மரக்கலங்களைக் கட்டுவதில் பழந்தமிழர் சிறந்து விளங்கினர். பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கு ஏற்பத் துறைமுகங்களை அமைப்பதிலும் வல்லுநர்களாகத் திகழ்ந்தனர்.

பழந்தமிழரின் தொழில்நுட்ப உத்திகளும் கண்டறிந்த கருவிகளும் இன்றைய பொறியியல் தொழில்நுட்பத் திறனுக்கு அடிப்படையாக உள்ளன. இவை, தமிழரின் வியக்க வைக்கும் அறிவியல் சிந்தனையை வெளிப்படுத்துகின்றன.

## பொருள் அறிவோம்

| | | |
|---|---|---|
| 1. கவினுற | – | அழகுபட |
| 2. கலம் | – | கப்பல் |
| 3. பழுது | – | குறைபாடு |
| 4. செப்பனிடுதல் | – | குறை நீக்குதல் |
| 5. உத்திகள் | – | முறைகள் |

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. தொழில்நுட்பம் என்றால் என்ன?
2. பண்டைத்தமிழர் எத்தகைய தொழில்நுட்பங்களில் சிறந்து விளங்கினர்?
3. 'கம்மியர்கள்' என அழைக்கப்பட்டவர்கள் யாவர்? அவர்களின் பணி யாது?
4. மரக்கலத்தைக் குறிக்கும் பலவகைப் பெயர்களை எழுதுக.
5. கடல் அலையில் அசையும் நாவாய்க்கு எது ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது?

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(காப்பிய, பாய்மரக் கப்பல், கம்மியர், சிறிய படகு, நாவாய்)**

1. உப்பங்கழிகளில் செலுத்துவதற்குச் ____________ கடலில் பயன்படுத்தப்பட்டன.
2. பெரிய கப்பல்கள் ____________ என அழைக்கப்பட்டன.
3. கப்பல் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்ட வல்லுநர்கள் ____________ ஆவர்.
4. கடலில் செல்லும் பெரிய கலம் ____________ என அழைக்கப்பட்டது.
5. மணிமேகலை என்பது ____________ நூலாகும்.

### இ) சேர்த்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. தமிழ் | + | இலக்கியம் | = | ____________ |
| 2. பணி | + | அமர்த்தப்பட்டனர் | = | ____________ |
| 3. பாய்மரம் | + | கப்பல் | = | ____________ |
| 4. காப்பியம் | + | நூல் | = | ____________ |
| 5. முகம் | + | வடிவம் | = | ____________ |

### ஈ) பிரித்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. கவினுற | = | ____________ | + | ____________ |
| 2. மரக்கலன் | = | ____________ | + | ____________ |
| 3. கட்டுத்தறி | = | ____________ | + | ____________ |
| 4. உடனிருப்பர் | = | ____________ | + | ____________ |
| 5. தொழிற்கூடம் | = | ____________ | + | ____________ |

## 22.3 மொழிக்கூறு

### உவமைத்தொடர்கள்

| | | |
|---|---|---|
|  | வகுப்பில் எப்போதும் அமைதியாக இருக்கும் மலர், பேச்சுப்போட்டியில் வென்றதால், இதுவரை அவளது திறமை **இலைமறை காய்போல** யாருக்கும் தெரியாமல் இருந்தது. |  |
|  | பாரதி, சாரதி இருவரும் **உருவும் நிழலும் போல** இணைபிரியாமல் இருந்தனர். |  |
|  | பாரதி தேர்வில் மதிப்பெண் குறைந்ததனால் **கப்பல் கவிழ்ந்தாற் போல்** சோகமாக இருந்தான். |  |

## பயிற்சிகள்

**அ) கோடிட்ட இடத்தில் சரியான உவமைத்தொடரைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

**(உருவும் நிழலும் போல, கப்பல் கவிழ்ந்தாற் போல, இலைமறை காய்போல)**

1. பாட்டுப்போட்டியில் பூங்கொடி வென்றதால் ____________ மறைந்திருந்த அவளது திறமையைக் கண்டு நண்பர்கள் வியப்படைந்தனர்.
2. கவிதாவும் வனிதாவும் எங்குச் சென்றாலும் ____________ இணைந்தே செல்வர்.
3. தன்னைப் பாதுகாத்து வந்த அண்ணன் விபத்தில் சிக்கிய செய்தியைக் கேட்டதும் தமிழ்மணி ____________ வாடி நின்றான்.

**ஆ) உவமைத்தொடரையும் பொருளையும் பொருத்துக.**

| உவமைத்தொடர் | – | பொருள் |
|---|---|---|
| 1. கொழுகொம்பற்ற கொடிபோல | – | யாருக்கும் தெரியாமல் இருத்தல் |
| 2. உருவும் நிழலும் போல | – | ஆதரவின்றி இருத்தல் |
| 3. இலைமறை காய்போல | – | இணைபிரியாமல் இருத்தல் |

## 22.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் படித்து, கட்டங்களிலுள்ள சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சி | க | ட | ல் | அ | ம |
| ற் | வி | ண் | மீ | ன் | ல் |
| ப | தை | ந | சி | ளி | லி |
| ம் | இ | ட | ரி | வ | கை |
| ம | உ | ன | ப் | றா | ஆ |
| லை | எ | ம் | பு | சூ | ஈ |
| க | ப் | ப | ல் | ஏ | ஊ |

1. சிற்பி வடித்தால் சிலை; செதுக்கினால் ____________.
2. கவிஞர் பாடினால் பாட்டு; இயற்றினால் ____________.
3. காற்று இனிமையாக வீசினால் தென்றல்; கடுமையாக வீசினால் ____________.
4. நடிகர் நடித்தால் நாடகம்; ஆடினால் ____________.
5. தண்ணீர் சிறிதளவு தேங்கி நின்றால் குளம்; பரந்துபட்டிருந்தால் ____________.
6. மென்மையாகச் சிரித்தால் புன்னகை; வாய்விட்டுச் சிரித்தால் ____________.
7. பகலில் ஒளி வீசினால் சூரியன்; இரவில் ஒளி வீசினால் ____________.
8. காலையில் மலர்ந்தால் தாமரை; மாலையில் மலர்ந்தால் ____________.
9. ஆற்றில் மிதந்தால் படகு; கடலில் மிதந்தால் ____________.
10. சிறியதாய் இருந்தால் குன்று; பெரியதாய் இருந்தால் ____________.

### தகவல்துளி

பழந்தமிழர் விளையாட்டுகளுள் பாவையை வைத்து மகளிர் விளையாடுதலும் ஒன்றாகும். 'பாவை' என்பது, பொம்மையைக் குறிக்கும் சொல்லாகும். மண்ணாலான பாவை, மரத்தாலான பாவை போன்றவை விளையாடுவதற்குப் பயன்பட்டன. அக்காலத்திலேயே இயந்திரத்தால் செய்யப்பட்ட இயந்திரப்பாவையும் வழக்கத்தில் இருந்தது என்பது வியப்பிற்குரிய செய்தியாகும். தானே இயங்கும் இயந்திரத் தொழில்நுட்பத்துடன் இத்தகைய பாவை வடிவமைக்கப்பட்டிருந்தது. நல்ல வேலைப்பாடமைந்த தானே இயங்கும் இயந்திரப்பாவையின் இயந்திரம் பழுதுபட்டதால், அது இயங்காமல் கிடந்தது என்பதை "நல்வினைப் பொறி அழி பாவையின் கலங்கி" என்னும் நற்றிணைப் பாடல் (பா. 308, வரி 6, 7) உணர்த்துகிறது.

## 22.5 கேட்டல் கருத்தறிதல்

### மலர்க்கொத்து

பெர்னாட்ஷாவிற்கு மலர்கள் என்றால் அதிகம் பிடிக்கும். செடி கொடிகளிலும், மரங்களிலும் பூத்துக் குலுங்கும் மலர்களைப் பார்த்து இரசித்து வியந்து கொண்டிருப்பார். எனினும், அவர் தமது இல்லத்தில் மலர்களைக் கொய்து அலங்காரப் பூச்சாடிகளில் வைக்கும் பழக்கம் இல்லாதவர்.

இது குறித்து ஒருநாள், நண்பர் ஒருவர் ஷாவிடம், "மலர்களிடம் இவ்வளவு பிரியம் வைத்துள்ள நீங்கள் அவற்றைக் கொய்து வீட்டில் வைப்பதில்லையே, ஏன்?" எனக் கேட்டார்.

அதற்கு பெர்னாட்ஷா, "மலர்களிடம் எனக்குப் பிரியம்தான். அவற்றைப் பார்த்து இரசிக்கலாம். பறித்துத்தான் இரசிக்க வேண்டும் என்பதில்லையே! ஒவ்வொன்றும் அது இருக்கும் இடத்தில்தான் உண்மையான அழகைப் பெறும்" என்று விடையளித்தார்.

### வினாக்கள்

1. பெர்னாட்ஷாவிற்கு பிரியமானவை எவை?
2. பெர்னாட்ஷா எதைக் கண்டு வியப்பார்?
3. எத்தகைய பழக்கம் பெர்னாட்ஷாவிடம் இல்லை?
4. பெர்னாட்ஷாவிடம் அவர் நண்பர் கேட்ட வினா என்ன?
5. நண்பரின் வினாவிற்கு பெர்னாட்ஷா அளித்த விடை என்ன?

## 22.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 22.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்

– (குறள் – 435)
– திருவள்ளுவர்

(காவாதான் - காத்துக்கொள்ளாதவன்; வைத்தூறு – வைக்கோல்போர்)

**பொருள்:**

துன்பம் வருவதற்கு முன்பே வராமல் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின்முன் நின்ற வைக்கோல்போர் போல் அழிந்துவிடும்.

**பழமொழி**

வெள்ளம் வருமுன்னே அணைபோட வேண்டும்.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

தமிழரின் கட்டுமானத் தொழில்நுட்ப அறிவை அவர்கள் உருவாக்கிய கப்பல்களில் காணலாம். அவர்கள் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கியதற்கு இத்தொழில்நுட்பமும் ஒரு சான்றாக உள்ளது.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தொழில்நுட்ப அறிவு
2. துறைமுகம்
3. கப்பல்

## 22.8 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. இயந்திரங்கள் | – | Machines |
| 2. கட்டடங்கள் | – | Buildings |
| 3. படகு | – | Boat |
| 4. கப்பல் | – | Ship |
| 5. பராமரித்தல் | – | Maintenance |
| 6. கைவினைப்பொருள் | – | Handicraft |
| 7. துறைமுகம் | – | Harbour |
| 8. போக்குவரத்து | – | Transport |
| 9. கப்பல் பொறியாளர் | – | Ship Engineer |
| 10. தொழில்நுட்ப உத்திகள் | – | Technology techniques |

## 22.9 மொழிபெயர்ப்போம்

இன்றைய உலகம் அறிவியல் உலகமாகத் திகழ்கிறது. நாளும் அறிவியல் கருத்துகள் வளர்ந்து வியக்கத்தக்க சாதனைகளைச் செய்து கொண்டிருக்கின்றன. இத்தகைய அறிவியல் வளர்ச்சிகளால் வாழ்க்கை முறை, நாகரிகம், பொருளாதாரம் போன்ற யாவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

______________________________

______________________________

______________________________

## 22.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

### பின்வரும் குறிப்புச்சொற்களைக் கொண்டு அழகிய ஓவியம் வரைக.

செடி, கொடி, மரம் நிறைந்த சோலை – குயில் கூவ, மயில் ஆடுதல், மான்கள் புல் மேய, குரங்குகள் மரம்விட்டு மரம் தாவுதல் – குளத்தில் தாமரை பூத்திருக்க, கொக்குகள் மீன் பிடித்தல்.

## 22.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் நிகழ்வைப் படித்து விடை வருமாறு பொருத்தமான வினாக்கள் உருவாக்குக.**

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 1962ஆம் ஆண்டில், அணுகுண்டு சோதனையை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்துவதற்காக, அமெரிக்க நாட்டிற்குச் சென்றார். அப்போது, அமெரிக்காவின் அதிபராக இருந்தவர் ஜான் கென்னடி. அவரை வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு வெளியே வந்தார்.

மாளிகைக்கு வெளியே ஆவலாகக் காத்திருந்த அத்தனை செய்தியாளர்களும் ராஜாஜியைச் சூழ்ந்துகொண்டனர். அவர்கள், "பேச்சு வார்த்தை என்ன ஆயிற்று?" எனக் கேட்டார்கள். மூதறிஞர் அவர்களுக்கு அழகான விடையை ஆங்கிலத்தில் சொன்னார்.

"காயா? பழமா? என்னும் உங்கள் கேள்விகளுக்கு என்னுடைய பதிலை ஒரு புதிய சொல்லால் குறிப்பிடுகிறேன். அது இப்போதுதான் மலர்ந்திருக்கின்றது. மலர்தானே பிறகு காயாகிக் கனியாக மாறுகிறது" என்று கூறி அத்தனை பேரையும் அசர வைத்துவிட்டார்.

### வினாக்கள்

1. மூதறிஞர் இராஜாஜி எப்போது எதற்காக அமெரிக்கா சென்றார்?
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________

## 22.12 செயல்திட்டம்

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்படும் நன்மை தீமைகள் குறித்து நழுவங்கள் (PPT) தயாரித்து வகுப்பில் காட்சிப்படுத்துக.

பாடம்
23

## 23.1 பேசுவோம்




### கலந்துரையாடுவோம்

ஒரு செயலைச் செய்ய ஒரு மனிதனிடம் இருக்க வேண்டிய பண்புகள் குறித்து உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 23.2 படிப்போம்

# மனத்துக்கண் மாசிலன் ஆதல்
# (சிறுகதை)



நல்லூர் என்னும் சிற்றூரில் பொன்னன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு மகன்கள் இருவர். மூத்த மகனின் பெயர் அன்பு. இளைய மகனின் பெயர் அறிவு. ஒருநாள், பொன்னன் கடைக்குச் சென்றான். திரும்பி வரும்போது விளையாட்டுப் பொருள்களை வாங்கி வந்தான். அப்பாவின் கையிலிருக்கும் பையைப் பார்த்தவுடன் அன்பு பாய்ந்தோடி வந்தான். பையை வேகமாக இழுத்தான். அப்போது பையிலிருந்த விளையாட்டுப் பொருள்கள் கீழே விழுந்தன. கண்ணாடியால் ஆன விளையாட்டுப் பொருள் ஒன்று உடைந்து சிதறியது. மரத்தால் ஆன மற்றொரு பொருள் உடையவில்லை. அன்பு, தன்னால்தானே பொருள் உடைந்தது என்று சிறிதும் கவலைப்படாமல், மரத்தாலான பொருளை எடுத்து வைத்துக்கொண்டான்.

பொன்னன், அன்புவின் செயலைக் கண்டான். அப்போது, அங்கு அறிவு வந்தான். அறிவைப் பார்த்த அன்பு, "இதோ பார் அறிவு, அப்பா உனக்காக வாங்கி வந்த விளையாட்டுப் பொருள் கீழே விழுந்து உடைந்து விட்டது. இதோ, இந்தப் பொருள் என்னுடையது. இதை நான் உனக்குத் தரமாட்டேன்" என்றான். அண்ணனின் குணத்தை அறிவு நன்கு அறிவான். அவன் ஒன்றும் சொல்லவில்லை.

பள்ளியில் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. ஓட்டப்போட்டியில் அன்பு கலந்துகொண்டான். ஆசிரியரின் ஊதல் ஒலி கேட்டதும் எல்லாரும் ஓடத் தொடங்கினர். அன்புக்கு முன்னால் மாறன் ஓடிக்கொண்டிருந்தான். அவனைத் தாண்டி ஓட அன்பு முயற்சி செய்தான். ஆனால் முடியவில்லை. சில நொடியில் தனக்கு இரண்டாம் இடம்தான் கிடைக்கப்போகிறது என்பதை ஊகித்த அன்பு திடீரென வேகமெடுத்து மாறனை இடித்துவிட்டு ஓடினான். இதனால் மாறன் சற்றுத் தடுமாறி ஓட முயல்வதற்குள் அன்பு வெற்றிக்கோட்டைத் தொட்டுவிட்டான். அவனுக்குத்தான் முதற்பரிசு கிடைத்தது.

அன்புவிடம் வேண்டாத தீய குணங்கள் இருப்பதை ஆசிரியர் கண்டார். அவனைத் திருத்த முடிவுசெய்தார். மறுநாள் அழகிய சிறு பெட்டியுடன் வகுப்பறைக்குள் நுழைந்தார். அவர், மாணவர்களிடம் "அழகிய வேலைப்பாடு கொண்ட இந்தப்பெட்டி உங்களுள் ஒருவருக்குத்தான் கிடைக்கும்" என்றார். மாணவர்கள் உற்சாகத்துடன், "நாங்கள் என்ன செய்யவேண்டும்? சொல்லுங்கள்" என்றனர். "மிகவும் எளிது. நீங்கள் செய்த நற்செயல் ஒன்றைக் கூறவேண்டும். அச்செயல் அனைவராலும் பாராட்டப்படவேண்டும். மேலும், நீங்கள் கூறிய செய்தியில் உண்மை இல்லை என்றால் இந்தப் பெட்டி உங்களுக்குக் கிடைக்காது" என்றார் ஆசிரியர். மாணவர்களும் ஆர்வத்துடன் தாம் செய்த நற்செயலைக் கூறத் தொடங்கினர். ஆசிரியர் ஒவ்வொருவர் கூறியதையும் குறித்து வைத்துக்கொண்டார்.

அன்புவைத் தவிர வகுப்பிலுள்ள அனைவரும் கூறிவிட்டனர். அன்பு என்ன சொல்வதென்று தெரியாமல் திருதிருவென விழித்துக்கொண்டிருந்தான். வகுப்பு அமைதியாக இருந்தது. ஆசிரியர், அன்புவை அழைத்தார். "என்ன அன்பு, நீ ஒன்றும் சொல்லாமல் இருக்கிறாய்? வா, வந்து சொல்" என்றார். அன்பு தயங்கித்தயங்கி நடந்து வந்தான். இப்போது அவனது கண்கள் கலங்கி இருந்தன. அவன் தன் தவற்றை உணர்ந்து விட்டான் என்பது அவனது செயலில் தெரிந்தது.

அன்பு பேசத் தொடங்கினான், "எல்லாரும் செய்து முடித்த நற்செயல்களைப் பற்றிக் கூறினீர்கள். ஆனால் அப்படிச் சொல்வதற்கு என்னிடம் எதுவும் இல்லை. நான் செய்த தீய செயல்கள் பலருக்குத் துன்பத்தைத்தான் தந்தன. என் செய்கையால் மற்றவர்கள் எந்த அளவிற்கு வருத்தம் அடைந்திருப்பார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன். ஆகவே, நான் இனிமேல் நற்செயல்களை மட்டும் செய்யப்போகிறேன். எல்லாரிடத்தும் அன்பு காட்டுவேன். பெரியோரை மதிப்பேன். பொய், பொறாமை ஆகிய தீய குணங்களை நீக்குவேன். என்னுடைய செயல்களால் நற்பண்புமிக்க உங்களுடைய நட்பை இழந்திருக்கிறேன். இனியும் நான் இப்படி இருப்பது நல்லதன்று. எனவே, என்னைத் திருத்திக்கொள்ள வாய்ப்பு அளியுங்கள்" என்றான் அன்பு.

ஆசிரியர், அன்புவின் முதுகில் மெதுவாகத் தட்டி அவனை அரவணைத்தார். "உன் மனத்திலுள்ள அழுக்குகள் எல்லாம் நீங்கிவிட்டன. இனி நீ செய்கின்ற ஒவ்வொரு நற்செயலும் உன்னை அடையாளம் காட்டும்" என்று கூறிய ஆசிரியர், அந்த அழகிய பெட்டியை அன்புவுக்கே பரிசளித்தார். நற்செயல் கூறிய மாணவர்கள் அனைவருக்கும் இனிப்புகளை வழங்கிப் பாராட்டினார்.

## பொருள் அறிவோம்

1. குணம் – பண்பு
2. ஊகித்தல் – கருதுதல்
3. வேகம் – விரைவு
4. உற்சாகம் – மகிழ்ச்சி
5. அரவணைத்தல் – பாதுகாத்தல்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. பொன்னனின் மகன்களின் பெயர்களை எழுதுக.
2. அன்பு எப்படிப்பட்டவன்? அவன் பண்புகளைக் கூறுக.
3. பள்ளியில் நடைபெற்ற ஓட்டப்போட்டியில் அன்பு எப்படி வெற்றி பெற்றான்?
4. அன்புவைத் திருத்த ஆசிரியர் மேற்கொண்ட செயல் யாது?
5. அன்பு மனந்திருந்திப் பேசியவற்றை எழுதுக.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பொன்னனுக்கு மகன்கள் ______________ இருந்தனர். (இருவர்/ மூவர்)
2. விளையாட்டுப் பொருளை உடைத்தவன் ______________. (அன்பு/ அறிவு)
3. ஓட்டப்போட்டியில் அன்புக்கு ______________ கிடைத்தது. (முதற்பரிசு/ இரண்டாம் பரிசு)
4. ஓட்டப்போட்டியில் அன்பு வெற்றி பெறக் காரணம் ______________ (விடாமுயற்சி/ தந்திரம்)
5. நம் மனத்திலிருந்து களையவேண்டிய தீய பண்பு ______________.(பொறுமை/ பொறாமை)

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(வேலைப்பாடு, கண்ணாடியால், அன்பு, ஊதல் ஒலி, நல்லூர்)**

1. பொன்னன் வாழ்ந்து வந்த சிற்றூரின் பெயர் ______________.
2. அன்பு உடைத்த விளையாட்டுப் பொருள் ______________ ஆனது.
3. பள்ளியில் நடைபெற்ற ஓட்டப்போட்டியில் ______________ கலந்துகொண்டான்.
4. ஆசிரியர் கொண்டுவந்த சிறுபெட்டி அழகிய ______________ கொண்டது.
5. ஆசிரியரின் ______________ கேட்டதும் எல்லாரும் ஓடத் தொடங்கினர்.

### ஈ) சேர்த்து எழுதுக.

1. இரண்டாம் + இடம் = ______________
2. மரத்தால் + ஆன = ______________
3. சொல்ல + இல்லை = ______________
4. உண்மை + இல்லை = ______________
5. கலங்கி + இருந்தன = ______________

## 23.3 மொழிக்கூறு

# வழுவமைதி

சில சூழ்நிலைகளில் வழுவாக (தவறாக) இருந்தாலும், அதனை ஏற்றுக்கொள்வது வழுவமைதியாகும்.

## வழுவமைதியின் வகைகள்

வழுவமைதி ஐந்து வகைப்படும்.

**வழுவமைதியின் வகைகள்**

- திணை வழுவமைதி
- பால் வழுவமைதி
- இட வழுவமைதி
- கால வழுவமைதி
- மரபு வழுவமைதி

## 1. திணை வழுவமைதி

உயர்திணையை அஃறிணையாகவும் அஃறிணையை உயர்திணையாகவும் குறிப்பிடுவது திணை வழுவமைதி. இது உவப்பு, உயர்வு, சினம், இழிவு ஆகியவை காரணமாக வழுவி வரும்.

| | |
|---|---|
|  | **குமார் மரத்தை வெட்டியது.** |
|  | **கிளியார் பறக்கிறார்.** |

## 2. பால் வழுவமைதி

ஆண்பாலைப் பெண்பாலாகவும், பெண்பாலை ஆண்பாலாகவும் வழங்குவது, பால் வழுவமைதி. இது உவப்பு, உயர்வு, சினம், இழிவு ஆகியவை காரணமாக வழுவி வரும்.

| | |
|---|---|
|  | "வாடி என் கண்ணே!" |
|  | "வாடா என் கண்ணா!" |

## 3. இட வழுவமைதி

முன்னிலையாகக் கூறுவதைப் படர்க்கையாகவும், தன்மையாகக் கூறுவதைப் படர்க்கையாகவும் இடத்தை மாற்றிக் கூறுவது இடவழுவமைதி. இது மதிப்பு காரணமாக வழுவி வரும்.

| | |
|---|---|
|  | "நண்பரின் கருத்து யாதோ?" |

## 4. கால வழுவமைதி

ஒரு காலத்தில் கூற வேண்டிய வினைச்சொல்லை மற்றொரு காலத்தில் கூறுவது கால வழுவமைதி. இது விரைவு, மிகுதி, துணிவு ஆகியவை காரணமாக வழுவி வரும்.



"கண்ணா வாடா"

"இதோ **வந்துவிட்டேன்**".

## 5. மரபு வழுவமைதி

நம் முன்னோர்கள் தொன்றுதொட்டுப் பின்பற்றிய சொல்லையோ, தொடரையோ அவற்றின் மரபிலிருந்து விலகி, மாறுபடக் கூறுவது மரபு வழுவமைதி.



"**கத்தும்** குயிலோசை".

## பயிற்சிகள்

### அ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. திணை வழுவமைதி | – | இம்மாடு யான் வாங்கியது. |
| 2. பால் வழுவமைதி | – | இதோ உண்டேன். |
| 3. இட வழுவமைதி | – | கண்மணி வாடா இராசா! |
| 4. கால வழுவமைதி | – | நண்பரின் கருத்து யாதோ? |
| 5. மரபு வழுவமைதி | – | இனியா கடைக்குச் சென்றது. |

### ஆ) கீழ்க்காணும் தொடர்கள் எவ்வகை வழுவமைதி எனத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**(திணை வழுவமைதி, பால் வழுவமைதி, காலவழுவமைதி, இடவழுவமைதி, மரபு வழுவமைதி)**

1. கபிலன் தான் வளர்க்கும் நாய்க்குட்டியைப் பார்த்து, "மணி, வா விளையாடலாம்" எனக் கூறுவது ______________.
2. என் பெற்றோர் வீட்டிற்கு வருகை தந்த உறவினரைப் பார்த்து, "தங்கள் வரவு நல்வரவாகுக" எனக் கூறுவது ______________.
3. மாறன் தன் அண்ணனிடம், "நான் இப்பள்ளியில் படித்தபோது, இந்த விளையாட்டுத் திடலில்தான் விளையாடுவேன்" என்று கூறுவது ______________.
4. தந்தை தம் மகனிடம், "உன்னை ஈன்ற தாய்க்குப் பெருமை சேர்க்கவேண்டும்" என்று கூறுவது ______________.
5. அம்மா, தன் ஆண்குழந்தையிடம், "வாடி, இராசாத்தி! கடைக்குப் போகலாம்" என்று சொல்வது ______________.

## சுவைச்செய்தி

கர்நாடக மாநிலத்தில் உத்தர கன்னட மாவட்டத்தை சேர்ந்தவர் துளசி கவுடா. இவர் 'காடுகளின் கலைக்களஞ்சியம்' எனப் புகழப்படுகிறார். இதுவரை 40,000க்கும் மேற்பட்ட மரங்களை வளர்த்து காட்டு வளத்தைப் பெருக்கியுள்ளார். தாம் வளர்த்த, வளர்க்கின்ற அனைத்துச் செடிகள் மற்றும் மரங்களின் வகைகளையும் அவற்றின் பயன்களையும் நன்கு அறிந்து வைத்துள்ளார். மக்களிடையே காடுகளைக் காப்பதற்கான விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறார். எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி, நாட்டின் வளத்தைப் பாதுகாக்கும் இவரது சேவையைப் பாராட்டி இந்திய அரசு இவருக்குப் பத்மஸ்ரீ விருது (2020) அளித்துப் பெருமைப்படுத்தியுள்ளது



துளசி கவுடா

## கருத்து விளக்கப்படம்

மீண்டும் கேட்கலாமா?
சிட்டுக்குருவிகளின்
கீச்சுகளை...



# கூடுகள் வழங்கும் விழா!

(சிட்டுக்குருவிகளுக்கான
விழிப்புணர்வு நிகழ்ச்சி)
சிறப்புரை: பறவைகள் ஆர்வலர்
**பேராசிரியர் பூமிதாசன்,** சென்னை

- ❖ பறவைகள் மற்றும் சிட்டுக்குருவிகளை அடையாளம் காணல்.
- ❖ பெருநகரங்களில் பறவைகளைக் காப்பதற்கு நாம் செய்ய வேண்டியவை.
- ❖ குருவிக் கூடுகள் தயாரிக்கும் முறைகள்.

**நாள் : 22. 04. 2023 சனிக்கிழமை**
**நேரம் : மாலை 3.00 – 6.00 வரை**
இடம் : தனலட்சுமி மேல்நிலைப்பள்ளி (இராயபுரம் பேருந்து நிறுத்தம் அருகில்), திருவொற்றியூர் சாலை, இராயபுரம், சென்னை

### வினாக்கள்

1. விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பறவை எது?
2. விழாவின் நோக்கம் யாது?
3. விழாவின் சிறப்பு விருந்தினர் யார்? அவரின் சிறப்பு யாது?
4. விழாவில் எவற்றை எல்லாம் நாம் தெரிந்து கொள்ள வாய்ப்புள்ளது?
5. விழா நடைபெறும் இடம், நேரத்தைக் குறிப்பிடுக.

## 23.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் படித்து, சொற்களைக் கண்டறிக.**

**(அழுகை, இலங்கை, மல்லிகை, நம்பிக்கை, முருங்கை, எச்சரிக்கை, தும்பிக்கை, புன்னகை, உவகை, எதுகை)**

| | | |
|---|---|---|
| 1. | பூவில் ஒரு கை. அது என்ன கை? | |
| 2. | கீரையில் ஒரு கை. அது என்ன கை? | |
| 3. | யானைக்கு ஒரு கை. அது என்ன கை? | |
| 4. | பாடலில் ஒரு கை. அது என்ன கை? | |
| 5. | சிரிப்பில் ஒரு கை. அது என்ன கை? | |
| 6. | நாடுகளுள் ஒரு கை. அது என்ன கை? | |
| 7. | விழிப்புணர்வில் ஒரு கை. அது என்ன கை? | |
| 8. | துன்பத்தில் ஒரு கை. அது என்ன கை? | |
| 9. | இன்பத்தில் ஒரு கை. அது என்ன கை? | |
| 10. | நம்மை மேம்படுத்தும் ஒரு கை. அது என்ன கை? | |

## 23.5 கேட்டல் கருத்தறிதல்

### உயர் அலுவலர் தந்த பரிசு

ஓர் அலுவலகத்தில் பணியாற்றி வந்த உயர் அலுவலர் ஒருவர் எதற்கெடுத்தாலும் கோபப்படுவார். எந்த ஊழியராவது தவறு செய்துவிட்டால், கடுமையாகத் திட்டுவார். அதனால், அங்கு வேலை பார்க்கும் ஊழியர்கள் மனவருத்தம் கொண்டார்கள். இந்தச் சூழ்நிலையில், முருகனுக்கு அங்கு வேலை கிடைத்தது. அன்று அவன் தட்டச்சு செய்த தாளில் தவறு நேர்ந்து விட்டது. அந்த உயர்அலுவலர், முருகனை அழைத்தார். அவன் செய்த தவற்றைச் சுட்டிக்காட்டி, வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தார். முருகன் எதுவும் பேசாமல், தன் இருக்கைக்குச் சென்றான். தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினான். இதுபோல், அடிக்கடி நடந்தது. இதனைப் பார்த்துக் கொண்டிருந்த மற்ற ஊழியர்கள், முருகனிடம் சென்றார்கள். "என்னப்பா, அந்த உயர் அலுவலர் இப்படிக் கடுமையாகத் திட்டுகிறாரே, உனக்கு வருத்தமாக இல்லையா?" என்று கேட்டனர். அதற்கு முருகன், "நான் இங்கு வேலையில் சேர வரும்போது ஒரு காட்சியைக் கண்டேன். ஓர் ஆண், ஒரு பெண்ணுக்குப் பரிசுப்பொருள் கொடுக்க, அதனை அவள் வாங்க மறுக்கிறாள். அவன் எவ்வளவோ கெஞ்சிப் பார்க்கிறான். அவள் வாங்கவேயில்லை. அப்படியானால், அந்தப் பரிசுப்பொருள் யாருக்குச் சொந்தம்?" என்று கேட்டான். "அந்த ஆணுக்குத்தான் சொந்தம்" என்றனர் மற்ற ஊழியர்கள். "அதேதான். நம் உயர்அலுவலர், அவருடைய கடுமையான கோபத்தையும் மூர்க்கத்தனத்தையும் எப்படியாவது என்மீது திணிக்கப் பார்க்கிறார். நான் அதை வாங்கிக் கொள்ளவில்லை. மேலும், நான் செய்த தவற்றைக் கண்டறிந்து திருத்தம் செய்வதோடு, அடுத்த வேலையில் கவனம் செலுத்துவதில் என் நேரத்தைச் செலவிடுகிறேன்" என்றான் முருகன்.

### வினாக்கள்

1. உயர் அலுவலரின் பண்புகளைக் கூறுக.
2. முருகன் செய்த தவறு என்ன?
3. முருகனிடம் மற்ற ஊழியர்கள் என்ன கேட்டனர்?
4. முருகன் மற்ற ஊழியர்களிடம் கூறிய பதில் யாது?
5. பணியில் மனநிறைவு எப்போது ஏற்படும்?

## 23.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 23.7 செந்தமிழ்ச்செல்வம்

### நாலடியார்

வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென்று இன்புறுவர்
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்

– (பாடல் – 39 )

– சமண முனிவர்கள்

(வைகலும் - நாள்தோறும்; வைகல் – நாள் கழிதல்;
வைகும் – மேன்மேலும் இருக்கும்)

**பொருள்:**

நாள்தோறும் நாள் கழிவதைக் கண்டும் அதனை அறியாது, நாள்தோறும் நாள் இருந்து கொண்டே இருக்கும் எனச் சிலர் மகிழ்ச்சி கொள்வார்கள், ஆனால், நாள்தோறும் நாள் கழியும்போது, தம் வாழ்நாளும் கழிந்து போகும் என்பதை அவர்கள் உணர்வதில்லை. ஆகையால், ஒவ்வொருவரும் தம் வாழ்நாள் கழிவதற்குள் நற்செயல்களைச் செய்யவேண்டும்.

**பழமொழி**

அறம் செய விரும்பு

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

உலக மக்களின் அறவாழ்வைக் காட்டும் நூல்களுள் ஒன்று **திருக்குறள்**. உலகம் அனைத்திற்கும் பொதுவான கருத்துகள் இந்நூலில் உள்ளதால், இது **உலகப் பொதுமறை** என அழைக்கப்படுகிறது. வாழ்க்கைக்கு ஏற்புடைய கருத்துகளைக் கொண்டு பண்பாட்டு வழிகாட்டியாக இந்நூல் திகழ்கிறது.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. நற்செயல்கள்
2. அன்பு
3. இன்சொல்

## 23.8 அறிந்துகொள்வோம்

1. சிற்றூர் – Small village
2. குணம் – Character
3. ஓட்டப்போட்டி – Running race
4. ஊதல் ஒலி – Whistle
5. முயற்சி – Effort
6. தீய குணங்கள் – Bad qualities
7. நற்பண்புகள் – Good qualities
8. பொறாமை – Jealousy
9. நட்பு – Friendship
10. வாய்ப்பு – Opportunity

## 23.9 மொழிபெயர்ப்போம்

A charity is an organization which raises money in order to help people who are sick or very poor, or who have a disability.

## 23.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**பின்வரும் படங்களைப் பார்த்துக் கதை உருவாக்குக.**




## 23.11 உயர்நிலைத்திறன்

**ஒரு கதையின் பாதிப்பகுதி மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைப் படித்து, உங்கள் கற்பனைக்கேற்ப, மீதிக்கதையைக் கூறுக.**

ஓர் ஊரில் கந்தன் என்பவன் தன் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். அவர்கள் இருவரும் நாள்தோறும் பத்துப் பேருக்கு அன்னதானம் செய்வதாகக் கூறி, எல்லாரையும் நம்ப வைப்பார்கள். ஆனால், யாராவது வீடு தேடி வந்தால், இன்று பத்துப் பேருக்கு உணவளித்துவிட்டோம். நாளைக்கு வாருங்கள் என்று இனிமையாகப் பேசி அனுப்பி விடுவார்கள். ஒருநாள், இராமன் என்பவன் அவர்கள் வீட்டிற்குச் சென்றான். இருவரும் வழக்கம்போல இராமனிடம் இனிமையாகப் பேசி மறுநாள் வரச்சொன்னார்கள். மறுநாள் விடியற்காலையிலேயே இராமன் அவர்கள் வீட்டிற்குச் சென்றான். உணவு தயாரானபின் சொல்லுங்கள். அதுவரை இங்கேயே இருப்பேன் என்று கூறினான். இராமனை எப்படி வெளியேற்றுவது எனத் தெரியாமல், கந்தனும் அவன் மனைவியும் விழித்தார்கள்......

## 23.12 செயல்திட்டம்

உங்கள் பகுதியிலுள்ள தொண்டு நிறுவனங்களுள் ஏதேனும் ஒன்றின் பணிகள் குறித்துத் தொகுப்பேடு உருவாக்குக.

## பாடம் 24

## 24.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

நீங்கள் செய்த நற்செயலைப் பற்றி வகுப்பில் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 24.2 படிப்போம்

# அறநூல்கள்

மக்கள் தம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய இன்றியமையாத பண்பு, ஒழுக்கம். அவ்வொழுக்க நெறியைப் பின்பற்றுமாறு அறிவுறுத்துவதே அறம். தம்மால் இயன்றதைப் பிறர்க்குக் கொடுத்து உதவுவதும் அறச்செயல்தான். அறம் என்பது மனத்தூய்மை என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். நமது மனம் எப்போதெல்லாம் தூய்மையற்று இருக்கிறதோ அப்போதெல்லாம் அறவழியில் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நீதி, முறைமை என்பனவும் அறத்தையே குறிக்கின்றன. மக்களுக்கு நீதி புகட்டக்கூடிய நூல்களை அறநூல்கள் என்கிறோம். தமிழில் பதினெட்டு நூல்களைக் கொண்ட தொகுப்பிற்குப் பதினெண்கீழ்க்கணக்கு என்று பெயர். அத்தொகுப்பிலுள்ள பதினெட்டு நூல்களுள் பின்வரும் பதினொரு நூல்கள் அறக்கருத்துகளை எடுத்துக் கூறுகின்றன.

1. திருக்குறள்
2. நாலடியார்
3. நான்மணிக்கடிகை
4. இன்னா நாற்பது
5. இனியவை நாற்பது
6. திரிகடுகம்
7. ஆசாரக்கோவை
8. பழமொழி நானூறு
9. சிறுபஞ்சமூலம்
10. முதுமொழிக்காஞ்சி
11. ஏலாதி

உலகப்பொதுமறை என அழைக்கப்படும் திருக்குறளுக்கு அடுத்ததாக எண்ணத்தக்க நூல் நாலடியார். “ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி“ என்னும் பழமொழியில் நாலும் இரண்டும் என்பது, நாலடியாரையும் திருக்குறளையும்

குறிக்கிறது. மேலும், "பழகு தமிழ்ச்சொல் அருமை நால்இரண்டில்" என்ற தொடரும் இவற்றின் பெருமையைக் கூறுகிறது. இவ்விரு நூல்களும் மனித வாழ்வுக்குரிய அறக்கருத்துகளை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. இவற்றைக் கற்பதால் உள்ளம் செம்மைப்படும். இப்பாடப்பகுதியில் நாலடியார் நூலைப்பற்றித் தெரிந்துகொள்வோம்.

நாலடியார் என்னும் இந்நூலில் நானூறு பாடல்கள் உள்ளன. இந்நூலானது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளையும் நாற்பது அதிகாரங்களையும் கொண்டது. 'நாலடி நானூறு', 'வேளாண் வேதம்' என்பன இந்நூலுக்கு வழங்கும் வேறு பெயர்கள். இந்நூலிலுள்ள பாடல்கள் சமண முனிவர்களால் இயற்றப்பட்டன.

நாலடியார், அறக்கருத்துகளைத் தக்க சான்று காட்டி விளக்குகிறது. மிகச் சிறிய ஆலம் விதை, வளர்ந்து ஓங்கித் தழைத்து மிக்க நிழலை உயிரினங்களுக்குத் தந்து உதவுகிறது. அதுபோல, அறம் செய்யும் பொருள் மிகக் குறைவாக இருப்பினும், அது தகுதியுடையவர் கையில் சேர்ந்தால் அதன் பயன் வானத்தைவிட உயர்ந்ததாகும் என அறத்தின் சிறப்பை ஒரு பாடல் விளக்குகிறது.

பெரியோர் நட்பு, பிறைநிலவைப் போன்றது. நாள்தோறும் படிப்படியாக வளரும். சிறியோர் (தகுதியில்லாதவர்) நட்பு முழுநிலவைப் போன்றது. நாள்தோறும் சிறிது சிறிதாகக் குறைந்து, தானே தேய்ந்து போகும் என்னும் கருத்தில் அமைந்துள்ள பாடல், நட்பின் பெருமையை எடுத்துக் கூறுகிறது.

பாலுடன் கலந்த தண்ணீர் பாலாகவே தோன்றுமே அன்றி, நீரின் நிறத்தை வேறுபடுத்திக் காட்டாது. அதுபோல, நற்பண்பு மிக்க பெரியோர்களுடன் சேர்ந்திருக்கும் போது, சிறியோரின் சிறுமைக் குணம் வெளிப்படாது என்னும் கருத்து அமைந்த பாடல், நற்பண்புகளின் சிறப்பை உணர்த்துகிறது.

இவ்வாறு, அறவாழ்வால் வரும் மேன்மையை நாலடியார் மிகச்சிறப்பாக உணர்த்துகிறது. இந்நூல், திருக்குறளுக்கு இணையாக கருதப்படுகிறது. இந்நூலின் பெருமையை உணர்ந்த ஜி.யு.போப் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

## பொருள் அறிவோம்

1. கடைப்பிடித்தல் – பின்பற்றுதல்
2. நெறி – முறை / வழி
3. புகட்டுதல் – அறிவுறுத்துதல்
4. தழைத்து – செழித்து
5. மேன்மை – உயர்வு
6. ஈடாக – ஒப்பாக / சமமாக

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. நாலடியாருக்கு வழங்கப்பெறும் வேறு பெயர்கள் யாவை?
2. "நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்னும் தொடர் குறிப்பிடும் நூல்கள் யாவை?
3. நாலடியாரை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார் ?
4. நட்பின் பெருமையை நாலடியார் எவ்வாறு உணர்த்துகிறது?
5. சிறிய ஆலம் விதையைக் கொண்டு நாலடியார் உணர்த்தும் அறம் யாது?

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'பழகு தமிழ்ச்சொல் நால்இரண்டில்' என நாலடியாரைச் சிறப்பித்துக் கூறும் நூல்

   அ) தனிப்பாடல் ஆ) நாலடியார் இ) திருக்குறள் ஈ) பழமொழி நானூறு

2. நாலடியாரில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை ________.

   அ) 13 ஆ) 40 இ) 29 ஈ) 30

3. வேளாண் வேதம் என அழைக்கப்படும் நூல் ________.

   அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) ஏலாதி ஈ) திரிகடுகம்

4. நாலும் இரண்டும் என்பது ________.

   அ) நாலடியாரும் திருக்குறளும் ஆ) பழமொழி நானூறும் திருக்குறளும்
   இ) பழமொழி நானூறும் நாலடியாரும் ஈ) திரிகடுகமும் நாலடியாரும்

5. பதினெண் கீழ்க்கணக்கில் இடம்பெற்றுள்ள அறநூல்களின் எண்ணிக்கை

   அ) பதினொன்று ஆ) பதினான்கு இ) பதினாறு ஈ) பதினெட்டு

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(பிறைநிலவு, நானூறு, நாலடியார், அறநூல்கள், முழுநிலவு)**

1. மக்களுக்கு நீதி புகட்டும் நூல்களே ________.
2. பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று ________.
3. நாலடியார் என்னும் நூலில் ________ பாடல்கள் உள்ளன.
4. பெரியோருடன் நாம் கொள்ளும் நட்பு ________ போன்றது.
5. சிறியோருடன் நாம் கொள்ளும் நட்பு ________ போன்றது.

### ஈ) சேர்த்து எழுதுக.

1. சொல்லுக்கு + உறுதி = ________
2. நன்மை + பண்பு = ________
3. முழுமை + நிலவு = ________
4. அறம் + கருத்து = ________
5. நான்கு + நூறு = ________

## 24.3 மொழிக்கூறு

### வல்லினம் மிகா இடங்கள்

சொற்கள் ஒன்றோடு ஒன்று சேரும்போது, சில சூழல்களில் இடையில் க், ச், த், ப் ஆகிய வல்லின மெய்யெழுத்துகளுள் ஏதேனும் ஒன்று தோன்றும். அதனை வல்லினம் மிகும் இடங்கள் எனவும் அவ்வெழுத்துகளுள் எதுவும் தோன்றவில்லை எனில், வல்லினம் மிகா இடங்கள் எனவும் அறிந்து கொள்ளலாம். வல்லினம் மிகாமல் வரும் இடங்களைப் பின்வரும் கதைப்பகுதி வாயிலாக அறிந்து கொள்வோம்.

### நாயும் கழுதையும்

ஓர் ஊரில் கழுதையையும் நாயையும் ஒருவன் வளர்த்து வந்தான். நாயைக் கண்டு கழுதை பொறாமை கொண்டது. ஒருநாள், அது தனக்குத்தானே பேசிக்கொண்டது. 'நான் எவ்வளவு சுமை சுமக்கிறேன். ஆனால், என்னுடைய உரிமையாளன் என்னிடத்தில் இரக்கம் காட்டுவதே இல்லை. எப்பொழுது பார்த்தாலும் அடித்து உதைத்துத் தொல்லை கொடுக்கிறான். இவ்வீட்டில் நாயும் இருக்கிறது. அது எந்த வேலையையும் செய்வது இல்லை. உரிமையாளனோ அதன்மீது மிகுந்த அன்பைக் காட்டுகிறான். நான் எவ்வளவு கடினமாக உழைத்தாலும் எனக்குச் சிறிதளவே உணவு தருகிறான். நாய், வீட்டிலுள்ள அனைவரிடத்திலும் கொஞ்சிக் குலாவுகிறது. இரண்டு காலையும் எடுத்து அவர்களுடைய மடி மீதும் வைக்கிறது. அவர்களோடு தானும் விளையாடுகிறது. இவற்றால்தான், நாய்மீது அவர்களுக்கு அன்பு இருப்பதாகத் தெரிகிறது. நானும் நாயைப் போலவே நடந்துகொண்டால் என்னிடத்திலும் அவர்கள் அன்புடன் நடந்துகொள்வார்கள்" என எண்ணியது. ஒருநாள், உரிமையாளன் கட்டிலின்மீது படுத்து உறங்கிக் கொண்டிருக்க, கழுதை தன் இரண்டு காலையும் தூக்கி அவன் தலைமேல் வைத்தது. இச்செயலால் அச்சம் அடைந்த உரிமையாளன் தடி ஒன்றை எடுத்துக் கழுதையை அடித்தான். இந்த நிகழ்வின் மூலம், 'நாம் மற்றவர்களைப் போல் சிறப்படைவதற்குத் தேவையற்ற செயல்களைச் செய்வோமாயின், கிடைக்கும் பலன் இவ்வாறுதான் இருக்கும்." என்பதைக் கழுதை புரிந்து கொண்டது.

மேற்கண்ட கதைப்பகுதியில் வண்ணமிட்ட சொற்களுக்கு இடையே வல்லினம் மிகவில்லை. வல்லொற்று மிகா இடங்களை அறிந்து எழுதுவதற்குப் பல விதிகள் உள்ளன. அவற்றுள் சில விதிகளை இங்கு அறிந்துகொள்வோம்.

#### விதி 1

'அது' என்னும் சுட்டுச் சொல்லின்பின் வல்லினம் மிகாது.

1. அது தனக்குத்தானே

#### விதி 2

எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது.

1. கழுதை பொறாமைகொண்டது (கழுதை என்பது எழுவாய்)
2. கழுதை புரிந்துகொண்டது (கழுதை என்பது எழுவாய்)

#### விதி 3

'எவ்வளவு' என்னும் அளவுப் பெயரின்பின் வல்லினம் மிகாது.

1. எவ்வளவு சுமை சுமக்கிறேன்
2. எவ்வளவு கடினமாக

### விதி 4

இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

1. தொல்லை கொடுக்கிறான் (ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது – தொல்லையைக் கொடுக்கிறான்.)

### விதி 5

இரண்டு என்னும் எண்ணுப்பெயரின்பின் வல்லினம் மிகாது.

1. இரண்டு காலையும்

### விதி 6

மூன்றாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகாது.

1. அவர்களோடு தானும் (ஓடு என்பது மூன்றாம் வேற்றுமை உருபு)

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் சொற்றொடரில் வல்லினமெய் தவறாக மிகுந்துள்ள இடங்களைக் கண்டறிக.

1. என் வீட்டில் பூனை ஒன்று இருந்தது. அதுத் தன் குட்டிகளுடன் பாலைக் குடித்தது.
2. யானை பெரிய விலங்கு. அதுக் காட்டில் வாழும்.
3. இந்த உலகம் எவ்வளவுப் பெரியதாயினும், அதில் வாழும் உயிரினங்களின் வாழ்நாள் மிகக் குறைவே.
4. கபிலன் கடலைத் தின்றான். அது அவனுக்குப் பிடித்திருந்தது.
5. இரண்டுக் குயவர்கள் இணைந்து பத்துப் பானைகளைச் செய்தார்கள்.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சுட்டுச் சொல்லின்பின் வல்லினம் மிகாது என்னும் விதிக்கு எடுத்துக்காட்டு
   அ) அவர்களோடு தானும் ஆ) எவ்வளவு கடினமாக
   இ) தொல்லை கொடுக்கிறான் ஈ) அது தனக்குத்தானே

2. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது என்னும் விதிக்கு எடுத்துக்காட்டு
   அ) இரண்டு காலையும் ஆ) கழுதை பொறாமை கொண்டது
   இ) அவர்களோடு தானும் ஈ) தொல்லை கொடுக்கிறான்

3. இரண்டு என்னும் எண்ணுப்பெயரின்பின் வல்லினம் மிகாது என்னும் விதிக்கு எடுத்துக்காட்டு
   அ) இரண்டு காலையும் ஆ) எவ்வளவு கடினமாக
   இ) அது தனக்குத்தானே ஈ) கழுதை பொறாமை கொண்டது

4. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது என்னும் விதிக்கு எடுத்துக்காட்டு
   அ) இரண்டு காலையும் ஆ) கழுதை பொறாமை கொண்டது
   இ) தொல்லை கொடுக்கிறான் ஈ) அவர்களோடு தானும்

5. மூன்றாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகாது என்னும் விதிக்கு எடுத்துக்காட்டு
   அ) அவர்களோடு தானும் ஆ) எவ்வளவு கடினமாக
   இ) தொல்லை கொடுக்கிறான் ஈ) அது தனக்குத்தானே

## 24.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் குறிப்புச் சொற்களிலிருந்து உரிய சொற்களைக் கண்டறிந்து, கட்டத்தை நிரப்புக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | | 2 | |
| | | 3 | | |
| 4 | | | | 5 |
| | | | | |
| 6 | | | 7 | |

1. வெண்மதி - இப்பெயரில் மறைந்திருக்கும் ஒரு சுடர்
2. அரிவாள்மணை – இப்பெயரில் மறைந்திருக்கும் ஒரு கருவி
3. உருளைக்கிழங்கு – இப்பெயரில் மறைந்திருக்கும் ஓர் வடிவம்
4. குழந்தைகள் – இப்பெயரில் மறைந்திருக்கும் ஒரு தமிழ் மாதம்
5. மல்லிகை – இப்பெயரில் மறைந்திருக்கும் ஓர் உறுப்பு
6. மலைக்குகை – இப்பெயரில் மறைந்திருக்கும் சிங்கத்தின் வாழிடம்
7. திருநெல்வேலி – இப்பெயரில் மறைந்திருக்கும் ஓர் உணவுப்பயிர்

### தகவல்துளி

ஔவையார் இயற்றிய அறநூல்களுள் ஒன்று ஆத்திசூடி. இந்நூலின் சிறப்பு யாதெனில், அகரவரிசை முறையில் பாடல்கள் அமைந்திருக்கும். ஒவ்வொரு பாடலும் ஓர் அடியை மட்டுமே கொண்டிருக்கும். 'அறம் செய விரும்பு' என்பது இதன் முதல் பாடலாகும். ஆத்திசூடியின் சிறப்புணர்ந்து இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட ஆத்திசூடி நூல்கள் தோன்றியுள்ளன. மகாகவி பாரதியார் 'புதிய ஆத்திசூடி' என்னும் பெயரிலும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 'இளையார் ஆத்திசூடி' என்னும் பெயரிலும் எழுதியுள்ளனர். ஆத்திசூடிப் பாடல்கள் மிக எளிமையாகவும் சிறுசிறு தொடர்களாகவும் அமைந்திருப்பதால் அனைவராலும் விரும்பிக் கற்கப்படுகின்றன.



ஔவையார்

## 24.5 கேட்டல் கருத்தறிதல்

### நிலத்தில் கிடைத்த மோதிரம்

அறிவுக்கரசன் என்பவருக்குச் சொந்தமான நிலத்தில், வேலன் கூலிக்காக வேலை செய்து வந்தான். வழக்கம்போல வயலை உழுதுகொண்டிருக்கும் போது, ஒரு தங்க மோதிரத்தைக் கண்டெடுத்தான். வேலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் தான் கண்டெடுத்த மோதிரத்தைத் தன் மனைவியிடம் காட்டினான். அதைப் பார்த்ததும் அவன் மனைவி, தன் காதுக்குக் கம்மல் செய்து போட்டுக்கொள்ள ஆசைப்பட்டாள். "நிலம் அறிவுக்கரசனுக்குச் சொந்தமானது. நான் கூலிக்காகவே உழுகிறேன். நிலத்தில் கிடைப்பது அவரைத்தானே சேரும். நாம் எடுத்துக் கொள்வது அவருக்குத் துரோகம் செய்வதாகும்" என்றான் வேலன்.

கணவன் கூறியதில் மனைவிக்கு உடன்பாடில்லை. "அறிவுக்கரசனுக்கு எப்படித் தெரியும்? அவர் வந்து பார்த்தாரா?" என்று அவள் வேலனிடம் வாதாடினாள். இருவருக்கும் இரவு முழுதும் தூக்கம் வரவில்லை. "அறிவுக்கரசன் வந்து பார்க்கவில்லைதான். ஆனாலும் என் மனச்சாட்சி உறுத்துகிறது" என்று கூறிவிட்டு, காலையில் எழுந்தவுடன் அறிவுக்கரசனைப் போய்ப் பார்த்தான் வேலன். அவரிடம் உண்மையைக் கூறினான். அவன் கூறியதைக் கேட்ட அறிவுக்கரசன் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, "நிலம் என்னுடையதாக இருக்கலாம். ஆனால் உன் உழைப்பினால் கிடைத்தது இந்த மோதிரம். நீ நிலத்தை உழவில்லையெனில் இந்த மோதிரம் வெளியே வருவதற்கு வாய்ப்பே இல்லை. மேலும் கிடைத்த மோதிரத்தை நீயே எடுத்துக் கொள்ளாமல் என்னிடம் வந்து கொடுத்திருக்கிறாய். உன்னுடைய நேர்மை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அதனால் இந்த மோதிரத்தை உனக்கே பரிசாகத் தருகிறேன்" என்று அவனை வாழ்த்தி அனுப்பினார்.

### வினாக்கள்

1. வேலன் என்ன வேலை செய்து வந்தான்?
2. வேலன் நிலத்தை உழும்போது, எதனைக் கண்டெடுத்தான்?
3. மோதிரத்தைப் பார்த்ததும் வேலனின் மனைவி என்ன கூறினாள்?
4. மனைவி கூறியதற்கு வேலன் அளித்த மறுமொழி யாது?
5. வேலனுக்குத்தான் மோதிரம் சொந்தம் என அறிவுக்கரசன் ஏன் கூறினார்?

## 24.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 24.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

–(குறள் 124)

–திருவள்ளுவர்

(திரியாது - மாறாது; மாணப் பெரிது – மிகவும் பெரிது)

**பொருள்:**

தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வைவிட மிகப் பெரியதாகும்.

**பழமொழி**

செய்வன திருந்தச் செய்

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. சான்றோர் இனத்திரு
2. சூது விரும்பேல்
3. நன்மை கடைப்பிடி
4. நூல் பல கல்
5. ஊருடன் கூடி வாழ்

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. ஒழுக்கம்
2. புகழ்
3. பெருமை

## 24.8 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. கடைப்பிடித்தல் | – | Adherence |
| 2. அறம் | – | Charity |
| 3. தகுதி | – | Eligibility |
| 4. ஒழுக்கம் | – | Discipline |
| 5. மனத்தூய்மை | – | Purity of mind |
| 6. சிறுமைக்குணம் | – | Pettiness |
| 7. மேன்மை | – | Superiority |
| 8. நெறி | – | Part of virtue |
| 9. பிறைநிலவு | – | Crescent moon |

## 24.9 மொழிபெயர்ப்போம்

எளிமை என்பது ஓர் அறம். அது உயர்ந்த விழுமியம் ஆகும். எளிய வாழ்க்கை நடத்துவோர் தூய்மையான உள்ளம் கொண்டவர்கள். மகாத்மா காந்தி, விவேகானந்தர், டால்ஸ்டாய் போன்றோர் தம் வாழ்நாள் முழுவதும் எளிய வாழ்க்கையைப் பின்பற்றினர்.

## 24.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**படங்களை வரிசைப்படுத்திக் கதை உருவாக்குக.**







## 24.11 உயர்நிலைத்திறன்

**பின்வரும் அழைப்பிதழைப் புரிந்துகொள்ளும் வகையில் வினாக்கள் உருவாக்குக.**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

நடத்தும்

**இலக்கியங்களில் அறக்கோட்பாடு**

ஒரு நாள் கருத்தரங்கம் - அழைப்பிதழ்

நாள் : 09.01.2023 | நேரம் : காலை 09.00 மணி

இடம் : உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை



**நிகழ்ச்சி நிரல்**

| | | | | |
|---|---|---|---|---|
| வரவேற்புரை | : | திரு. பிரான்சிஸ் கிருபாகர் | | |
| தலைமை உரை | : | திருமதி சுப்ரஜா, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். | | |
| அறிமுக உரை | : | திரு. ஷேக் முகமது, சிங்கப்பூர் தமிழ்ச்சங்கம் | | |
| கருத்தாளர்கள் | : | முனைவர் ராமன் | - | சிலப்பதிகாரத்தில் அறக் கோட்பாடுகள் |
| | | ஆய்வாளர் மகிழ்மதி | - | உலக இலக்கியங்களில் நீதி |
| | | முனைவர் இப்ராஹிம் | - | கிரேக்க அறிஞர் ஹிராக்ளிடஸ் |
| நன்றியுரை | : | திருமதி பாத்திமா பாபு | | |

**அனைவரும் வருக! ஆதரவு தருக!**

### வினாக்கள்

1. ______________________________?

2. ______________________________?

3. ______________________________?

4. ______________________________?

5. ______________________________?

## 24.12 செயல்திட்டம்

உங்களுக்குத் தெரிந்த திருக்குறள் பத்தினை தொகுத்து விளக்கத்தாளில் (Chart paper) எழுதித் திருக்குறள் சுவடி தயாரித்து வருக.

## மீள்பார்வை

### 1. கோடிட்ட இடங்களுக்குப் பொருந்தும் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(பாரி, பொருநை, ஓரி, சுஜாதா, வில்லுப்பாட்டு)

1. தமிழ்நாட்டு நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்று ________________.
2. அறிவியல் புனைகதை எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் ________________.
3. வில் வித்தையில் சிறந்த வள்ளல் ________________.
4. தமிழ்நாட்டில் இன்று தாமிரபரணி என்று அழைக்கப்படும் ஆற்றின் முந்தைய பெயர் ________________.
5. முல்லைக் கொடிக்குத் தன் தேரைக் கொடுத்த வள்ளல் ________________.

### 2. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரியில் விடை எழுதுக.

1. உயிர் காக்கும் வங்கி என்றால் என்ன?
2. இயற்கை மொழி ஆய்வு என்றால் என்ன?
3. அகழாய்வு என்றால் என்ன? இந்தியாவில் முதல் அகழாய்வு எங்கு நடைபெற்றது?
4. குறிப்புப் பெயரெச்சம் என்றால் என்ன? இரண்டு எடுத்துக்காட்டு தருக.
5. அறம் என்றால் என்ன?

### 3. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. பாடிய பெண் | - | ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சம் |
| 2. வரையாது நின்றாள் | - | குறிப்புப் பெயரெச்சம் |
| 3. அழாக் குழந்தை | - | எதிர்மறை வினையெச்சம் |
| 4. ஓடாத குதிரை | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| 5. நல்ல மாணவன் | - | உடன்பாட்டுப் பெயரெச்சம் |

### 4. கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக.

1. பொருநை ஆற்றங்கரை நாகரிகம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. ( )
2. செஞ்சிலுவைச் சங்கம் 1916இல் உருவாக்கப்பட்டது. ( )
3. இரத்த தானம் 6 மாதத்திற்கு ஒருமுறை மட்டுமே வழங்கவேண்டும். ( )
4. முதல் வேற்றுமை உருபு 'ஐ' ஆகும். ( )
5. காடுகளின் கலைக்களஞ்சியம் என்று புகழப்பட்டவர் துளசி கவுடா. ( )

### 5. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. "ஆற்றுப் பெருக்கற்று" எனத் தொடங்கும் நல்வழிப் பாடலை எழுதுக.
2. எதிர்மறைப் பெயரெச்சத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. வேற்றுமைத்தொகை என்றால் என்ன?
4. வினைமுற்று என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
5. கண் வங்கியை முதன்முதலில் தொடங்கியவர் யார்? எங்கு எந்த ஆண்டு தொடங்கினார்?

**6. கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு தொடர்களை உருவாக்குக.**

1. விழிப்புணர்வு - ________________.
2. சொற்களஞ்சியம் - ________________.
3. கொடை - ________________.
4. துறைமுகம் - ________________.
5. முதுமக்கள் தாழி - ________________.

**7. கீழ்க்காணும் உரைப்பகுதியில் கோடிட்ட இடங்களைப் பொருத்தமான உவமைத்தொடர் கொண்டு நிரப்புக.**

**(மலரும் மணமும், இலைமறைகாய், கொழுகொம்பற்ற கொடி)**

தமிழும் வேலனும் நெருங்கிய நண்பர்கள். பள்ளியில் ஆசிரியர்களும் மாணவர்களும் இவர்கள் இருவரின் நட்பை ________________ போல என்பார்கள். தமிழுக்கு நன்றாகப் பாடத் தெரியும். ஒரு நாள் பள்ளியில் பாட்டுப் போட்டி நடைபெறப் போவதாக அறிவித்தனர். இதை அறிந்த தமிழ், தன் பெயருடன் தன் நண்பன் பெயரையும் சேர்த்துக் கொடுத்தான். ஆனால், போட்டி நடைபெறும் நாள் அன்று தமிழுக்கு உடல்நிலை சரியில்லை. எனவே, அவனால் போட்டியில் பங்கேற்க முடியவில்லை. தமிழ், போட்டியில் பங்கேற்க முடியாது என்று அறிந்துகொண்ட வேலன் தன் நண்பனின் நிலையை எண்ணி ________________ போலத் துடித்தான். மேலும் தன்னம்பிக்கை இழக்காத வேலன் போட்டியில் பங்குபெற்று முதல் பரிசை வென்றான். இதைக் கண்ட அனைவரும் வேலனின் திறமை இதுவரை ________________ போல யாருக்கும் தெரியாமல் இருந்ததை எண்ணி வருத்தம் கொண்டனர்.

**8. பின்வரும் விடுகதைகளுக்குச் சரியான விடையைக் கண்டறிந்து எழுதுக.**

1. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?
3. சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது. அது என்ன?
4. கடல் நீரில் வளர்ந்து மழை நீரில் மடிவது எது?
5. சொன்ன நேரத்துக்குத் தொண்டை கிழியக் கத்துவான். அவன் யார்?

**9. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பொருநை ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ள ஊர் எது?
   அ) தஞ்சாவூர் ஆ) சிவகளை இ) சிவகாசி ஈ) புதுக்கோட்டை
2. அதியமானிடமிருந்து நெல்லிக்கனியைப் பெற்றவர்________________.
   அ) ஔவையார் ஆ) திருவள்ளுவர் இ) அகத்தியர் ஈ) பாரதியார்
3. வேளாண் வேதம் என அழைக்கப்படும் நூல்________________.
   அ) திருக்குறள் ஆ) ஏலாதி இ) திரிகடுகம் ஈ) நாலடியார்
4. துளசி கவுடா எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?
   அ) கேரளா ஆ) தமிழ்நாடு இ) கர்நாடகா ஈ) உத்திரப் பிரதேசம்
5. புதிய ஆத்திசூடியை எழுதியவர் யார்?
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) ஔவையார் ஈ) இராமலிங்கனார்

## 10. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வல்லினம் மிகா இடங்களுக்குக் கூறப்படும் விதிகளுள் எவையேனும் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
2. நாலடியார் என்பது எத்தகைய நூல்? விளக்குக?
3. வழுவமைதி என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. கடலில் செல்லும் மரக்கலன்களைக் குறிக்கும் வெவ்வேறு பெயர்களை எழுதுக.
5. மொழியியல் குறித்து விளக்குக.

## 11. பழமொழிகளை நிரப்புக.

1. ஆறில்லா ________________ அழகு பாழ்.
2. அறம் ________________ விரும்பு.
3. கடுகு சிறுத்தாலும் காரம் ________________.
4. அகத்தின் அழகு ________________ தெரியும்.
5. செய்வன திருந்தச் ________________.

## 12. பின்வரும் திருக்குறளில் விடுபட்ட சொல்லைக் கண்டறிந்து நிரப்புக.

1. நிலையின் திரியாது அடங்கியான் ________________
   மலையினும் மாணப் பெரிது.
2. வருமுன்னர்க் ________________ வாழ்க்கை எரிமுன்னர்
   வைத்தூறு போலக் கெடும்.
3. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
   மெய்ப்பொருள் ________________ அறிவு.
4. உருவுகண்டு ________________ வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
   அச்சாணி அன்னார் உடைத்து.
5. உதவி வரைத்தன்று உதவி உதவி
   செயப்பட்டார் ________________ வரைத்து.

## 13. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.

1. Expectation - ________________
2. Antiquities - ________________
3. Mercury - ________________
4. Scanner - ________________
5. Data center - ________________
6. Transplantation - ________________
7. Allergy - ________________
8. Programming - ________________
9. Syntax - ________________
10. Semantics - ________________

**14. பின்வரும் விளம்பரத்தைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

## வேந்தன் சிலம்பக்கலைப் பயிற்சிக் கூடம்

இணைப்பு : சென்னை மாவட்ட சிலம்பாட்டக் கழகம், தமிழ்நாடு சிலம்பாட்டக் கழகம், இந்திய சிலம்ப சம்மேளனம்

அங்கீகாரம் : தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

எங்களிடம் சிறந்த முறையில் போர்க்கலை சிலம்பம், மான்கொம்பு, வாள்கேடயம், அலங்காரச் சிலம்பம், வாள் வீச்சு, சுருள்வாள் வீச்சு, வேல்கம்பு மற்றும் தொடுமுறை சிலம்பம் கற்றுத்தரப்படும்.



நாள் : 09.07.2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 7.00 - 9.00 மணி வரை
இடம் : தமிழ் இணையக் கல்விக்கழகம், கோட்டூர், சென்னை - 25.

### வினாக்கள்

1. சிலம்பக்கலைக் கூடத்தின் பெயர் என்ன?
2. 'வேந்தன் சிலம்பக்கலைப் பயிற்சிக் கூடம்' எந்தச் சிலம்பாட்டக் கழகத்தோடு இணைக்கப்பட்டுள்ளது?
3. சிலம்பக் கூடத்திற்கு அங்கீகாரம் வழங்கும் அமைப்பு எது?
4. சிலம்பப் பயிற்சியில் என்னென்ன முறைகள் கற்றுத்தரப்படுகின்றன?
5. வேந்தன் சிலம்பக் கலைக்கூடத்தின் நிகழ்ச்சி எங்கு எப்பொழுது நடைபெறுகிறது?

**15. கீழ்க்காணும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. Archaeological theory helped excavators look at excavation sites more objectively, without placing their own opinions on pieces of the puzzle.
2. Scientific ideas also merged with the ancient Tamils as they tended to adapt their lives to nature. They have lived with biological, astronomical, mathematical, medical, biological, chronological, craft, geological, scientific etc. disciplines
3. Natural Language Processing, is a combination of Computer Science, Human language, and Artificial Intelligence. It is the technology that is used by machines to understand and analyse, human languages.
4. Morality is a set of values, beliefs and principles that guide an individual's behavior and decisions. It is a code of conduct that is commonly accepted in a particular society or culture.
5. Organ donation is the process of surgically removing an organ or tissue from one person and placing it into another person. Transplantation is necessary because the recipient's organ has failed or has been damaged by disease or injury.

பாடம்

25

## 25.1 பேசுவோம்




### கலந்துரையாடுவோம்

நமது உடல் நலத்திற்கு நன்மை விளைவிக்கும் உணவுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 25.2 படிப்போம்

## உடல்நலம் காப்போம்

உலகில் வாழும் உயிர்களுள் மனித இனம் சிறப்பு வாய்ந்தது. **"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"** என்று ஔவையார் கூறியுள்ளார். இத்தகைய மனித இனம் நல்ல உடல்நலத்தையும் மனநலத்தையும் பெற்றிருப்பது மேலும் சிறப்பாக அமையும். நோய் அணுகாது வாழ்ந்தால் நல்ல உடல்நலத்தைப் பெறலாம். உடல்நலம் என்பது, ஒருவரின் உடல், மனம் ஆகிய இரண்டும் நலத்துடன் இருப்பதைக் குறிக்கும்.

### உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு

உடலுக்கும் உயிருக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. இதன் சிறப்பை உணர்ந்தே, **"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"** என்று திருமூலர் பாடியுள்ளார். உடலும் உயிரும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படுகின்றன. உடல்நலம் உயிருக்கு நன்மையையும் உடல்நலம் இன்மை உயிருக்குத் தீமையையும் ஏற்படுத்துகின்றன. உடலும் உயிரும் ஒன்றிணைந்து செயல்படுவதால் நாம் நோய் நொடியின்றி நெடுநாள் வாழ்கிறோம். இதற்குப் பல்வேறு காரணிகள் உள்ளன. சத்தான உணவு, ஓய்வு, உடற்பயிற்சி, மருத்துவப் பரிசோதனை, சுற்றுச்சூழல் ஆகியவை இன்றியமையாத காரணிகளாக உள்ளன.

### உடல் நலம் காக்கும் உணவுகள்



நாம் உடல்நலத்துடன் வாழச் சத்து மிகுந்த உணவுகளை உண்ண வேண்டும். பழங்களுள் மா, பலா, வாழை, நாவல், நெல்லி, இலந்தை, மாதுளை, பப்பாளி, கொய்யா முதலியவை சத்துள்ளவை.

கீரைகளுள் முருங்கை, பொன்னாங்கண்ணி, கரிசாலை, சிறுகீரை, அகத்தி முதலியவற்றை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். பாசிப்பயறு, அவரை, மொச்சை போன்ற பயறு வகைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். சிறுதானியங்களான வரகு, சாமை, தினை, கேழ்வரகு, கம்பு போன்றவை உடலுக்கு மிகவும் நன்மை தரும் உணவுகளாகும். 'ஊன்' விரும்புபவர்கள் அளவோடு சேர்த்துக் கொள்ளலாம். இத்தகைய சத்தான உணவுகளை அனைவரும் உண்டு உடல்நலத்தைப் பேணவேண்டும்.

### உணவு உண்ணும் முறை

நாம் நினைத்த நேரத்தில் உணவை உண்ணக் கூடாது. நன்கு பசித்த பிறகே உணவை உண்ணவேண்டும். அளவோடு உண்பது நலம் தரும். மேலும், உணவினை நன்றாக மென்று நொறுங்க உண்ணவேண்டும். **'நொறுங்கத் தின்றால் நூறு வயது'** என்பது பழமொழி. உணவு உண்ணும் முறைகளைச் சரியாகப் பின்பற்றினால் நம்

உடலுக்கு நோய் ஏற்படாது; அதனால், தேவையற்ற மருந்துகளை உண்ணும் நிலையும் ஏற்படாது என்பதை **"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு..."** என்னும் குறளின் மூலம் திருவள்ளுவர் விளக்கியுள்ளார்.

### உடலைப் பேணுவதால் ஏற்படும் நன்மைகள்

உடலானது உயிரின் கூடாகவும், உணர்வுகளின் வீடாகவும் விளங்குகிறது. இத்தகைய உடலை நாம், நன்முறையில் பேணுதல் வேண்டும். உடலைப் பேணுவதால் உடல் வளர்ச்சி சீராக இருக்கும்; உடலுக்குத் தேவையான ஆற்றல் கிடைக்கும்; நோய் எதிர்ப்புச் சக்தி உண்டாகும்.

### உடலைப் பேணும் முறைகள்



இளமைக் காலத்தில் பேணப்படும் உடல் நலமே முதுமைக் காலத்தில் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் வழங்கும். சரியான தூக்கம், முறையான உடற்பயிற்சி, தியானம் ஆகியவை உடலுக்கு வலிமை சேர்க்கும். உடற்பயிற்சி செய்வதற்குக் காலை நேரமே சிறந்தது. உடல்நலம் காப்பதில் நடைப்பயிற்சி என்பது அனைவராலும் எளிமையாக கடைப்பிடிக்க கூடியதாகும். அது மட்டுமில்லாமல் தேவையான ஓய்வையும் மேற்கொண்டால் மேலும் நன்மை விளையும். தியானம் செய்யும்போது மூளையும் உள்ளமும் ஒருநிலைப்படுவதால் கட்டுப்பாடு அதிகரிக்கிறது. இதனால் தெளிவான முடிவுகள் எடுக்கவும் முடிகிறது.

**'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்'** என்னும் பழமொழி, நல்ல உடல்நலத்தின் சிறப்பைக் குறிக்கிறது. நல்ல உடல்நலம் வேண்டுமெனில் உடல் இயக்கம் சரியாக நடைபெற வேண்டும். அதற்கு உயிர்ச்சத்துகள் தேவை. ஆகையால், உயிர்ச்சத்துகள் நிறைந்த உணவுகளை உண்டு, உடல் வளம் பெறுவோம். மனநலத்தையும் காத்து, நோய் அணுகாமல் நீடூழி வாழ்வோம்.

## பொருள் அறிவோம்

1. மானிடர் – மனிதர்
2. அணுகாது – சேராது
3. பேணுதல் – காத்தல்
4. யாக்கை – உடல்
5. உயிர்ச்சத்துகள் – விட்டமின்கள்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. உடல் நலமுடன் வாழ்வதற்கான அடிப்படைக் காரணிகள் யாவை?
2. உடல் நலத்தைக் காக்கும் உணவு வகைகளை எழுதுக.
3. உடம்பைப் பேணுவதால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?
4. உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு யாது?
5. உணவு உண்ணும் முறை பற்றி எழுதுக.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே' என்று கூறியவர் ________.

அ) திருமூலர் ஆ) திருவள்ளுவர்
இ) கணிமேதாவியார் ஈ) ஔவையார்

2. 'நொறுங்கத் தின்றால் நூறு வயது' என்னும் பழமொழியின் பொருள் ________.

அ) மிகுதியாக உண்ணவேண்டும் ஆ) குறைவாக உண்ணவேண்டும்
இ) விரைவாக உண்ணவேண்டும் ஈ) மெதுவாக மென்று உண்ணவேண்டும்

3. உடற்பயிற்சி செய்வதற்கு ஏற்ற பொழுது ________.

அ) காலை ஆ) நண்பகல் இ) மாலை ஈ) இரவு

4. யாக்கை என்பதன் பொருள் ________.

அ) உணவு ஆ) உயிர் இ) உடல் ஈ) மனம்

5. ஊக்கம் என்பதன் பொருள் ________.

அ) செல்வம் ஆ) முயற்சி இ) உடல்நலம் ஈ) மனநலம்

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(ஔவையார், மூளையும் உள்ளமும், வரகு, மொச்சை, நடைப்பயிற்சி)**

1. தியானம் செய்யும்போது ________ ஒருநிலைப்படும்.
2. அனைவராலும் செய்யக்கூடிய எளிய பயிற்சி ________.
3. "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" எனக் கூறியவர் ________.
4. சிறுதானிய வகைகளுள் ஒன்று ________.
5. பயறு வகைகளுள் ஒன்று ________.

### ஈ) பொருத்துக

1. மா, பலா, வாழை – கீரைகள்
2. வரகு, சாமை, கம்பு – பயறு வகைகள்
3. அவரை, மொச்சை – பழங்கள்
4. முருங்கை, அகத்தி – சிறுதானியங்கள்

### உ) சேர்த்து எழுதுக.

1. உடல் + பயிற்சி = ________
2. உடல்நலம் + இன்மை = ________
3. நெடுமை + நாள் = ________
4. சத்து + உள்ளவை = ________
5. நோய் + எதிர்ப்பு = ________

## 25.3 மொழிக்கூறு

### திணை, பால், எண், இடம், காலம் காட்டும் விகுதிகள்

**திணை, பால், எண், இடம், காலம் விகுதி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **சான்று** | வந்தவன்/ வந்தான் | வந்தவள்/ வந்தாள் | வந்தனர்/ வந்தார்கள் | வந்தது | வந்தன/ வாரா |
| **விகுதி** | அன்/ஆன் | அள் / ஆள் | அர் / ஆர் | து | அ/ஆ |
| **திணை** | உயர்திணை | உயர்திணை | உயர்திணை | அஃறிணை | அஃறிணை |
| **பால்** | ஆண் பால் | பெண் பால் | பலர் பால் | ஒன்றன் பால் | பலவின் பால் |
| **எண்** | ஒருமை | ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
| **இடம்** | படர்க்கை | படர்க்கை | படர்க்கை | படர்க்கை | படர்க்கை |
| **காலம்** | இறந்த காலம் | இறந்த காலம் | இறந்த காலம் | இறந்த காலம் | இறந்த காலம் |



## பயிற்சிகள்

அ) கொடுக்கப்பட்ட படத்திலிருந்து திணை, பால், எண், இடம் ஆகியவற்றை எழுதுக.




1. திணை ____________________
2. பால் ____________________
3. எண் ____________________
4. இடம் ____________________
5. காலம் ____________________
6. விகுதி ____________________

ஆ) கீழ்க்காணும் சொற்களைக்கொண்டு உயர்திணை/ அஃறிணை கண்டறிக.

1. வந்தவன் – ____________________
2. பாடினாள் – ____________________
3. மேய்ந்தது – ____________________
4. படித்தனர் – ____________________
5. உண்டன – ____________________

## இ) வந்தான் என்னும் சொல் காட்டும் காலம், பால், திணை ஆகியவற்றைக் காண்க.

1. வந்தான் என்பது ________________ காலம்.

2. வந்தான் என்பது ________________ பால்.

3. வந்தான் என்பது ________________ திணை.

## ஈ) விடை காண்போம்

1. திணை எத்தனை வகைப்படும்?
2. மான் என்ற சொல் எந்தத் திணைக்கு உரியது?
3. பால் எத்தனை வகைப்படும்?
4. பெண்பால் விகுதிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. 'சென்றான்' என்னும் சொல்லுக்குத் திணை, பால், எண், இடம் ஆகியவற்றைச் சுட்டுக.

## உ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(இறந்தகாலம், அஃறிணை, ஆன், பெண்பால், படர்க்கை)**

1. வந்தான் என்பதில் உள்ள விகுதி ________________ ஆகும்.
2. வந்தார் என்னும் சொல் ________________ காலத்தைக் காட்டுகிறது.
3. வந்தது என்னும் சொல் காட்டுவது ________________ திணை ஆகும்.
4. படித்தனர் என்னும் சொல் காட்டும் இடம் ________________ ஆகும்.
5. வென்றாள் என்னும் சொல்லில் இடம்பெற்றுள்ள பால் ________________ ஆகும்.

## ஊ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. வந்தான் | – | பெண்பால் |
| 2. வருவாள் | – | பலர்பால் |
| 3. மேய்ந்தது | – | பலவின்பால் |
| 4. படித்தனர் | – | ஒன்றன்பால் |
| 5. உறங்கின | – | ஆண்பால் |

### தகவல்துளி

ஆஸ்திரியாவைச் சேர்ந்த கார்ல் லாண்ட்ஸ்டீனர் (Karl Landsteiner) என்ற உயிரியல் வல்லுநரும் மருத்துவரும் ஆன இவர் இரத்தத்தின் வகைகள் எத்தனை என்பதைக் கண்டறிந்தார். மனித உடலில் காணப்படும் இரத்த வகைகளைப் பிரித்து முதன் முதலில் அறிவித்தவர் இவரே. எனவே இவருடைய பிறந்தநாளான ஜூன் 14, உலக இரத்த தானமளிப்போர் நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆய்விற்காக கார்ல் லாண்ட்ஸ்டீனருக்கு 1930ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

## 25.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் விடுகதைகளுக்குரிய விடைகளின் எழுத்துகள் இடம் மாறியுள்ளன. அவற்றைக் கண்டறிக.**

1. ஊருக்கெல்லாம் ஒரே கூரை.

| | | |
|---|---|---|
| ன | வா | ம் |

| | | |
|---|---|---|
| | | |

2. ஓட்டமாய் ஓடும். உருண்டு உருண்டு ஓடும்.
பள்ளத்தைக் கண்டால் பாய்ந்து பாய்ந்து ஓடும்.

| | | | |
|---|---|---|---|
| ணீ | ண் | த | ர் |

| | | | |
|---|---|---|---|
| | | | |

3. மனிதன் போடாத பந்தலில்
மலர்ந்திருக்கும் பூக்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | ண் | மீ | வி | ள் | ன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

4. உயிர் இல்லாப் பறவை ஊரைச் சுற்றி வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| ர் | னூ | வா | தி |

| | | | |
|---|---|---|---|
| | | | |

5. ஆயிரம் தச்சர் கூடி, அழகான மண்டபம் கட்டி,
ஒருவர் கண்பட்டு உடைந்ததாம் மண்டபம்.

| | | | |
|---|---|---|---|
| டு | ன் | கூ | தே |

| | | | |
|---|---|---|---|
| | | | |

## 25.5 கேட்டல் கருத்தறிதல்

### உணவே மருந்து

உடல் எடை குறைய, உடலிலுள்ள தேவையற்ற கொழுப்புகளைக் குறைக்கவேண்டும். கொழுப்புகளைக் குறைப்பதற்கு, சமையலில் அன்றாடம் பயன்படுத்தும் பூண்டு, வெங்காயம் ஆகியவை உதவுகின்றன. இவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். சோம்பு கலந்த தண்ணீரைக் குடிக்கலாம். இதனால், விரைவிலேயே உடலிலுள்ள கொழுப்பு குறைந்து, உடல் அழகான வடிவத்தைப் பெறும். சுரைக்காய் வயிற்றுச் சதையைக் குறைப்பதில் அதிகப்பங்கு வகிக்கிறது. அதனால், சுரைக்காயை வாரத்திற்கு ஒரு முறையாவது உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். வாழைத்தண்டுச் சாறும் அறுகம்புல் சாறும் உடல் எடையைக் குறைக்கின்றன. மேலும், நாம் நாள்தோறும் நடைப்பயிற்சி, உடற்பயிற்சி ஆகியவற்றை மேற்கொள்வதும் உடல் எடையைக் குறைக்க உதவும்.

### வினாக்கள்

1. உடலில் எடை கூடக் காரணம் என்ன?
2. உடலில் தேவையற்ற கொழுப்புகளைக் கரைக்கும் உணவுப்பொருள்கள் யாவை?
3. சோம்பு கலந்த நீரைக் குடிப்பதால் ஏற்படும் நன்மை யாது?
4. சுரைக்காயின் பயனைக் கூறுக.
5. உடல் எடையைக் குறைக்க, நாம் மேற்கொள்ள வேண்டிய பயிற்சிகள் யாவை?

## 25.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 25.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

– (குறள் 948)
– திருவள்ளுவர்

(நோய்நாடி – நோயை ஆராய்ந்து; தணிக்கும் – குறைக்கும்)

பொருள்:

நோய் எது என ஆராய்ந்து, அதற்கான காரணத்தை ஆராய்ந்து, அதனைக் குறைக்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்குப் பொருந்தும் படியாக மருத்துவம் செய்ய வேண்டும்.

பழமொழி

சீரகம் இல்லா உணவு சிறக்காது

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

உணவு, உடலுக்கு ஆற்றலைத் தருகிறது; உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது; உறுப்புகள் தேய்ந்து அழிந்துவிடாமல் பாதுகாக்கிறது; உடலில் உண்டாகும் நோய்க்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. ஆற்றல்
2. ஊக்கம்
3. மனநலம்

## 25.8 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. உடல்நலம் | – | Health |
| 2. மனநலம் | – | Mental health |
| 3. மருத்துவப் பரிசோதனை | – | Medical Check-up |
| 4. சுற்றுச்சூழல் | – | Environment |
| 5. உடற்பயிற்சி | – | Exercise |
| 6. சத்தான உணவு | – | Nutritious food |
| 7. ஊன் | – | Meat |
| 8. ஆற்றல் | – | Energy |
| 9. நோய் எதிர்ப்புச்சக்தி | – | Immunity |
| 10. தியானம் | – | Meditation |

## 25.9 மொழிபெயர்ப்போம்

உணவில் அடங்கியுள்ள சத்துகளின் அளவை வைத்து மாவுப் பொருள்கள், கொழுப்பு, புரதம், உயிர்ச்சத்துகள், நீர், தாது உப்புகள் என உணவை ஆறு வகையாகப் பிரிக்கலாம்.

## 25.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் படக்காட்சிகளை இணைத்துக் கதை கூறுக.**



## 25.11 உயர்நிலைத்திறன்

**செய்தித்தாளில் இடம்பெற்றுள்ள செய்தியைப் படித்துச் சுருக்கிக் கூறுக.**

# அமைதியை வலியுறுத்தும் காகித கொக்குகள்

## பேரணி சென்று பள்ளி மாணவர்கள் அசத்தல்

**ஆனைமலை, நவ. 16–**

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, ஆயிரம் காகித கொக்குகள் தயாரித்து, உலக அமைதியை வலியுறுத்தி, பெத்தநாயக்கனூர் அரசுப்பள்ளி மாணவர்கள் ஊர்வலம் சென்றனர்.

ஆனைமலை அடுத்த பெத்தநாயக்கனூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஒவ்வொரு மாதமும், 'திறம்படக்கேள்' நிகழ்ச்சி நடத்தி மரபு விளையாட்டுகள், நாட்டுப்புற கலைகள், சூழல் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர்.

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, 16வது 'திறம்படக்கேள்' நிகழ்ச்சி கொண்டாடப்பட்டது. வித்தியாசமான முறையில், குழந்தைகள் தினத்தை கொண்டாடினர்.

ஜப்பானின் ஹிரோஷிமா பகுதியில் இரண்டாம் உலகப்போரின் போது, அமெரிக்கா அணுகுண்டு வீசியதில், ஜப்பான் சிறுமி சடகோ சசாகி, கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டு இறந்தார். அவருக்கு ஹிரோஷிமா நகரின் மையப்பகுதியில் நினைவாலயம் அமைத்து




■ பெத்தநாயக்கனூர் அரசு உயர்நிலை பள்ளியில், குழந்தைகள் தினத்தை முன்னிட்டு ஆயிரம் காகித கொக்குகளுடன் மாணவர்கள் பேரணியாக சென்றனர்.

அதற்கு, 'குழந்தைகள் அமைதி நினைவாலயம்' என பெயர் சூட்டப்பட்டது.

நினைவாலயத்துக்கு வரும் ஒவ்வொருவரும் உலக அமைதி வேண்டி, 'ஓரிகாமி' எனப்படும் காகித கொக்கு தயாரித்து வைக்கின்றனர்.

பெத்தநாயக்கனூர் அரசுப்பள்ளி மாணவர்கள், ஆயிரம் காகித கொக்குகள் தயாரித்து, அதை கயிற்றில் கட்டி, உலக அமைதியை வலியுறுத்தி, ஆயிரம் கொக்குகளுடன் பள்ளியில் இருந்து, மூன்று கிலோ மீட்டர் தொலைவுக்கு பேரணி சென்றனர்.

விழாவில், பள்ளி தலைமை ஆசிரியை உமா மகேஸ்வரி, தமிழாசிரியர் பாலமுருகன் மற்றும் 'ஓரிகாமி' கலைஞர் தியாகசேகர் கலந்து கொண்டனர்.

தமிழாசிரியர் கூறுகையில், ''குழந்தைகள் மீதான வன்முறை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. உலகில் எப்போதும் அமைதியான சூழல் நிலவ, குழந்தைகள் தினத்தில் அமைதியை வலியுறுத்தி, அமைதிச் சின்னமான கொக்குகள் தயாரித்து, கயிற்றில் பறக்க விடப்பட்டன. மாணவர்களிடம் அமைதி குறித்த சிந்தனையை மேலோங்கச் செய்ய, இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன,'' என்றார்.

## 25.12 செயல்திட்டம்

முப்பரிமாண வடிவில் சரிவிகித உணவு பிரமிடை உருவாக்கி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

பாடம் 26

## 26.1 பேசுவோம்




## கலந்துரையாடுவோம்

உங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும் வளங்கள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 26.2 படிப்போம்

# உயிர் காத்த மருத்துவர்
# (வானொலி உரைச்சித்திரம்)

அனைவருக்கும் வணக்கம். இன்று ஜூலை 1. இந்நாளைத் தேசிய மருத்துவர்கள் நாளாகக் கொண்டாடுகிறோம். இந்நன்னாளில் தன்னலம் அற்ற மருத்துவர் ஒருவரை உங்களிடையே அறிமுகம் செய்வதில், பிபிசி வானொலி நிலையம் பெருமை கொள்கிறது.



**மருத்துவர் சாந்தா அம்மையார்**
**(1927–2021)**

மருத்துவத் தொழிலை அறம் காக்கும் சேவையாகச் செய்தவர், ஒரு நூற்றாண்டின் ஈடுஇணையற்ற வரலாறாக வாழ்ந்தவர், அவர்தாம் மருத்துவர் சாந்தா அம்மையார். மருத்துவத் துறையில் அவர் செய்த அரிய சாதனைகளை இப்போது நாம் அறிந்து கொள்வோம்.

மருத்துவர் சாந்தா, சென்னையிலுள்ள மயிலாப்பூர் என்னும் இடத்தில் பிறந்தார். இவர், தொடக்கக் கல்வியைத் தம் தாயாரிடமே கற்றார். கல்வி கற்பதில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். தாம் விரும்பியபடியே மருத்துவராக ஆனார். சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவராகப் பணியில் சேர்ந்தார்.

சென்னை அடையாறில் 1954ஆம் ஆண்டு புற்றுநோய் நிறுவனம் தொடங்கப்பட்டது. அதனை மருத்துவர் முத்துலட்சுமி அம்மையார் தொடங்கினார். அந்நிறுவனத்தில் தம்மை இணைத்துக் கொள்ள விரும்பினார் சாந்தா. அதனால், தமது அரசுப் பணியைத் துறந்துவிட்டு, பெரும் விருப்பத்துடன் அந்நிறுவனத்தில் சேர்ந்தார்.

புற்றுநோய் என்றாலே 'உயிரிழப்பு' உறுதி எனப் பலரும் அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தனர். அப்போது, புற்றுநோயால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி அச்சம் கொள்ள வேண்டாம்; அந்நோய் குணப்படுத்தக்கூடிய நோய்தான் என நோயாளிகளுக்கு நம்பிக்கை கொடுத்தவர் மருத்துவர் சாந்தா. நோயாளிகளுக்குத் தரமான சிகிச்சை அளித்து நோயாளிகளைக் காப்பாற்றினார். தமிழகம் தவிர வெளி மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் இந்த மையத்தை நாடி வந்தனர். நாடி வந்தவர்களின் உயிரைக் காப்பாற்றியவர் மருத்துவர் சாந்தா. ஆயிரக்கணக்கான திறமையான மருத்துவர்களையும் செவிலியர்களையும் உருவாக்கி மருத்துவ ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

1997ஆம் ஆண்டு அடையாறு புற்றுநோய் நிறுவனத்தின் தலைவரானார் மருத்துவர் சாந்தா. அரசு மற்றும் தனியாரிடம் நிதியுதவி பெற்று, புற்றுநோய் நிறுவனத்தை விரிவுபடுத்தினார். இன்று, 130 மருத்துவர்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் புற்றுநோய் நிறுவனம் இயங்கி வருகிறது. ஆண்டுக்கு ஒன்றரை இலட்சம் பேர் சிகிச்சைபெறும் அளவிற்கு விரிவடைந்துள்ளது. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட, வசதி குறைந்தவர்களுக்கு இன்றும் இலவசமாகவே சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

இவர், தம் வயது முதிர்வையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து பணியாற்றினார். புற்றுநோயாளிகளின் நலனுக்கும் புற்றுநோய் நிறுவன வளர்ச்சிக்கும் பணியாற்றியதே மருத்துவர் சாந்தாவின் 67 ஆண்டுகால அடையாளம் ஆகும்.

ஆசியாவின் உயரிய விருதான மக்சேசே விருது, இந்தியாவின் உயரிய விருதுகளான பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்ம விபூஷண் ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். இவ்விருதுகளைவிட, நோயிலிருந்து குணமாகிச் செல்பவர்களின் வணக்கமும், ஆனந்தக் கண்ணீரும் இவருக்குக் கிடைத்த பெரும் விருதுகள் எனக் கருதினார். இன்று, இவர் நம்மோடு இல்லாவிட்டாலும் நமது ஒவ்வொருவரின் உள்ளத்திலும் வாழ்கின்றார்.

வானொலி நேயர்களே, **தேசிய மருத்துவர்கள் நாளான ஜூலை 1ஆம் நாளில்**, உயிர் காக்கும் மருத்துவர் சாந்தா அம்மையாரை நினைவு கூர்ந்தோம். அவரைப் பற்றிய செய்திகளை உங்களிடையே பகிர்ந்து கொண்டதில் பிபிசி வானொலி நிலையம் பெருமகிழ்ச்சி கொள்கிறது. நன்றி!

**குறிப்பு:** வானொலி உரைச்சித்திரம் என்பது, ஒரு நிகழ்வையோ செய்தியையோ உரை வடிவில் எழுதி, கேட்போர் விரும்பும் வண்ணம் குரல் ஏற்ற இறக்கத்துடன் வானொலியில் உரையாற்றுவது ஆகும்.

## பொருள் அறிவோம்

1. மகப்பேறு மருத்துவம் - குழந்தைப்பேறு மருத்துவம்
2. துறந்து - விலகி
3. அஞ்சி - நடுங்கி
4. சாதனை - வியத்தகு செயல்
5. பாதிப்புகள் - விளைவுகள்
6. இலவசம் - கட்டணம் இல்லாச் சேவை
7. சிகிச்சை - மருத்துவம்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. மருத்துவர் சாந்தா முதன்முதலில் செய்த மருத்துவப்பணியைப் பற்றி எழுதுக.
2. மருத்துவர் சாந்தா தமது அரசுப்பணியினைத் துறக்கக் காரணம் என்ன?
3. புற்றுநோய் பாதித்தவர்களுக்கு மருத்துவர் சாந்தா அளித்த நம்பிக்கை யாது?
4. புற்றுநோய் நிறுவன வளர்ச்சிக்கு மருத்துவர் சாந்தா செய்த செயல்கள் யாவை?
5. மருத்துவர் சாந்தா பெற்ற விருதுகள் யாவை?

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மருத்துவர் சாந்தா சென்னையிலுள்ள ____________ என்னும் இடத்தில் பிறந்தார்.

அ) எழும்பூர் ஆ) அடையாறு இ) மயிலாப்பூர் ஈ) பாண்டிச்சேரி

2. மருத்துவர் சாந்தாவிற்குக் கிடைத்த ஆசியாவின் உயரிய விருது ____________.

அ) பத்மஸ்ரீ ஆ) பத்மபூஷன் இ) மக்சேசே ஈ) நோபல்

3. தேசிய மருத்துவர் நாள் ____________ அன்று கொண்டாடப்படுகிறது.

அ) ஆகஸ்ட் 1 ஆ) செப்டம்பர் 1 இ) ஜூலை 1 ஈ) ஜூன் 1

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(மருத்துவர் சாந்தா, மருத்துவர் முத்துலட்சுமி, மகப்பேறு, உயிரிழப்பு, மருத்துவத் தொழில்)**

1. மருத்துவர் சாந்தா ____________ அறம் காக்கும் செயல் எனக் கருதினார்.
2. சாந்தா முதன்முதலில் ____________ மருத்துவராகப் பணியாற்றினார்.
3. சென்னை அடையாறில் புற்றுநோய் நிறுவனத்தைத் தொடங்கியவர் ____________.
4. 1997 ஆம் ஆண்டு, அடையாறு புற்றுநோய் நிறுவனத்தின் தலைவரானவர் ____________.
5. புற்றுநோய் என்றாலே ____________ நேரும் என மக்கள் அஞ்சினர்.

### ஈ) சேர்த்து எழுதுக.

1. தன்னலம் + அற்ற = ____________
2. மருத்துவம் + துறை = ____________
3. அரசு + பணி = ____________
4. தொடக்கம் + கல்வி = ____________
5. நன்மை + நாள் = ____________

## 26.3 மொழிக்கூறு

### வல்லினம் மிகும் இடங்கள்

சொற்கள் ஒன்றோடு ஒன்று சேரும்போது **க், ச், த், ப்** ஆகிய வல்லின மெய்கள் மிகுந்து வரும். இவ்வாறு வருவன வல்லினம் மிகும் இடங்களாகும். இவற்றைப் புரிந்துகொள்வதற்காகக் கீழே கதை ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. வல்லினம் மிகுந்து வரும் இடங்களைப் பின்வரும் கதைப்பகுதி வாயிலாக அறிந்துகொள்வோம்.

### காகத்தின் தந்திரம்

காகம் ஒன்று தாகத்தால் தவித்தது. **எந்தப் பக்கம்** தேடியும் தண்ணீர் கிடைக்கவில்லை. கடைசியாக ஒரு வீட்டின் பின்னால் தண்ணீர்ப் **பானையைக்** கண்டுபிடித்தது. **அப்பானையின்** அடிப்பகுதியில் சிறிதளவு தண்ணீர்தான் இருந்தது. ஆவலுடன் பானையின் வாய்ப்புறத்தில் அமர்ந்து தலையை உள்ளே விட்டுத் தண்ணீர் குடிக்க விரும்பியது. காக்கைக்கு அது முடியவில்லை. பானையின் வாய் குறுகியதாக இருந்ததால் அதனால் தன்னுடலை உள்ளே செலுத்த முடியவில்லை. எப்படியும் **இந்தத் தண்ணீரைத் தான்** குடிக்க வேண்டும் என்ற நிலை. அப்போது தெருமுனையில் மரத்தின் கீழ் ஒருவர் இளநீர் விற்றுக் கொண்டிருந்தார். அவர் அந்த **இளநீரைக் குடிப்பதற்கு** 'ஸ்ட்ரா' என்னும் உறிஞ்சு **குழலைப் பயன்படுத்தினார்**. இதைக் கவனித்தது **அந்தக் காகம்**. ஒருவர் அப்பொழுதுதான் **இளநீரைக் குடித்துவிட்டு** 'ஸ்ட்ராவை' **அங்குக் கீழே** போட்டு விட்டுச் சென்றார். காகம் **அக்குழலை** (ஸ்ட்ரா) எடுத்து வந்து, தண்ணீர்ப் பானையில் நுழைத்துத் **தண்ணீரைக் குடித்தது**.

மேற்கண்ட கதைப்பகுதியில் வண்ணமிட்ட சொற்களுக்கு இடையே வல்லினம் மிகுந்துள்ளது. இவ்வாறு வல்லின மெய்களை மிகுத்து எழுதுவதற்குப் பல விதிகள் உள்ளன. அவற்றுள் சில விதிகளை இங்கு அறிந்துகொள்வோம்.

**விதி 1**

அ, இ, எ என்னும் சுட்டெழுத்துகளின் பின் வல்லினம் மிகும்.

1. **அப்பானையின்**
2. **அக்குழலை**

**விதி 2**

அந்த, இந்த, எந்த என்னும் சுட்டுத்திரிபுகளின் பின் வல்லினம் மிகும்.

1. **எந்தப் பக்கம்**
2. **இந்தத் தண்ணீரைத்தான்**
3. **அந்தக் காகம்**

**விதி 3**

அங்கு, இங்கு, எங்கு என்னும் சுட்டுப்பெயர்கள் பின் வல்லினம் மிகும்

1. **அங்குக் கீழே**

**விதி 4**

இரண்டாம் வேற்றுமை விரியில் (ஐ) வல்லினம் மிகும்

1. **பானையைக் கண்டுபிடித்தது (பானை + ஐ = பானையை)**
2. **இளநீரைக் குடிப்பதற்கு (இளநீர் + ஐ = இளநீரை)**
3. **குழலைப் பயன்படுத்தினார் (குழல் + ஐ = குழலை)**

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் தொடர்களில் விடுபட்ட வல்லின மெய்களை மிகுத்து எழுதுக.

1. உயிர்ச்சத்து கிடைப்பதற்குப் பாலை குடிக்க வேண்டும்.
2. கோடை காலத்தில் நம் உடல் சூட்டைத் தவிர்க்க மோரை பருக வேண்டும்.
3. தானியங்களை வீசியதும் அங்கு பறவைகள் வந்தன.
4. நல்ல பாடலை கேட்டால் நமது மனம் மகிழும்.
5. இந்த புத்தகம் எனக்கு மிகவும் பிடிக்கும்.

### ஆ) கீழ்க்காணும் உரைப்பகுதியில் வல்லினமெய் இட்டு எழுதுக.

தமிழரசி கலைதிருவிழா சென்றாள். அங்கு கண்ணை கவரும் வண்ண பொம்மைகளை பார்த்தாள். கடைகாரர் ஐந்து பொம்மை வாங்கினால் ஒன்று இலவசம் என்றார். எனக்கு அந்த பொம்மைதான் வேண்டும் என்று மயில் பொம்மையை சுட்டிகாட்டினாள் தமிழரசி.

### இ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. வல்லினம் மிகும் இடங்கள் என்றால் என்ன?
2. வல்லினம் மிகும் இடங்களில் எந்தெந்த மெய் எழுத்துகள் இடம்பெறுகின்றன?
3. வல்லினம் மிகும் இடங்களுக்காகக் கூறப்படும் விதி 2ஐ எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. வல்லினம் மிகும் இடங்களை விளக்குவதற்காகக் கூறப்பட்டிருக்கும் கதையின் தலைப்பு என்ன?
5. வல்லினம் மிகும் இடங்களுக்காகக் கூறப்படும் விதி 4ஐ எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## கருத்து விளக்கப்படம்

மருந்தே இல்லாமல் உங்கள் வலியைக் குணப்படுத்த

**இலவச வர்ம மருத்துவ முகாம்!**

சிறப்புச் சிகிச்சைகள்

- வர்மம்
- தொக்கணம்
- ஒற்றடம்
- நீராவிக் குளியல்
- மண் குளியல்
- தாரை
- கட்டு முறைகள்
- யோகா
- உடற்பயிற்சி



**நலம் மருத்துவ மையம்**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

நாள்: 16-06-2023, வெள்ளிக்கிழமை

இடம்: கிழக்குக் கடற்கரைச் சாலை, சென்னை

### வினாக்கள்

1. விளம்பரம் எதனைப் பற்றியது?
2. மருத்துவ முகாம் எங்கு நடைபெறுகிறது?
3. மருத்துவ மையத்தில் அளிக்கப்படும் சிறப்புச் சிகிச்சைகள் யாவை?
4. மருத்துவ மையத்தின் பெயர் யாது?
5. விளம்பரத்தில் இடம்பெற்றுள்ள பழமொழி யாது?

## சுவைச்செய்தி

'ஸ்கர்வி' (SCURVY) என்னும் நோய், உயிர்ச்சத்து 'சி' குறைவினால் ஏற்படுவதாகும். இந்த உயிர்ச்சத்து குறையும்போது, நம் ஈறுகள் பஞ்சுபோல் ஆகிவிடும். பற்களில் துளை ஏற்பட்டு, இரத்தம் வெளியேறும். நாளடைவில் பற்கள் கொட்டத் தொடங்கும். இந்நோய் கடற்பயணம் மேற்கொள்பவர்களிடையே பெரும்பாலும் காணப்பட்டது. ஏனெனில், கப்பலில் பழங்கள், காய்கள் போன்றவற்றை அதிகநாள் வைத்துக் கொள்ள முடியாது. அதனால், உயிர்ச்சத்து மிகுந்துள்ள இந்த உணவுப்பொருள்களைப் பயன்படுத்த முடியாமல் போனது. 1536ஆம் ஆண்டு ஃபிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஜேக்கஸ் கார்டியஸ் என்பார், கப்பற்பயணம் மேற்கொண்டபோது, இந்த நோயின் தீவிரத்தை உணர்ந்து கொண்டார். ஆர்பர் விட்டே அல்லது ஸ்ப்ரூஸ் பீர் என அழைக்கப்படும் மரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட கலவை, 'ஸ்கர்வி' நோயைக் குணப்படுத்தும் என்பதை கண்டறிந்தார். இதனால், அந்தக் கப்பலில் இருந்தவர்கள் காப்பாற்றப்பட்டனர். அதேபோல், பிரிட்டன் கடற்படையைச் சேர்ந்த 'ஜேம்ஸ் லிண்ட்' என்பார், சிட்ரஸ் பழங்கள் ஸ்கர்வியைக் குணப்படுத்துகின்றன எனக் கண்டறிந்தார்.

## 26.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் எடுத்துக்காட்டைப் போல், ஒரு சொற்றொடரிலிருந்து ஒவ்வொரு சொல்லாக நீக்கி, பொருள் தரும் தொடர்களை உருவாக்குக.**

**எ.கா.**

உடற்பயிற்சி செய்வது உடலுக்கும் மனத்திற்கும் நல்லது.

1. உடற்பயிற்சி செய்வது மனத்திற்கும் நல்லது
2. உடற்பயிற்சி செய்வது நல்லது.
3. உடற்பயிற்சி நல்லது.

**அ) அன்று இரவு எங்கும் ஒரே கொண்டாட்டமாக இருந்தது.**

______________________________

______________________________

______________________________

**ஆ) நேற்று கொட்டும் மழையிலும் கூட்டம் கலையாமல் இருந்தது.**

______________________________

______________________________

______________________________

**இ) நான் நேற்று பெற்றோர்களுடன் சுற்றுலா சென்றேன்.**

______________________________

______________________________

______________________________

**ஈ) யாழினி தோட்டத்தில் பூக்களைப் பறித்தாள்**

______________________________

______________________________

______________________________

**உ) கடலில் விலைமதிப்பற்ற முத்தும் பவளமும் நிறைந்துள்ளன.**

______________________________

______________________________

______________________________

## 26.5 கேட்டல் கருத்தறிதல்

### அறுவை சிகிச்சை மருத்துவத்தில் ரோபோக்கள்

மருத்துவத்துறையின் தற்போதைய சாதனை ரோபோடிக் அறுவை சிகிச்சை. மருத்துவர்கள் தொடர்ந்து நெடுநேரம் அறுவை சிகிச்சைப் பணியிலிருந்தால், மனிதக் கைகளுக்குக் களைப்பு ஏற்படும். அதற்கு மாற்றாக ரோபோக்களைக் கொண்டு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால், ரோபோவின் கைகளுக்குக் களைப்பு ஏற்படுவதுமில்லை, கைகள் நடுங்குவதும் இல்லை. மருத்துவரின் கைகளுக்கு எட்டாத மிகச்சிறிய உடல் உறுப்பும் ரோபோவின் கைகளுக்கு எட்டும் அளவுக்கு அதன் மணிக்கட்டு வடிவம் அமைந்துள்ளது. எனவே, அந்தச் சிறு உறுப்புகளுக்குத் தேவையான சிகிச்சைகளையும் ரோபோவால் துல்லியமாக வழங்க முடியும்.

ரோபோக்களைப் பயன்படுத்தி இரைப்பை, கல்லீரல், கணையம், குடல் நோய்கள் உள்ளிட்ட பல்வேறு வயிற்று நோய்களுக்கும் சிகிச்சை மேற்கொள்ள முடியும். மேலும் சிறுநீரகம், சிறுநீர்ப்பை, புராஸ்டேட் நோய்களுக்கும் இது நல்ல பலன் தருகிறது. பலவித புற்றுநோய் அறுவை சிகிச்சைகளில் இதன் பங்கு இப்போது அதிகரித்து வருகிறது. இதய நோய்கள், எலும்பு நோய்கள், குழந்தை நோய்கள், காது-மூக்கு-தொண்டை நோய்கள், நரம்பியல் நோய்கள், தலை, கழுத்து நோய்கள் எனப் பலதரப்பட்ட நோய்களுக்கான சிகிச்சைகளிலும் பழைய அறுவை சிகிச்சை முறைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, தற்போது ரோபோ அறுவை சிகிச்சை முந்திக் கொண்டு வருகிறது.

### வினாக்கள்

1. மருத்துவத் துறையில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றம் என்ன?
2. மனிதர்களுக்கு மாற்றாக, அறுவை சிகிச்சைக்கு எவை பயன்படுகின்றன?
3. ரோபோக்கள் அறுவை சிகிச்சை செய்வதால் விளையும் பயன் யாது?
4. ரோபோக்களின் மூலம் எத்தகைய நோய்களைக் குணப்படுத்தலாம்?
5. ரோபோக்களின் மணிக்கட்டு வடிவம் எவ்வாறு அமைந்துள்ளது?

## 26.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 26.7 செந்தமிழ்ச்செல்வம்

### கம்பராமாயணம்

"உடலிடைத் தோன்றிற்று ஒன்றை
அறுத்துஅதன் உதிரம் ஊற்றிச்
சுடலுறச் சுட்டு வேறோர்
மருந்தினால் துயரம் தீர்ப்பர்"

- (பாடல் 7417)

- கம்பர்

**பொருள்:**

சிகிச்சை செய்வோர், உடலில் தோன்றிய கட்டியை அறுத்து, அதிலுள்ள தூய்மையற்ற உதிரத்தை வெளியேற்றுவர். சுட வேண்டியவற்றைச் சுட்டும் உண்டாகும் புண்ணுக்கு மருந்திட்டும் துன்பத்தைத் தீர்ப்பர்.

**பழமொழி**

விருந்தும் மருந்தும் மூன்றே நாள்

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

விபத்து முதலான கடுமையான பாதிப்புக்கு உட்பட்டவர்களை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கவேண்டும். பாதிக்கப்பட்டவருக்கு முதல் ஒருமணி நேரத்திற்குள் அளிக்கப்படும் சிகிச்சையால் அவருடைய உயிரைக் காப்பாற்ற முடியும். இந்த ஒருமணி நேரத்தைத்தான் மருத்துவத் துறை, 'தங்க நேரம்' என்கிறது.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. நிறுவனம்
2. சிகிச்சை
3. வளர்ச்சி

## 26.8 அறிந்துகொள்வோம்

1. தேசிய மருத்துவர்கள் நாள் - National Doctors' Day
2. அரிய சாதனைகள் - Great achievements
3. மகப்பேறு மருத்துவர் - Gynaecologist
4. பத்ம விபூஷண் விருது - Padma Vibhushan Award (India's Second-highest civilian award)

5. பத்ம பூஷண் விருது - Padma Bhushan Award
(India's Third- highest civilian award)

6. பத்மஸ்ரீ விருது - Padma Shri Award
(India's Fourth -highest civilian award)

## 26.9 மொழிபெயர்ப்போம்

Gerty Theresa Cori was an Austro-Hungarian-American biochemist who in 1947 was the third woman to win a Nobel Prize in science, and the first woman to be awarded the Nobel Prize in Physiology or Medicine, for her significant role in the "discovery of the course of the catalytic conversion of glycogen".

## 26.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**படங்களைப் பார்த்துக் கதை கூறுக.**



## 26.11 உயர்நிலைத்திறன்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள கதைக்கு எந்தத் தலைப்பு பொருந்தும்? கதையைப் படித்துத் தேர்ந்தெடுத்துக் கூறுக.**

உழவர் ஒருவர் தம் மகன்களை அழைத்தார். "எனக்கு வயதாகிவிட்டது. இனி வேலை செய்ய இயலாது. நான் சேர்த்து வைத்த செல்வத்தை வயலில் புதைத்து வைத்திருக்கிறேன். அவற்றைத் தேடியெடுத்து, நீங்கள் நால்வரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுங்கள்" என்று கூறினார். சில மாதத்திற்குப் பின்னர், அந்த உழவர் உடல் நலமின்றி இவ்வுலகைவிட்டு மறைந்தார். அவருடைய மகன்கள் இதுவரை வேலை எதுவும் செய்யாமல் சோம்பித் திரிந்தனர். இப்போது, வேலை செய்தால்தான் உணவு கிடைக்கும் என்ற நிலைக்கு ஆளாயினர். ஆகையால், தமது தந்தை கூறிய புதையலைத் தேடி, நால்வரும் வயலுக்குச் சென்றனர். அந்நிலத்தை ஓர் அங்குலம் கூட விடாமல் எல்லா இடத்திலும் தோண்டினர். ஆனால், அவர்கள் எதிர்பார்த்த புதையல் கிடைக்கவில்லை. அப்போது அங்கு வந்த பெரியவர்கள், "புதையல் கிடைக்கவில்லை என்று வருந்தாதீர்கள். இப்போது நிலத்தை நன்றாகத் தோண்டி, செம்மைப்படுத்தியிருக்கிறீர்கள். எனவே, விதை விதைத்து, நீர் ஊற்றி, பயிர் வளரச் செய்யுங்கள்" என்று கூறினார்கள். மகன்களும் பெரியவர்கள் சொல்வது சரிதான். நிலம் நன்கு பண்படுத்தப்பட்டுள்ளது. இப்போது விதைத்தால் நல்ல விளைச்சல் கிடைக்கும் என்று எண்ணினர். அவ்வாறே செய்தும் முடித்தனர். அவர்கள் எதிர்பார்த்தவாறே நல்ல விளைச்சல் கிடைத்தது. அவற்றை விற்று நால்வரும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டனர். 'உழைப்புதான் செல்வம். அதுதான் உண்மையான புதையல்' என அவர்கள் புரிந்து கொண்டனர்.

1. உழைப்பே உயர்வு ☐
2. எதிர்பாராத புதையல் ☐
3. உழவு செய்வோம் ☐

## 26.12 செயல்திட்டம்

இன்றைய மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள வியத்தகு சாதனைகளைக் காணொலியாகத் தயாரித்து வருக.

பாடம்

# 27

## 27.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

எதிர்காலத்தில் நீங்கள் என்னவாக இருக்க முயற்சி செய்கிறீர்கள் என்பது குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 27.2 படிப்போம்

# ஆபிரகாம் பண்டிதர்

தமிழ்மொழிக்குச் சான்றோர் பலர் தொண்டு செய்துள்ளனர். இயல், இசை, நாடகம் என முத்தமிழிலும் அவர்கள் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. அத்தகைய சான்றோர்களுள் ஒருவர் ஆபிரகாம் பண்டிதர். அவர் இசைத்தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது.



ஆபிரகாம் பண்டிதர்
(1859 - 1919)

ஆபிரகாம் பண்டிதர் பல்துறை வித்தகர். இசைத்துறையில் மட்டுமல்லாமல் சித்த மருத்துவம், சோதிடம், வேளாண்மை, சமயம், மொழி எனப் பல துறைகளிலும் தமது பணி சிறக்கச் செய்தவர். சிறந்த ஆளுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்.

ஆபிரகாம் பண்டிதர் ஆசிரியப் பயிற்சி முடித்து ஆசிரியராகப் பணியாற்றினார். அவர் புகைப்படம் எடுப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். அச்சுக்கூடம் அமைத்து நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். சித்த மருத்துவத்தில் சிறந்து விளங்கிய அவர், தமது தோட்டத்திலேயே மூலிகைச்செடிகளை வளர்த்தார். மூலிகைச்செடிகள் மட்டுமின்றி, மணமிக்க பூச்செடிகள், இனிய கனி தரும் மரங்கள் ஆகியவற்றையும் வளர்த்தார்.

ஆபிரகாம் பண்டிதர் தமது சிறுவயதிலேயே இசையின் மீது ஆர்வம் கொண்டிருந்தார். பல பாடல்களைத் தாமே இயற்றிப் பாடும் திறமை பெற்றிருந்தார். எனினும் இசையை முறையாகப் பயில விரும்பினார். இசை வல்லுநரிடம் சரளி வரிசை, அலங்காரம், கீதம், கீர்த்தனைகள், வர்ணங்கள் முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்தார். இளமையில் அவர் பெற்ற இசைப்பயிற்சி, பிற்காலத்தில் இசைத்தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபடப் பெரிதும் உதவியது.

இசைத்தமிழ் பற்றி மேலும் அறிந்துகொள்ளும் வகையில், "**தஞ்சை சங்கீத வித்தியா மகாஜன சங்கம்**" என்ற பெயரில் ஏழு இசை மாநாடுகளைத் தஞ்சாவூரில் தம் சொந்தச் செலவில் நடத்தினார். இம்மாநாடுகளில் இசை ஆய்வாளர்கள், இசைக்கலைஞர்கள், மொழியியல் அறிஞர்கள் பலர் பங்கேற்றனர். அவர்களின் மூலம் இசை தொடர்பான சுரங்கள், சுருதிகள், பண்கள் பற்றித் தமக்கு எழுந்த ஐயங்களைத் தீர்த்துக்கொண்டார்.

இசைத்தமிழ் பற்றித் தாம் கண்டறிந்த உண்மைகளையும் அறிஞர் பலர் கூறிய கருத்துகளையும் பழந்தமிழ் நூல்களில் சொல்லப்பட்ட விளக்கங்களையும் ஆபிரகாம் பண்டிதர் தொகுத்தார். ஏழு ஆண்டுகள் விடாமுயற்சியுடன் பாடுபட்டு, "**கருணாமிர்த சாகரம் – முதல் புத்தகம்**" என்னும் இசைத்தமிழ் ஆராய்ச்சி நூலை 1917ஆம் ஆண்டு வெளியிட்டார். இசை தொடர்பான பல அரிய உண்மைகளைக் கொண்டுள்ள இந்நூலை ஓர் இசைக் களஞ்சியம் என்றே கூறலாம். இந்நூல் 1200 பக்கங்களைக்

கொண்டது. இதில் நான்கு பாகங்கள் உள்ளன. முதல் புத்தகத்தைத் தொடர்ந்து, "**கருணாமிர்த சாகரம் – இரண்டாம் புத்தகம்**" வெளியிடப்பட்டது. இந்நூலும் நான்கு பாகங்களை உடையதாய் இருந்தது.

ஓர் இராகத்தின் குறிப்பிட்ட முழு வடிவத்தைக் கண்டு அதில் கீதம், கீர்த்தனை முதலியவற்றிற்குப் பண் அமைக்கும் புதிய முறையை ஆபிரகாம் பண்டிதர் இசை உலகிற்கு அளித்துள்ளார். கருணாமிர்த சாகரம் – இரண்டாம் புத்தகத்திற்கு மதிப்புரை வழங்கிய நீதிபதி திரு. அனந்த நாராயணர் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகள், விவரங்கள், விதிகள் முதலியவற்றை இசைக்கலைஞர்கள் ஆழ்ந்து கவனிக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். இதிலிருந்து இந்நூல் எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பது நன்கு விளங்கும்.

ஆபிரகாம் பண்டிதர் ஈடுஇணையற்ற அறிவாற்றலைப் பெற்றிருந்தது மட்டுமின்றி, ஆன்றோர் போற்றும் நற்பண்புகளையும் கொண்டிருந்தார். அவர் வாழ்வில் ஒழுக்கம் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது. அவர், தமது பிள்ளைகளையும் சீரிய ஒழுக்கத்துடனும் கண்டிப்புடனும் வளர்த்தார். சுற்றத்தாரை மதிக்கும் மாண்பு அவரிடம் இருந்தது. தமிழிசைக் கலைஞர்களையும் புலவர் பெருமக்களையும் அவர் ஆதரித்தார்.

ஆபிரகாம் பண்டிதரைப் போலவே, அவருடைய வழித்தோன்றல்கள் இசைத்துறையிலும் மருத்துவத்துறையிலும் ஈடுபாடு கொண்டுள்ளனர். இது அவருக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பொருள் அறிவோம்

1. வித்தகர் - வல்லுநர்
2. சங்கீதம் - இசை
3. விடாமுயற்சி - இடைவிடாது செய்தல்
4. பண் - பாடல்
5. மாண்பு - பெருமை
6. வழித்தோன்றல் - பரம்பரை

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. ஆபிரகாம் பண்டிதர் எந்தெந்தத் துறைகளில் சிறந்து விளங்கினார்?
2. ஆபிரகாம் பண்டிதர் இசையின் மீது கொண்டிருந்த ஆர்வத்தை எழுதுக.
3. இசைத்தமிழ் ஆராய்ச்சி குறித்து, ஆபிரகாம் பண்டிதர் வெளியிட்ட நூல்கள் யாவை?
4. ஆபிரகாம் பண்டிதர் நடத்திய இசைத்தமிழ் மாநாட்டின் சிறப்பு யாது?
5. ஆபிரகாம் பண்டிதரின் பண்புநலன்கள் குறித்து எழுதுக.

## ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முத்தமிழ் எனக் குறிப்பிடப்படுபவை ________, ________, ________.

அ) இயல், இசை, ஓவியம் ஆ) இயல், ஓவியம், காவியம்

இ) இயல், இசை, நாடகம் ஈ) இயல், இசை, காவியம்

2. ஆபிரகாம் பண்டிதர் ________ பணி செய்தார்.

அ) ஓவியர் ஆ) இசைக்கலைஞர் இ) ஆசிரியர் ஈ) மருத்துவர்

3. ஆபிரகாம் பண்டிதர் வெளியிட்ட இசைத்தமிழ் ஆராய்ச்சி நூல் ________.

அ) சங்கீத வித்யா சாகரம் ஆ) கருணாமிர்த சாகரம்

இ) கீர்த்தனைகள் ஈ) தமிழிசை நூல்

4. கருணாமிர்த சாகரம் - முதல் புத்தகம் என்னும் இசைத்தமிழ் ஆராய்ச்சி நூல் வெளியான ஆண்டு ________

அ) 1907 ஆ) 1910 இ) 1917 ஈ) 1927

5. வித்தகர் என்பதன் பொருள் ________.

அ) வல்லுனர் ஆ) ஆசிரியர் இ) மருத்துவர் ஈ) உழவர்

## இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(இரண்டு, இசை மாநாடு, புகைப்படம், இசைத், அனந்த நாராயணர்)**

1. ஆபிரகாம் பண்டிதர் ________ தமிழுக்குத் தொண்டாற்றினார்.

2. கருணாமிர்த சாகரம் ________ நூல்களாக வெளியிடப்பட்டது.

3. ஆபிரகாம் பண்டிதர் தம் சொந்தச் செலவில் நடத்திய மாநாடு ________.

4. கருணாமிர்த சாகரம் – இரண்டாம் நூலுக்கு மதிப்புரை எழுதியவர் ________.

5. ஆபிரகாம் பண்டிதர் ________ எடுப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார்.

## ஈ) சேர்த்து எழுதுக

| | | | | |
|---|---|---|---|---|
| 1. தமிழ் | + | இசை | = | ________ |
| 2. மருத்துவம் | + | துறை | = | ________ |
| 3. நன்மை | + | பண்பு | = | ________ |
| 4. இசை | + | பயிற்சி | = | ________ |
| 5. வழி | + | தோன்றல் | = | ________ |

## உ) பிரித்து எழுதுக

| | | | | |
|---|---|---|---|---|
| 1. முத்தமிழ் | = | ________ | + | ________ |
| 2. அச்சுக்கூடம் | = | ________ | + | ________ |
| 3. பூச்செடிகள் | = | ________ | + | ________ |
| 4. மதிப்புரை | = | ________ | + | ________ |
| 5. அறிவாற்றல் | = | ________ | + | ________ |

## 27.3 மொழிக்கூறு

### புணர்ச்சி இலக்கணம்

பனை (நிலை மொழி) + மரம் (வருமொழி) = பனைமரம்

**புணர்ச்சி இரு வகைப்படும்**

புணர்ச்சி
1. இயல்பு புணர்ச்சி
2. விகாரப் புணர்ச்சி

### இயல்பு புணர்ச்சி

நிலைமொழியின் கடைசி எழுத்தும், வருமொழியின் முதல் எழுத்தும் சேரும்போது எவ்வித மாற்றமும் இன்றிப் புணர்வது (சேர்வது) **இயல்பு புணர்ச்சி** எனப்படும்.

**(எ.கா.)**



குதிரை + வண்டி = குதிரைவண்டி



மலர் + மாலை = மலர்மாலை



வான் + மேகம் = வான்மேகம்

## விகாரப் புணர்ச்சி

விகாரம் என்பதற்கு மாற்றம் என்பது பொருள். இரு சொல் புணரும் போது விகாரம் தோன்றுவதால் (மாற்றம்) அது **விகாரப் புணர்ச்சி** எனப்படும்.

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் புணரும் போது, மூன்று மாற்றங்கள் ஏற்படும்.

1. ஓர் எழுத்து புதிதாகத் தோன்றும் (தோன்றல் விகாரம்)
2. ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரியும் (திரிதல் விகாரம்)
3. ஓர் எழுத்து கெடும் (கெடுதல் விகாரம்)

## தோன்றல் விகாரம்



| | | | | |
|---|---|---|---|---|
| பூ | + | சோலை | = | பூஞ்சோலை |

'ஞ்' என்னும் புதிய எழுத்து தோன்றிப் பூஞ்சோலை எனப் புணர்ந்துள்ளது.

## திரிதல் விகாரம்




| | | | | |
|---|---|---|---|---|
| பல் | + | பசை | = | பற்பசை |

'ல்' என்னும் எழுத்து 'ற்' எனத் திரிந்து பற்பசை எனப் புணர்ந்துள்ளது

## கெடுதல் விகாரம்



| | | | | |
|---|---|---|---|---|
| மரம் | + | வேர் | = | மரவேர் |

'ம்' என்னும் எழுத்து கெட்டு மரவேர் எனப் புணர்ந்துள்ளது.

## பயிற்சிகள்

அ) பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சியில் அமைந்த சொற்களை எடுத்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| அலைகடல் | பொற்குடம் | மண்மேடு | வெள்ளிக்கிண்ணம் |
| தென்னைமரம் | மலைக்குகை | மரக்கிளை | முள்வேலி |
| தாய்மொழி | கடற்கரை | பகல்நிலவு | கலைக்கூடம் |

1. ____________
2. ____________
3. ____________
4. ____________
5. ____________
6. ____________

ஆ) கீழ்க்காணும் சொற்களை இணைத்து எழுதி, எவ்வகைப் புணர்ச்சி என எழுதுக.

| வ.எண் | நிலைமொழி, வருமொழி | புணர்ச்சி வகை |
|---|---|---|
| 1. | வாழை + மரம் = ____________ | |
| 2. | சொல் + பொருள் = ____________ | |
| 3. | கல் + தாழை = ____________ | |
| 4. | வட்டம் + வடிவம் = ____________ | |
| 5. | திரு + குறள் = ____________ | |

இ) பொருத்துக.

1. இயல்பு புணர்ச்சி - பூஞ்சோலை
2. தோன்றல் விகாரம் - வான்மேகம்
3. திரிதல் விகாரம் - மரவேர்
4. கெடுதல் விகாரம் - பற்பசை

### சுவைச் செய்தி

தமிழ்ப் புலமையும் ஆங்கில அறிவும் ஒருங்கே பெற்றவர், மாயூரம் வேதநாயகம். இவர் நீதிபதியாகப் பணியாற்றினார். இலக்கியத்தில் மிக்க ஆர்வம் கொண்டிருந்த இவர் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் புதினத்தை எழுதினார். தமிழில் வெளிவந்த முதல் புதினம் இதுவே ஆகும். ஆங்கில மொழியிலிருந்து நீதிமன்றச் சட்டங்களைத் திரட்டித் தமிழில் 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலை உருவாக்கினார். சமரச நோக்கம் கொண்ட இவர், 'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்' பாடியுள்ளார். இவர் இயற்றிய 'நீதிநூல்' இவரது ஆழ்ந்த அனுபவ அறிவையும் கருத்துச் செறிவையும் வெளிப்படுத்துகிறது.



மாயூரம் வேதநாயகம்
1826 – 1889

## 27.4 மொழியோடு விளையாடுவோம்

ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள சொற்களின் இரண்டாம் எழுத்துகளை ஒன்று சேர்த்தால் கிடைக்கும் சொற்களைக் கண்டறிக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | கபடி | காந்தி | மூதுரை | | | பந்து |
| 2. | பகடை | மணி | இனிப்பு | | | |
| 3. | பூமாலை | கம்பளி | விபத்து | அழகு | அம்மா | |
| 4. | புவி | வளை | தாயார் | சட்டை | ஆடு | |
| 5. | கதவு | படம் | மகன் | நீளம் | வம்பு | |
| 6. | அபாயம் | தொட்டில் | நாடு | | | |
| 7. | பசு | கீற்று | ஆறு | நிலா | | |
| 8. | ஆபத்து | உதவி | மக்கள் | அகல் | கம்பம் | |
| 9. | மதி | அறம் | கன்னி | குபேரன் | ஊசி | |
| 10. | கவிதை | துடுப்பு | காகம் | புதையல் | | |

## 27.5 கேட்டல் கருத்தறிதல்

### உலகமும் மனிதநேயமும்

அலுவலில் ஈடுபட்டிருந்தார் தந்தை. குறும்புத்தனம் மிக்க அவருடைய எட்டு வயது மகன் அடிக்கடி இடையூறு செய்துகொண்டிருந்தான். மகனின் கவனத்தை வேறுதிசையில் திருப்பவேண்டும் என தந்தை நினைத்தார். அவர் அருகில் உலக வரைபடத்தாள் இருந்தது. அதனைப் பல மடிப்புகளாகக் கிழித்துத் தம் மகனிடம் கொடுத்தார். 'இதை ஒன்றாகச் சேர்த்துக் கொண்டுவா', என்று கூறி மீண்டும் பணியில் ஈடுபட்டார் தந்தை. மகனால் அது முடியாது, நாம் நிம்மதியாக வேலையில் ஈடுபடலாம் என்று அவர் நம்பினார். தந்தையின் நம்பிக்கை வீண் போனது. அவர் எதிர்பாராத வகையில் ஐந்து மணித்துளிக்குள் கிழிக்கப்பட்ட உலகப்படத்தை எந்தெந்த நாடு எங்கெங்கு இருக்க வேண்டுமோ அங்கெல்லாம் சரியாக வைத்துத் தந்தையிடம் கொடுத்தான் மகன். வியப்படைந்த தந்தை எப்படி இது முடிந்தது என்று கேட்டபோது மகன் சொன்னான்.

உலகப்படத்துக்குப் பின்னாலிருந்த மனிதனைச் சரியாகப் பொருத்திவிட்டேன். உலகம் வந்துவிட்டது. மகனைப் பார்த்து, தந்தை சொன்னார், "மனிதனை வைத்து உலகத்தைப் பொருத்திவிட்டாய். மனிதன் உலகத்தைச் சரியாகப் பொருத்திக் கொண்டால் அதுதான் "மனிதநேயம்".

### வினாக்கள்

1. தந்தையைப் பணி செய்யவிடாமல் மகன் என்ன செய்தான்?
2. மகனைத் திசை திருப்ப தந்தை என்ன செய்தார்?
3. மகன் எதன் அடிப்படையில் படத்தைப் பொருத்தினான்?
4. தந்தை மகனுக்குக் கூறிய அறிவுரை என்ன?
5. தந்தையின் நம்பிக்கை ஏன் வீண் போனது?

## 27.6 படம் பார்த்துக் கதை கூறல்





## 27.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
உணர விரித்துரையா தார்

- (குறள்: 650)
- திருவள்ளுவர்

**பொருள்:**

தாம் கற்ற நூலின் பொருளைப் பிறர் உணருமாறு எடுத்துரைக்க முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்த போதும் மணம் வீசாத மலரைப் போன்றவர் ஆவர்.

**பழமொழி**

நெருப்பில்லாமல் புகையாது

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

மனிதன் என்பவன் உணர்வும் அறிவும் கலந்த கலவை. மனிதனுக்குள்ளே இந்த இரண்டும் இணைந்து செல்லும் போதுதான், அவன் புகழ் பெறுகின்றான்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. மன உறுதி
2. புகழ்
3. ஆற்றல்

## 27.8 அறிந்துகொள்வோம்

1. பண்டிதர் - Man of learning and erudition
2. இசை - Music
3. சித்த மருத்துவம் - Siddha medicine
4. சோதிடம் - Astrology
5. ஆளுமை - Personality
6. அச்சுக்கூடம் - Printing press
7. மூலிகைச் செடிகள் - Herbal plants

## 27.9 மொழிபெயர்ப்போம்

பல துறைகளிலும் சிறந்து விளங்கியவர் மாமேதை லியனார்டோ டா வின்சி. இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். ஓவியர், சிற்பி, இசைமேதை, கணிதவியலாளர், வானவியலாளர் எனப் பல துறைகளிலும் இவர் புகழ்பெற்றிருந்தார். மோனலிசா என்ற அழகான பெண்ணின் ஓவியத்தை இவர் வரைந்தார். அந்த ஓவியப் பெண்ணின் புன்னகை இன்றும் புகழ்பெற்று விளங்குகிறது.

---

---

## 27.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

### குறுக்கெழுத்துப் போட்டிக்கான புதிர்க்கட்டம் உருவாக்குக

**(எ.கா.)**

| | | | |
|---|---|---|---|
| 1. கா | லை | | 2. ம |
| | | 3. பா | லை |
| 4. ம | யி | ல் | |
| ழை | | | 5. தை |

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. தாமரை மலரும் பொழுது | 2. உயர்ந்திருக்கும் மேடு |
| 3. வறண்ட நிலம் | 3. குழந்தைகளின் விருப்பமான உணவு |
| 4. அழகிய தோகை கொண்ட பறவை | 4. வானிலிருந்து வீழும் அமிழ்தம் |
| 5. ஓரெழுத்தைக் கொண்ட தமிழ் மாதம் | |

| | | | |
|---|---|---|---|
| 1 | | | 2 |
| | | 3 | |
| 4 | | | |
| | | | 5 |

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | |

## 27.11 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் அழைப்பிதழைப் பற்றி இருவர் பேசுவதுபோல் உரையாடல் உருவாக்குக.**

விருது வழங்கலும் இலக்கியக் கூடுகைகளும்

**அழைப்பிதழ்**

**தமிழ் ஆளுமை அறிமுகம்**

**மகாகவி பாரதியார்**

**சாதனையும் சரித்திரமும்**



18 நவம்பர் 2023 சனிக்கிழமை

ராஜஸ்தானி சங்கம், டி.பி.ரோடு, ஆர்.எஸ்.புரம், கோவை

முழு நாள் நிகழ்வு

குமரன் : அப்பா அதோ பாருங்கள். அந்த அழைப்பிதழில் பாரதியார் படம் இருக்கிறதே!

அப்பா : ஆமாம். குமரா! பாரதியாரின் சாதனைகளைக் கூறுவதற்கான அழைப்பிதழ் தான் அது.

குமரன் : ________________________________________?

அப்பா : ________________________________________.

குமரன் : ________________________________________?

அப்பா : ________________________________________.

குமரன் : ________________________________________?

அப்பா : ________________________________________.

குமரன் : ________________________________________?

அப்பா : ________________________________________.

## 27.12 செயல்திட்டம்

பாரதியார் தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகளைத் தொகுத்து, தொகுப்பேடு உருவாக்குக.

பாடம்
28

## 28.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

நீங்கள் எந்தத் துறையில் சாதிக்க விரும்புகிறீர்கள் என்பது குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 28.2 படிப்போம்

# கண்டுபிடிப்புகளின் பேரரசன்



பள்ளிப்பருவத்தில் ஆசிரியர்களால் ஒதுக்கப்பட்ட மாணவர் ஒருவர் பின்னாளில் உலகம் போற்றும் விஞ்ஞானியாக உருவெடுத்தார். உலகம் இன்றும் அவரை "கண்டுபிடிப்புகளின் அரசன்" எனக் கூறி மகிழ்கிறது. அவர்தாம் தாமஸ் ஆல்வா எடிசன்.

தாமஸ் ஆல்வா எடிசன் 1847ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 11ஆம் நாள் அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தில் மிலன் என்னும் ஊரில் பிறந்தார். அவர் பெற்றோர் சாமுவேல் எடிசன், ஜான்சி மேத்தியூஸ் ஆவர். எடிசன், இளம் வயதில் ஸ்கார்லெட் காய்ச்சலினால் (Scarlet fever) பாதிக்கப்பட்டார். அதனால் அவருக்குச் செவிப்புலன் குறைபாடு ஏற்பட்டது. இதனால், நான்கு வயது வரை இயல்பாகப் பேச இயலவில்லை. அப்படிப்பட்ட சூழலிலும்கூட, அவருக்கு எந்தவொரு நிகழ்வையும் கூர்ந்து கவனிக்கும் பழக்கமும் அதில் கேள்வி கேட்கும் பழக்கமும் இருந்தன.

எடிசன் காய்ச்சலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். அதனால், தமது எட்டாவது வயதில்தான் பள்ளிக்கூடம் சென்றார். சில மாதங்களுக்குப் பிறகு, ஒருநாள் எடிசனின் ஆசிரியர், எடிசனுக்குப் படிப்பு வரவில்லை; எத்தனை முறை சொல்லியும் புரிந்து கொள்வதில்லை. இனி, படிப்பைத் தொடரமுடியாது என்று கூறி, அவரை வீட்டிற்குத் திருப்பி அனுப்பிவிட்டார். இதனால், மனவேதனை அடைந்த எடிசனின் தாயார், தம் மகனின் எதிர்காலம் பாழாகிவிடக்கூடாது என நினைத்தார். ஆகையால், வீட்டிலிருந்தே மகனுக்குக் கல்வியறிவு புகட்டினார். மேலும், ஊக்கமளிக்கக் கூடிய வகையில் அறிவுரைகளையும் கூறினார். "எதற்கும் அச்சப்படாதே, தொடர்ந்து முயற்சி செய், தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொள், கற்றுக்கொள்வதை நிறுத்திக் கொள்ளாதே, தொடர்ந்து உன்னை மேம்படுத்திக் கொள்" என ஊக்கம் அளித்தார்.

எடிசனின் முதல் ஆராய்ச்சி என்னவாக இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்வதில் எல்லாருக்குமே பெரிய ஆர்வம் இருக்கும். ஆம், அந்த ஆராய்ச்சி அவருடைய ஐந்தாவது வயதில் நடந்தது. முட்டைகளின் மேல் தாய்க்கோழி அமர்ந்து இருந்தது. சிலநாள் கழித்து அந்த முட்டைகளிலிருந்து கோழிக்குஞ்சுகள் வெளிவந்தன. இதனைக் கண்ட எடிசனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இதனைத் தீர்த்துக்கொள்ள சில முட்டைகளின் மேல் அவரும் கோழியைப்போல் அமர்ந்தார். இத்தகைய ஆராய்ச்சியை அவரது குடும்பம் கண்டுபிடிக்கும்வரை, அவர் அதைத் தொடர்ந்து கொண்டேதான் இருந்தார். இதுபோல, தாம் பார்க்கும் ஒவ்வொரு நிகழ்வைக் குறித்தும் சிந்திக்கத் தொடங்கினார்.

எடிசனின் முதல் கண்டுபிடிப்பான **'மின்சார வாக்குப்பதிவு இயந்திரத்திற்கு'** 1869ஆம் ஆண்டு காப்புரிமை கிடைத்தது. தமது எழுபத்தைந்தாவது வயதில்கூட நாள்தோறும் பதினெட்டுமுதல் இருபது மணி நேரம்வரை வேலை செய்து வந்தார். தமது வாழ்நாளில் 1328 கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளார். அத்தனை கண்டுபிடிப்புகளுக்கு உரிமையுடையவராய் இருந்தும் அமைதியாக "நான் இப்பொழுதுதான் கற்றுக் கொள்ள ஆரம்பித்திருக்கின்றேன்" என்று அடக்கத்துடன் கூறினார் அந்த மாமேதை. உலகில் இன்று நடக்கும் அத்தனை தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் வித்திட்டார். நம் கண்முன் ஒளிரும் மின்விளக்கினைக் கண்டுபிடித்தவரும் தாமஸ் ஆல்வா எடிசனே ஆவார்.

எடிசன் தமது 84ஆம் வயதில், 1931ஆம் ஆண்டு, அக்டோபர் 18ஆம் நாள், நியூ ஜெர்சி வெஸ்ட் ஆரஞ்ச் நகரில் காலமானார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஹெர்பர்ட் ஹூவர், எடிசன் உடல் அடக்கத்தின்போது, அமெரிக்கா முழுவதும் தேவையான விளக்குகளைத் தவிர, மற்ற மின்விளக்குகளை ஒரு மணித்துளி அணைக்கும்படி ஆணையிட்டிருந்தார். அக்டோபர் 21ஆம் தேதி மாலை 9:59 மணிக்கு அவரது புகழுடல் அடக்கம் செய்யப்பட்டது. நியூயார்க்கில் மாலை 9:59 மணிக்குச் சுதந்திர தேவி சிலையின் கையில் இருந்த தீப்பந்தம் ஒளி இழந்தது! பிராட்வே விளக்குகள் ஒளி மங்கின! தெருவில் போக்குவரத்து எச்சரிக்கை விளக்குகளைத் தவிர, மற்ற எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டன. ஆனால் எடிசன் ஆத்மாவாகிய மின்விளக்கு இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் சுடர்விட்டு, உலகம் முழுவதும் ஒளி பாய்ச்சிக் கொண்டே இருக்கும்!

## பொருள் அறிவோம்

1. விஞ்ஞானி – அறிவியல் அறிஞர்
2. மனவேதனை – மனவருத்தம்
3. அச்சப்படாதே – அஞ்சாதே
4. சந்தேகம் – ஐயம்
5. மாமேதை – சிறந்த அறிஞர்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. எடிசன் எங்கு, எப்போது பிறந்தார்?
2. எடிசனுக்குச் சிறுவயதில் ஏற்பட்ட உடல்நலக்குறைவைப் பற்றி எழுதுக.
3. எடிசனுக்கு அவர் தாயார் கூறிய அறிவுரை யாது?
4. சிறுவயதில் எடிசனுக்குக் கண்டுபிடிப்புகளின் மீது ஆர்வம் இருந்ததை விளக்குக.
5. மின்விளக்கைக் கண்டுபிடித்தவர் யார்?
6. எடிசனின் மறைவிற்கு அமெரிக்கா எவ்வாறு இறுதி மரியாதை செலுத்தியது?

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. "கண்டுபிடிப்புகளின் அரசன் என்று வருணிக்கப்படுபவர்"
   அ) பாரடே ஆ) ஐன்ஸ்டீன் இ) எடிசன் ஈ) நியூட்டன்

2. எடிசன் எத்தகைய காய்ச்சலால் பாதிக்கப்பட்டார்?
   அ) டெங்கு ஆ) கொரோனா இ) ஸ்கார்லட் ஈ) மலேரியா

3. எடிசனின் பிறந்த நாள்
   அ) ஜனவரி 17 ஆ) பிப்ரவரி 11 இ) ஆகஸ்ட் 17 ஈ) செப்டம்பர் 17

4. எடிசனின் முதல் கண்டுபிடிப்பு
   அ) கிராம போன் ஆ) மின்சார விளக்கு
   இ) வாக்குப்பதிவு இயந்திரம் ஈ) தந்தி

5. சுதந்திர தேவி சிலை எங்குள்ளது?
   அ) அமெரிக்கா ஆ) ஆசியா இ) ஐரோப்பா ஈ) ஆஸ்திரேலியா

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(1328, ஓஹியோ, 1869, 18 – 20, ஹெர்பர்ட் ஹூவர்)**

1. எடிசனின் முதல் கண்டுபிடிப்பிற்கு ______________ ஆண்டு காப்புரிமை கிடைத்தது.
2. எடிசன் தன் வாழ்நாளில் ______________ கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளார்.
3. அமெரிக்காவின் ______________ மாநிலத்தில் எடிசன் பிறந்தார்.
4. எடிசனின் உடல் அடக்கத்தின்போது ஒரு மணித்துளி மின்சாரத்தை அணைக்க ஆணையிட்ட அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ______________.
5. எடிசன் நாள்தோறும் ______________ முதல் ______________ மணிநேரம் வேலை செய்தார்.

### ஈ) சேர்த்து எழுதுக.

1. அறிவு + கூர்மை = ______________
2. வாக்கு + பதிவு = ______________
3. கண்டு + அறிந்தார் = ______________
4. காப்பு + உரிமை = ______________

## 28.3 மொழிக்கூறு

### தொடர் வகைகள்

1. செய்தியைத் தெரிவிப்பது செய்தித்தொடர்.



சிறப்பு விருந்தினர் விழாவில் பேருரை நிகழ்த்தினார்.

2. வினாப்பொருளை உணர்த்துவது வினாத்தொடர்.



இப்புத்தகம் யாருக்குரியது?

3. கட்டளைப் பொருளில் வருவது கட்டளைத் தொடர்.



பூக்களைப் பறிக்காதே.

4. உணர்ச்சியை வெளிப்படுத்துவது உணர்ச்சித்தொடர்.



நீலக்கடலின் அலை என்னே அழகு!.

## பயிற்சிகள்

### அ) பின்வரும் தொடர்கள் எவ்வகையைச் சேர்ந்தவை எனத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஆ! சுனாமியால் மக்கள் இறந்து விட்டனரா!

அ) செய்தி ஆ) வினா இ) உணர்ச்சி ஈ) கட்டளை

2. இளமையில் கல்.

அ) செய்தி ஆ) உணர்ச்சி இ) கட்டளை ஈ) வினா

3. எங்கள் ஊரில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

அ) வினா ஆ) செய்தி இ) கட்டளை ஈ) உணர்ச்சி

4. இந்தப் புத்தகம் யாருடையது?

அ) செய்தி ஆ) வினா இ) உணர்ச்சி ஈ) கட்டளை

### ஆ) கீழ்க்காணும் தொடர்கள் எவ்வகையைச் சேர்ந்தவை என எழுதுக.

1. ஆஹா! என்னே மல்லிகைப் பூவின் மணம்!
2. இந்தக் கைக்குட்டை யாருடையது?
3. கபிலன் பள்ளிக்குச் சென்றான்.
4. மழையில் நனையாதே.
5. எனக்கு உதவி செய்வாயா?

### இ) பொருத்துக.

1. அறம் செய விரும்பு. – செய்தித் தொடர்
2. உன் பெயர் என்ன? – உணர்ச்சித் தொடர்
3. ஆஹா! தேனின் சுவை இனிமை! – வினாத் தொடர்
4. நாளை அமைச்சர் வருகிறார். – கட்டளைத் தொடர்

## தகவல்துளி

அவதானம் என்பதற்குக் கவனம் என்பது பொருள். அவதானிப்பவரைக் கவனகர் எனக் கூறுவர். ஒரே நேரத்தில் பல செயல்களைச் செய்பவர்களை அவதானிகள் என்று அழைப்பர். அவதானம் பல வகைப்படும். ஒரே நேரத்தில் ஆறு செயல்களைச் செய்வது சட்டாவதானம். எட்டுச் செயல்களைச் செய்வது அட்டாவதானம். பத்து வகையான செயல்களைச் செய்வது, தசாவதானம். பதினாறு அவதானம் செய்வது சோடசாவதானம். ஒரே நேரத்தில் நூறு பேர் கேட்கும் கேள்விகளுக்கு நூறு வகையான அவதானங்களைச் செய்வது சதாவதானம். செய்குத் தம்பி பாவலர் என்னும் தமிழறிஞர் சதாவதானக் கலையில் சிறந்து விளங்கினார். 1907ஆம் ஆண்டு சென்னை விக்டோரியா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இவர் தமது சதாவதானக் கலையை மெய்ப்பித்தார்.

## 28.4 மொழியோடு விளையாடுவோம்

**இரு தொடருக்கும் ஒரே சொல் விடையாக வரும். அச்சொல்லைக் கண்டறிக.**

1. தேளைக் கண்டு அஞ்சுவானேன் !
   மழையைக் கண்டு மகிழ்வானேன் !

2. பத்திரிகை பிறந்தது எதனால்?
   வண்டி ஓடுவது எதனால்?

3. புத்தகத்தைக் குறிப்பது எது?
   ஊசியுடன் இருப்பது எது?

4. கடலில் சேர்வது எது?
   ஐந்துக்குப்பின் வருவது எது?

5. கையில் அணிவது எது?
   எலியின் இருப்பிடம் எது?

## 28.5 கேட்டல் கருத்தறிதல்

### நேர்மை தந்த பரிசு

இளமாறனும் வளவனும் அருகருகே கடை வைத்துக் காய், பழம் விற்று வந்தனர். ஒருநாள் இரவு நேரம். கடையை மூடும்போது, பெரியவர் ஒருவர் இளமாறனின் கடைக்கு வந்தார். அப்போது ஒரு முலாம்பழம் மட்டுமே கடையில் இருந்தது. பெரியவர், அந்தப் பழத்தை வாங்க விரும்பினார். "ஐயா, இந்தப் பழம் ஒரு பக்கத்தில் அழுகியுள்ளது" என்று உண்மையைக் கூறினான் இளமாறன். "சரி, தம்பி. நான் அருகிலுள்ள கடையில் வேறு பழம் இருக்குமா எனப் பார்க்கிறேன்" என்று கூறியவாறு வளவனின் கடைக்கு வந்தார். அங்கு ஒரு தேங்காய் மட்டும்தான் இருந்தது. அந்தத் தேங்காய் நன்றாக இருக்கிறதா என்று கேட்டார் பெரியவர். வளவனும் உடனே, "ஐயா, நல்ல தேங்காய்தான்" என்றான். அந்தப் பெரியவரும் தேங்காயை வாங்கிக் கொண்டார். அவர் சென்றபின், இளமாறனைப் பார்த்த வளவன், "என்னப்பா, பிழைக்கத் தெரியாதவனாய் இருக்கிறாயே? இப்படி நீ உண்மையைச் சொன்னால் எப்படி விற்க முடியும்? என்னைப் பார். நான் சொன்னதை அப்படியே நம்பிவிட்டார் அந்தப் பெரியவர். உண்மையில் அந்தத் தேங்காய் நன்றாக இல்லை என எனக்கே தெரியும். ஆனாலும் விற்றால்தானே பணம் கிடைக்கும்" என்றான். அவன் கூறியதைக் கேட்ட இளமாறன், "நான் இன்று விற்பனை செய்த பொருள்களின் மூலம் தேவையான அளவு தொகை கிடைத்தது. அழுகிய பொருளை நன்றாக இருக்கிறது என்று பொய் சொல்லி விற்பது எனக்குப் பிடிக்கவில்லை. நான் ஒருபோதும் அவ்வாறு

செய்யமாட்டேன்" என்று உறுதிபடக் கூறினான். சில நாள் கழித்து, அன்று வந்த பெரியவர் மீண்டும் இளமாறனின் கடைக்கு வந்தார். "தம்பி, என் ஊரிலேயே ஒரு கடை வைத்திருக்கிறேன். எனக்கு நம்பிக்கையான ஆள் வேண்டும். உன்னைப்போல ஒரு நேர்மையான ஆளைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன். என் கடையில் வேலைக்குச் சேருகிறாயா?" என்று கேட்டார். இளமாறனும் ஒப்புக்கொண்டான்.

## வினாக்கள்

1. இளமாறனின் கடைக்கு வந்த பெரியவர் என்ன வாங்க விரும்பினார்?
2. பெரியவர் வாங்க விரும்பிய பழம் குறித்து இளமாறன் என்ன கூறினான்?
3. வளவன் எவ்வாறு பொருள்களை விற்பனை செய்தான்?
4. இளமாறனின் நேர்மைக்குக் கிடைத்த பரிசு யாது?
5. பொருள்களை விற்பதிலும் ஓர் அறம் வேண்டும் என்பதை விளக்குக.

## 28.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 28.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

உள்ளத்தால் பொய்யா(து) ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

– (குறள் 294)
– திருவள்ளுவர்

(உள்ளம் - மனம்; பொய்யாது – பொய் கூறாது;
ஒழுகின் – கடைப்பிடிப்பின்)

**பொருள்:**

ஒருவன், தன் மனம் அறியப் பொய் பேசாமல், உண்மை பேசுவதைக் கடைப்பிடித்து வாழ்வானாயின், உலகத்திலுள்ளவர்களின் மனத்தில் எல்லாம் இடம் பிடித்திருப்பான்.

பழமொழி
**செய்வன திருந்தச் செய்**

## சொல்வதைக் கேட்டு எழுதுதல்.

ஒருவரின் ஆளுமையில் வெளிப்படும் நடத்தையின் தரத்தையும் அளவையும் எட்டு வகையான காரணிகள் தீர்மானிக்கின்றன. அவை உடல், அறிவு, மனஉணர்வு, குறிக்கோள், சமூகம், பாலினம், கல்வி, குடும்பம் என்பனவாகும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. கண்டுபிடிப்பு
2. கல்வியறிவு
3. ஆராய்ச்சி

## 28.8 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. விஞ்ஞானி | – | Scientist |
| 2. கண்டுபிடிப்பு | – | Invention |
| 3. காப்புரிமை | – | Copyright |
| 4. செவிப்புலன் குறைபாடு | – | Hearing loss |
| 5. கவனித்தல் | – | Observation |
| 6. அறிவுரை | – | Advice |
| 7. ஆராய்ச்சி | – | Research |
| 8. சுதந்திர தேவி சிலை | – | Statue of Liberty |

## 28.9 மொழிபெயர்ப்போம்

மனிதனிடம் காணப்படும் அனைத்துத் திறன்களும் வெளிப்படும் போது, ஆளுமை வளர்ச்சி அடைகிறது. இது அவனது பல்வேறு திறன்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி நிலையைக் குறிக்கும். ஆளுமைக்கூறுகள், ஒரு மனிதனை முழுமையடையச் செய்கின்றன.

---

---

## 28.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழே கொடுக்கப்பட்ட படம் உங்களுக்கு எதை உணர்த்துகிறது? அப்படம் உணர்த்தும் கருத்துகளைக் கூறுக.**



## 28.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் குறிப்புகளைப் படித்து, உரைப்பகுதி உருவாக்குக.**




## 28.12 செயல்திட்டம்

உங்களுக்குப் பிடித்த விளையாட்டு வீரரைப் பற்றிய செய்திகளைத் திரட்டி, காணொலி உருவாக்குக.

29.1 பேசுவோம்

பாடம் 29

# அன்னை இல்லம்

## இனியாவின் பிறந்தநாள் கொண்டாட்டம்



### கலந்துரையாடுவோம்

உங்கள் பிறந்த நாளை முன்னிட்டு நீங்கள் செய்த மனிதநேயச் செயல்கள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 29.2 படிப்போம்

## மணிமேகலை

தமிழிலுள்ள ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று மணிமேகலை. சிலப்பதிகாரத்தின் கதை மாந்தர்களான கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வாழ்வை விளக்கும் காப்பியம் இது.

அன்பும் அருளும் நிறைந்த மணிமேகலை பலருடைய போற்றுதலுக்கு உரியவளாய் விளங்கினாள். மேலும் அவள் தன் வாழ்வில் தான் பெற்ற அட்சயப் பாத்திரத்தின் மூலம் ஏழை எளியவர்களுக்கும் பசித்தவர்களுக்கும் உணவு அளித்த ஒரு நிகழ்வை இங்கு படக்கதையாகக் காணலாம்.



மணிமேகலை : யார் நீங்கள்? நான் எங்கு இருக்கிறேன்?

மணிமேகலா தெய்வம் : அச்சப்படாதே மணிமேகலை. உன்னைப் பாதுகாக்கவே இங்கே தூக்கிவந்தேன். இப்போது உனக்கு மயக்கம் தெளிந்துவிட்டது.

(மணிமேகலைக்கு அவளது முற்பிறவி பற்றிய செய்திகளை மணிமேகலா தெய்வம் கூறிவிட்டுச் செல்கிறது.)



மணிமேகலை : அம்மா, நீங்கள் யார்?

தீவதிலகை : என் பெயர் தீவதிலகை. நான் இங்குள்ள புத்தபீடிகையைக் காவல் காத்து வருகிறேன். புத்தபீடிகையின் முன்னால் கோமுகி என்னும் குளம் உள்ளது. நீ அங்குச் செல். இன்று வைகாசித் திங்கள் முழுமதி நாள். குளத்தில் மூழ்கியுள்ள அமுதசுரபி என்னும் அட்சயப் பாத்திரம் இன்று நீருக்கு மேலே வரும். அப்பாத்திரத்தை எடுத்துக்கொள்.

மணிமேகலை : அட்சயப் பாத்திரமா?

தீவதிலகை : ஆம். அந்த அட்சயப் பாத்திரத்தில், நற்பண்புமிக்க ஒரு பெண்ணிடமிருந்து முதன்முதலில் உணவைப் பெறவேண்டும். பின்னர், அப்பாத்திரத்தில் அள்ள அள்ளக் குறையாமல் உணவு வந்து கொண்டே இருக்கும். அதனைக்கொண்டு, நீ வறுமை உற்றவர்களின் பசியைப் போக்கவேண்டும். பசித்துயரத்தின் கொடுமையை நீக்கவேண்டும்.

மணிமேகலை : அப்படியே செய்கிறேன்.



மணிமேகலை : அம்மா, உங்கள் கையால் உணவு அளியுங்கள்.

ஆதிரை : இதோ தருகிறேன். பெற்றுக்கொள்ளுங்கள்.

**ஆதிரையிடமிருந்து உணவைப் பெற்றபின் அப்பாத்திரத்தில் அள்ள அள்ள உணவு குறையாமல் வருகிறது.**



**பொதுமக்களுள் இருவர்**

ஒருவர் : அங்கே பாருங்கள். ஒரு பெண் எல்லாருக்கும் உணவு அளிக்கிறாள்.

மற்றொருவர் : அதிலென்ன சிறப்பு?

ஒருவர் : அப்பெண்ணின் கையிலுள்ள பாத்திரம்தான் சிறப்பு.



காவலர் – 1 : என்னே புதுமை!

காவலர் – 2 : என்ன புதுமையைக் கண்டீர்?

காவலர் – 1 : அதோ, அங்கு உணவு அளிக்கும் அப்பெண்ணின் கையிலுள்ள பாத்திரத்தைப் பாருங்கள். எத்தனை பேர் உணவு கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் உணவு வந்துகொண்டே இருக்கிறதே.

காவலர் – 2 : ஆமாம். அப்படியென்றால் அது ஓர் அட்சயப் பாத்திரமாக இருக்க வேண்டும். அள்ள அள்ள குறையாமல் உணவு வருகிறது அல்லவா!

**மணிமேகலை அட்சயப் பாத்திரத்தின் உதவியால் ஏழை, எளியவரின் பசிப்பிணியை நீக்குகிறாள். அவர்களின் பசித்துன்பத்தை நீக்கி உணவளிக்கிறாள். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என மணிமேகலைக் காப்பியத்தில் சிறப்பிக்கப்படுகிறாள்.**

## பொருள் அறிவோம்

1. தீவு – நான்குபுறமும் நீரால் சூழப்பட்ட பகுதி
2. பிணி – நோய்
3. அமுதசுரபி – அள்ள அள்ள உணவுக் குறையாமல் தரும் ஒரு பாத்திரம்
4. பொய்கை – குளம்
5. வைகாசித் திங்கள் – வைகாசி மாதம்
6. புத்தபீடிகை – புத்தரின் பாதம் படிந்த இடம்
7. உண்டி – உணவு

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. தீவதிலகை மணிமேகலையிடம் என்ன கூறினாள்?
2. மணிமேகலைக்கு அட்சயப் பாத்திரம் எங்குக் கிடைத்தது?
3. அட்சயப் பாத்திரத்தின் சிறப்பு யாது?
4. அட்சயப் பாத்திரத்தைக் கொண்டு மணிமேகலை செய்த செயல்களைக் கூறுக.
5. மணிமேகலை எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறாள்?

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அட்சயப் பாத்திரத்தில் முதன்முதலில் ________ என்பவள் உணவிட்டாள்.
   அ) ஆதிரை ஆ) தீவதிலகை இ) மாதவி ஈ) மணிமேகலை
2. கோமுகி பொய்கையில் ________ மூழ்கி இருந்தது.
   அ) குவளை மலர் ஆ) நெய்தல் மலர் இ) புத்த பீடிகை ஈ) அமுதசுரபி
3. மணிமேகலையின் முன் ________ காட்சி அளித்தது.
   அ) புத்த பீடிகை ஆ) மணிமேகலா தெய்வம்
   இ) மணிபல்லவம் ஈ) அமுதசுரபி
4. மணிமேகலையிடம், 'பசித்துயரத்தின் கொடுமையை' எடுத்துரைத்தவள் ________.
   அ) ஆதிரை ஆ) தீவதிலகை இ) மாதவி ஈ) மணிமேகலா
5. அட்சயப் பாத்திரம் ஒவ்வோர் ஆண்டும் ________ மாதம் நீருக்கு மேலே வரும்.
   அ) சித்திரை ஆ) வைகாசி இ) ஆனி ஈ) ஆடி

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(அட்சயப் பாத்திரம், மணிமேகலை, முழுமதி, உணவு, பசிப்பிணி)**

1. உயிர்வாழ ________ கொடுத்தவர்கள் உயிர் கொடுத்தவருக்குச் சமமானவர்கள்.
2. ஏழை எளியவருக்கு உணவளித்தவள் ________.
3. கோமுகி குளத்திலிருந்து ________ மணிமேகலைக்குக் கிடைத்தது.
4. மணிமேகலை அட்சயப் பாத்திரத்தின் உதவியால் ஏழை, எளியவரின் ________ நீக்குகிறாள்.
5. அட்சயப் பாத்திரம் ________ நாளில் நீருக்கு மேலே தென்படும்.

### ஈ) சேர்த்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. உணவு | + | அளித்தாள் | = | ________. |
| 2. பசி | + | பிணி | = | ________. |
| 3. வறுமை | + | உற்றவர் | = | ________. |
| 4. சிறை | + | சாலை | = | ________. |

## 29.3 மொழிக்கூறு

### நேர்க்கூற்று – அயற்கூற்று

ஒருவர் நேரே கூறுவதுபோல் இருப்பது நேர்க்கூற்றுத் தொடர்.

| நேர்க்கூற்று | |
|---|---|
| "முகிலா, நான் நாளை ஊருக்குச் செல்கிறேன்" என்று கண்ணன் கூறினான். |  |

ஒருவர் நேரே கூறியதைப் படர்க்கையில் மாற்றிக் கூறுவது அயற்கூற்றுத் தொடர்.

| அயற்கூற்று | |
|---|---|
| தான் அடுத்த நாள் ஊருக்குச் செல்வதாகக் கண்ணன் முகிலனிடம் கூறினான். |  |

| நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்றும்போது ஏற்படும் மாற்றங்கள் | |
|---|---|
| **நேர்க்கூற்று** | **அயற்கூற்று** |
| இன்று | அன்று |
| நாளை | மறுநாள் |
| நேற்று | முன்னாள் |
| இப்பொழுது | அப்பொழுது |
| இது | அது |
| இவை | அவை |
| இதனால் | அதனால் |
| நான் | தான் |
| நாம், நாங்கள் | தாம், தாங்கள் |
| நீ | அவன், அவள் |
| நீங்கள் | அவர்கள் |

நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்றும்போது கவனிக்க வேண்டியவை

- நேர்க்கூற்றிலுள்ள மேற்கோள் குறி, காற்புள்ளி, என்று, என, என்ற செய்தியை முடிக்கும் சொற்கள் ஆகியவற்றை நீக்குக.
- முன்னிலையில் உள்ளதைத் தன்மையாகவோ, படர்க்கையாகவோ மாற்றுக.
- கட்டளைச் சொல்லோடு 'மாறு', 'ஆக' என்ற சொற்களைச் சேர்த்துவிடுக. (படிக்குமாறு, எழுதுவதாக)

**எ.கா.**

| நேர்க்கூற்று | அயற்கூற்று |
|---|---|
| "நான் நேற்றே தேர்வுக்குப் படித்துவிட்டேன்" என்று கமலி தன் தோழியிடம் கூறினாள். | கமலி தன் தோழியிடம், தான் முதல்நாளே தேர்வுக்குப் படித்துவிட்டதாகக் கூறினாள். |
| "கடைக்காரரே, தக்காளி என்ன விலை?" என்று கந்தன் கேட்டான். | கந்தன் கடைக்காரரிடம் தக்காளியின் விலையைக் கூறுமாறு கேட்டான். |
| அம்மா, "இனியா, மழை பெய்கிறது. குடை எடுத்துக்கொண்டு போ" என்றாள். | அம்மா இனியாவிடம் மழை பெய்வதாகவும் குடை எடுத்துக்கொண்டு போகுமாறும் கூறினாள். |
| "உன் பெயர் என்ன?" என்று ஆசிரியர், மாணவனிடம் கேட்டார். | ஆசிரியர் மாணவனை நோக்கி அவனது பெயரைக் கூறுமாறு கேட்டார். |
| குழலி தன் அம்மாவிடம், "ஆஹா! எவ்வளவு அழகான தோட்டம்" என்று வியந்தாள். | குழலி தன் அம்மாவிடம் தோட்டம் மிக அழகாக உள்ளதாகக் கூறினாள். |

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் நேர்க்கூற்றுத் தொடர்களை அயற்கூற்றாக மாற்றுக.

1. பாரதிதாசன், "இனிமைத் தமிழ்மொழி எமது" என்று பாடினார்.
2. "விடியற்காலையில் எழுந்து உடற்பயிற்சி மேற்கொண்டேன்" என்று முல்லை கயலிடம் கூறினாள்.
3. "நாளை என் வீட்டிற்கு வந்தால் தோட்டத்தைச் சுற்றிக்காட்டுவேன்" என மதிவாணன் இளமாறனிடம் கூறினான்.
4. "திருக்குறள் கருத்துகளை உலகம் முழுவதும் பரப்பவேண்டும்" என்று பேரறிஞர் அண்ணா கூறினார்.
5. "நீ ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்றிருக்கிறாய்" என அண்ணன் என்னிடம் கூறினான்.

### ஆ) கீழ்க்காணும் அயற்கூற்றுத் தொடர்களை நேர்க்கூற்றாக மாற்றுக.

1. அன்புக்கரசி தான் வீட்டிற்குப் போவதாகக் கூறினாள்.
2. நான் வரைந்த ஓவியம் அழகாக இருப்பதாக ஆசிரியர் என்னிடம் கூறினார்.
3. காலையிலும் மாலையிலும் நடைப்பயிற்சி மேற்கொள்ளுமாறு மருத்துவர் பாண்டியனிடம் கூறினார்.
4. நான் மறுநாள் கண்காட்சிக்கு வந்தால் புத்தகம் தருவதாக நண்பன் என்னிடம் கூறினான்.
5. யாழினி அண்ணனிடம் தானும் அமெரிக்கா வருவதாகக் கூறினாள்.

### இ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. நேர்க்கூற்று என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
2. அயற்கூற்று என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
3. பின்வரும் நேர்க்கூற்று சொற்களை எவ்வாறு அயற்கூற்றாக மாற்றுவது? நாளை, இப்பொழுது, இதனால், நான், நீ
4. பின்வரும் அயற்கூற்றுச் சொற்களை எவ்வாறு நேர்கூற்றாக மாற்றுவது? அன்று, மறுநாள், அது, அவை, அவர்கள்
5. நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்றும்போது, கவனிக்க வேண்டியவை யாவை?

## 29.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் படங்களிலிருந்து பழமொழிகளைக் கண்டறிக.**



புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.











## கருத்து விளக்கப்படம்

### நூல் அறிமுகம்

# திருக்குறளார் வழங்கும் திருக்குறள் தெளிவுரை பதவுரைப் பதிப்பு

திருக்குறள் உலகப்பொதுமறையாகும். திருக்குறளில் சொல்லாத கருத்துகளே இல்லை. இந்நூலுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். ஆயினும் திருக்குறளார் வீ.முனிசாமியின் உரைநூல் தனிச்சிறப்பு கொண்டது. குறட்பாக்களை அனைவரும் புரிந்து கொள்ளும் அளவிற்குப் பதவுரைப் பதிப்பாக, எளிய உரையாக, தெளிவுரையும் கருத்துரையும் வழங்கியுள்ளார் திரு வீ. முனிசாமி. இந்நூலினைச் சிறப்பு வெளியீடாக வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

திருக்குறளை நாளும் ஓதி, குறள் வழி நடந்து, குறளிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் விரித்துச் சொல்லி, குறளுக்காகவே வாழ்ந்து வந்தவர் திரு வீ. முனிசாமி. அறிஞர்களால், 'திருக்குறளார் முனிசாமி' என்னும் அடைமொழி பெற்றுள்ளார்.




### வினாக்கள்

1. விளம்பரத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நூலின் பெயர் யாது?
2. 'திருக்குறளார்' என்னும் அடைமொழியுடன் அழைக்கப்படுபவர் யார்?
3. திருக்குறள் பதவுரைப் பதிப்பின் சிறப்பு என்ன?
4. திருக்குறள் பதவுரைப் பதிப்பை வெளியிடும் பதிப்பகம் எது?
5. திருக்குறளார் வீ. முனிசாமிக்கு வழங்கும் சிறப்புப் பெயர் மற்றும் விருதுகள் யாவை?

## சுவைச்செய்தி

**பசிப்பிணி மருத்துவன்**

பல்வேறு நோய்களைக் குணப்படுத்துபவர்கள் மருத்துவர்கள். அவர்களுக்கு ஒப்பாக, பசிப்பிணி நீக்குபவர்களையும் மருத்துவர்கள் என்று கூறிய செய்தி வியப்பிற்குரியது. சங்க இலக்கியமான புறநானூற்றுப் பாடலில் (173) 'பண்ணன்' என்ற நிலக்கிழான், 'பசிப்பிணி மருத்துவன்' என்று பாராட்டப்பட்டான். பசியுடனும், நெடுந்தூரம் நடந்ததால் உண்டான களைப்புடனும் வந்த பாணர்கள், **'பசி'** என்னும் **நோய் தீர்க்கும் மருத்துவனாகிய பண்ணனின்** இல்லம் பக்கமா..? தூரமா..? என்று கேட்டதாக அப்பாடல் கூறுகிறது. பசியையும் ஒரு நோயாக உருவகம் செய்து, அதனைத் தீர்க்கும் புரவலனை **'மருத்துவன்'** என்று பாணர்கள் அழைத்துள்ளமை சிந்திக்கத்தக்கது.

## 29.5 கேட்டல் கருத்தறிதல்

### நம்பிக்கையே வாழ்க்கை

மருத்துவமனை ஒன்றில் ஆசைத்தம்பி என்பவரும் கன்னியப்பன் என்பவரும் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருந்த அறையில் இருவருக்கும் இடையே பலகையால் ஆன தடுப்பு இருந்தது. ஆசைத்தம்பி கடுமையான நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். கன்னியப்பனோ உடலை அசைக்கக்கூட முடியாத நிலையில் இருந்தார். ஆசைத்தம்பி இருந்த இடத்தில் ஜன்னல் ஒன்று இருந்தது. கன்னியப்பன் ஆசைத்தம்பியிடம், "நீங்கள் இருக்கும் இடத்தில் ஜன்னலாவது இருக்கிறது. இந்தப் பக்கம் அதுகூட இல்லை" என்று வருத்தத்துடன் கூறினார். அவர் கூறியதைக் கேட்ட ஆசைத்தம்பி "கவலைப்படாதீர்கள். இன்றுமுதல் இந்த ஜன்னனலில் என்ன பார்க்கிறேனோ அதை அப்படியே உங்களுக்குக் கூறுகிறேன். உங்கள் மனவருத்தம் கொஞ்சம் குறையும்" என்று கூறினார்.

ஒவ்வொரு நாளும் ஆசைத்தம்பி, தாம் ஜன்னலில் கண்ட காட்சிகளைக் கூறுவார். அழகிய பூஞ்சோலை, பறவைகள் எழுப்பும் ஒலி, குழந்தைகள் ஊஞ்சலாடும் காட்சி, நடைப்பயிற்சி செய்யும் முதியவர்கள், அழகிய மயிலின் நடனம் என்று தாம் கண்டதை மிக அழகாக வருணித்துக் கூறுவார். அவர் கூறுவதைக் கேட்கும்போது, கன்னியப்பனின் உடல்வலி சற்றுக் குறைந்தாற்போல் இருக்கும். ஒருநாள் பக்கத்துப் படுக்கையிலிருந்து எந்தச் சத்தமும் வரவில்லை. அப்போது அந்த அறைக்குள் செவிலியர் வந்தார். அவரிடம் தடுப்புக்கு அந்தப் பக்கம் இருக்கும் படுக்கை காலியாக இருக்கிறதா எனக் கன்னியப்பன் கேட்டார். செவிலியரும் "ஆமாம்" என்றார். "அப்படியானால், என் படுக்கையை அந்த ஜன்னலுக்கு அருகில் மாற்றிவிடுங்கள்" என்று கூறினார் கன்னியப்பன். படுக்கை

உடனே ஜன்னலுக்கு அருகே மாற்றப்பட்டது. கன்னியப்பன் மெதுவாக எழுந்து ஜன்னலுக்கு அருகே சென்றார். ஜன்னலுக்கு வெளியே நீண்ட மதில் சுவர்தான் இருந்தது. ஆசைத்தம்பி கூறியதுபோல எந்தச் சோலையும் அங்கு இல்லை. கன்னியப்பன், செவிலியரிடம் ஆசைத்தம்பி கூறியதைக் கூறினார். அவர் கூறியதைக் கேட்ட செவிலியர், ஆசைத்தம்பி கடுமையான நோயால் பாதிக்கப்பட்டிருந்ததால், அவருடைய பார்வையை எப்போதோ இழந்திருந்தார் எனவும் இப்போது நோயின் தீவிரத்தால் காலமானார் எனவும் கூறினார். அவர் கூறியதைக் கேட்டு, திகைப்பில் ஆழ்ந்தார் கன்னியப்பன்.

## வினாக்கள்

1. மருத்துவமனையில் தங்கியிருந்தவர்களின் பெயர்களைக் கூறுக.
2. கன்னியப்பன் ஆசைத்தம்பியிடம் என்ன கூறினார்?
3. கன்னியப்பனின் கவலையை ஆசைத்தம்பி எவ்வாறு நீக்கினார்?
4. கன்னியப்பன் ஜன்னலுக்கு வெளியே கண்ட காட்சி யாது?
5. ஆசைத்தம்பி எப்படிப்பட்டவர் என நீங்கள் கருதுகிறீர்கள்?

## 29.6 படம் பார்த்துக் கருத்து கூறல்






## 29.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருவருட்பா

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோறும் இரந்தும் பசி அறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டு உளம் பதைத்தேன்;
நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்
நேர் உறக்கண்டு உளந் துடித்தேன்;
ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.

– (பாடல் 3471)

– இராமலிங்க அடிகள்

(வாடினேன் - வருந்தினேன்; இரந்தும் - யாசித்தும்; அயர்ந்த – களைத்த)

**பொருள்:**

நீர் இல்லாமல் வெயிலில் வாடிய பயிரைப் பார்த்தபோதெல்லாம் வாடினேன். பசியினால் இளைத்து, உடல் மெலிந்து, வீடுதோறும் யாசித்தும், பசி தீராமல் சோர்ந்து ஒன்றும் இல்லாதவர்களைக் கண்டு உள்ளம் வருந்தினேன். நீண்ட நாள் நோயால் வருத்தப்படுகிறவர்கள், என் முன்னால் வரும்போது, அவர்களைப் பார்த்தும் உள்ளம் துடித்தேன். பசியால் துன்பப்பட்டாலும் மற்றவர்களிடம் சென்று உதவி கேட்காத ஒப்பில்லா மானம் உடையவர்களையும் ஏழைகளையும் கண்டு நானும் இளைத்தேன் என இராமலிங்க அடிகள் கூறுகிறார். இப்பாடல், உயிர் இரக்கத்தின் தேவையை உணர்த்துகிறது.

**பழமொழி**
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1945ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் ஐக்கிய நாடுகள் சபை உணவு மற்றும் வேளாண்மை என்னும் ஐக்கிய நாட்டு நிறுவனத்தை தொடங்கியது. இந்நாளை நினைவுகூறும் விதமாக, ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 16ஆம் நாள் உலக உணவு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. பசிப்பிணி
2. அமுதசுரபி
3. அறம்

## 29.8 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. காப்பியம் | – | Epic |
| 2. தீவு | – | Island |
| 3. புத்தபீடிகை | – | Buddhist monastery |
| 4. குளம் | – | Pond |
| 5. முற்பிறவி | – | Previous birth |
| 6. சிறைச்சாலை | – | Prison |
| 7. ஏழை | – | Poor person |
| 8. புதுமை | – | Newness, Novelty |

## 29.9 மொழிபெயர்ப்போம்

Manimekalai is one of the five great epics of Tamil literature. It was written by Kulavanikan Seethalai Sathanar. It depict the life of Manimekalai, the daughter of Kovalan and Madhavi.

---

---

## 29.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்னும் தலைப்பில் சிறுகதை எழுதுக.**

## 29.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் செய்தியைப் படித்து, உங்களுடைய கருத்துகளைக் கூறுக.**

தமிழ்நாட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில், நாடாகாடு என்னும் கிராமம் உள்ளது. இவ்வூரில் பதினொரு வயதான சாம்பவி என்னும் சிறுமி வசித்து வருகிறார். இவர் தாயின் அரவணைப்பில் வளர்ந்து வருகிறார். இப்போது, ஏழாம் வகுப்பில் படிக்கிறார். இவர் நாள்தோறும் சிறுதொகையைச் சேமித்து வந்துள்ளார். சேமித்த தொகையைக் கொண்டு தன் தந்தையின் நினைவு நாளில் ஆதரவற்றோருக்கு உணவு வழங்கி வருகிறார். 2021ஆம் ஆண்டு தன் தந்தையின் நினைவு நாளில் ஆதரவு அற்றோர்க்கு உணவு வழங்குவதற்காக வைத்திருந்த தொகை ₹8,300ஐ கோவிட் நிவாரண நிதியாகத் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் நேரில் வழங்கினார். சிறு வயதிலேயே பிறருக்கு உதவும் எண்ணம் கொண்ட அவரை அனைவரும் பாராட்டினர்.

## 29.12 செயல்திட்டம்

உங்கள் பகுதியில் செயல்படும் ஆதரவு அற்றோர்களுக்கான தொண்டு நிறுவனங்களைப் பார்வையிட்டு, அறிக்கை தயாரித்து வருக.

## 30.1 பேசுவோம்

பாடம்
30



### கலந்துரையாடுவோம்

பேரிடர்க் காலங்களில் நீங்கள் மற்றவர்களுக்குச் செய்த உதவிகள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 30.2 படிப்போம்

# ஜீன் ஹென்றி டுனாண்ட்



உலகம் முழுவதும் மே மாதம் எட்டாம் நாளன்று 'செஞ்சிலுவை நாள்' கொண்டாடப்படுகிறது. இந்நாள் ஜீன் ஹென்றி டுனாண்ட்டின் பிறந்த நாள். அவர் செய்த அருஞ்செயல்கள், செஞ்சிலுவைச் சங்கத்தைத் தோற்றுவிக்கக் காரணமான நிகழ்வுகள் முதலியவற்றைப் பற்றி நாம் அறிந்துகொள்வோம்.

ஜீன் ஹென்றி டுனாண்ட் சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனிவா நகரில் 1828ஆம் ஆண்டு மே மாதம் எட்டாம் நாள் பிறந்தார். இவரது குடும்பம் வாணிகத் தொழிலை அடிப்படையாகக் கொண்டது.

ஜீன் ஹென்றி டுனாண்ட் ஒருமுறை இத்தாலிக்குச் சென்றார். அங்குச் சிறிது காலம் தங்கியிருந்தார். அப்போது, பிரான்ஸ் நாட்டுக்கும் ஆஸ்திரியா நாட்டுக்கும் இடையே போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு நாள் நள்ளிரவு ஜீன் ஹென்றி டுனாண்ட் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது, மிகப் பெரிய குண்டு ஒன்று வெடித்தது. குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட இரைச்சலால், அவர் உறக்கத்திலிருந்து உடனடியாக விழித்துக்கொண்டார். அந்தக் குண்டு வெடிப்பு சத்தம் அருகிலுள்ள சால்ஃபரினோ என்னும் இடத்திலிருந்து வந்தது என்பதை அறிந்துகொண்டார்.

ஜீன் ஹென்றி சற்றும் தயங்காமல், போர் நடந்த இடத்தை நோக்கிச் சென்றார். அங்கிருந்த ஒரு குன்றின் மீதேறிப் போர்க்களக் காட்சியைக் கண்டார். சமவெளிப் பகுதியில் ஃபிரான்ஸ் வீரர்களும் ஆஸ்திரியா வீரர்களும் போர் செய்து கொண்டிருந்தனர். இந்தப் போரில் வீரர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். அவர்கள் காயத்தால் கதறித் துடித்தனர்.

ஜீன் ஹென்றி டுனாண்ட் போரில் காயம்பட்ட வீரர்களைக் கண்டு மனங்கலங்கினார். அவர்களுக்கு எப்படியாவது உதவவேண்டும் என்று முடிவுசெய்தார். அந்தத் துயரமான நிகழ்வுதான் பின்னாளில் உலக அளவிலான செஞ்சிலுவைச் சங்கம் தோன்றக் காரணமாக அமைந்தது.

போரில் காயம்பட்ட வீரர்கள் பல துன்பத்திற்கு ஆளாயினர்; பலர் உயிர் இழந்தனர்; சிலர் உறுப்புகளை இழந்தனர்; சிலர் ஆறாத காயத்துடன் துன்புற்றனர்; பலருக்குப் போதுமான மருத்துவ உதவிகள் கிடைக்கவில்லை. இத்தகைய துன்பங்களுடன் தாகத்தால் பலர் உயிரிழந்ததையும் ஜீன் ஹென்றி டுனாண்ட் கண்டார். அவர் உடனடியாக, மருத்துவர்களையும் நல்உள்ளம் கொண்ட தன்னார்வலர்களையும் திரட்டினார். அவர்களின் உதவியுடன் காயம்பட்ட வீரர்களைக் காப்பாற்ற முனைந்தார்.

மருத்துவ உதவி செய்தவர்களுள் சிலர், பிரான்ஸ் நாட்டு வீரர்களுக்கு மட்டும் உதவினர். இதனால், ஆஸ்திரியா வீரர்களுக்கு வேண்டிய முதலுதவி கிடைக்கவில்லை. ஆனால், ஜீன் ஹென்றி டுனாண்ட் வீரர்களுக்கு இடையே எவ்வித வேறுபாடும் பார்க்காமல் அனைவருக்கும் உதவினார். அவரது செயலைக் கண்டு ஒரு பெண்மணி, 'நம் நாட்டுக்குத் துரோகி, அவனுக்கு உதவாதீர்கள்' என்று கூறினாள். அதற்கு, ஜீன் ஹென்றி டுனாண்ட், 'விரோதியும் மனிதன்தான்' எனக் கூறினார். அச்சூழலில் அவர் கூறிய சொற்கள், ஒவ்வொரு போர் வீரரின் உள்ளத்தையும் நெகிழச் செய்தது.

ஜீன் ஹென்றி டுனாண்ட், போரின் நிகழ்வுகளை விவரிக்கும் 'சால்ஃபெரினோவின் நினைவுகள்' என்னும் நூலை எழுதினார். இந்நூலில், "போரில் காயமுற்ற வீரர்களுக்கு உதவுவதற்கு ஒவ்வொரு நாட்டிலும் ஒரு நிவாரணச் சங்கம் இருக்க வேண்டும். இதற்குப் பன்னாட்டுச் சட்டங்களை வகுக்க வேண்டும்" என வலியுறுத்தினார். இதன் விளைவாகத் தோன்றியதுதான் 'செஞ்சிலுவைச் சங்கம்'. இச்சங்கமானது, போர் சமயத்தில் மட்டுமன்றி, எந்த நேரத்தில் எந்த இடத்தில் உதவி தேவைப்பட்டாலும் உதவுவதற்குத் தயாராக இருக்கவேண்டும். இன்று உலக அளவில் ஏறக்குறைய 191 நாடுகளில் இச்சங்கம் செயல்படுகிறது. இச்சங்கம் உருவாகக் காரணமாக இருந்த ஜீன் ஹென்றி டுனாண்டுக்கு 1901ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

## பொருள் அறிவோம்

1. உறக்கம் – தூக்கம்
2. இரைச்சல் – ஒலி
3. குன்று – சிறிய மலைப்பகுதி
4. திரட்டினார் – ஒன்று சேர்த்தார்
5. பன்னாடு – பல நாடு

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. ஜீன் ஹென்றி டுனாண்ட் எங்கு, எப்போது பிறந்தார்?
2. யாருடைய பிறந்தநாளைச் செஞ்சிலுவை நாளாகக் கொண்டாடுகிறோம்?
3. செஞ்சிலுவை நாள் எப்போது கொண்டாடப்படுகிறது?
4. செஞ்சிலுவைச் சங்கம் தோன்றுவதற்குக் காரணமான நிகழ்வு எது?
5. செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகளைக் குறிப்பிடுக.

## ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஜீன் ஹென்றி டுனாண்ட் ________________ நாட்டில் பிறந்தார்.

அ) பிரான்ஸ் ஆ) சுவிட்சர்லாந்து இ) ஆஸ்திரியா ஈ) இத்தாலி

2. ஒரு நாள் நள்ளிரவு ________________ என்னும் இடத்தில் குண்டு வெடித்தது.

அ) ஜெனிவா ஆ) சால்ஃபரினோ இ) ஆஸ்திரியா ஈ) இத்தாலி

3. ஜீன் ஹென்றி டுனாண்ட் எழுதிய நூல் ________________.

அ) ஜெனிவாவின் நினைவுகள் ஆ) சால்ஃபெரினோவின் நினைவுகள்

இ) ஹென்றியின் நினைவுகள் ஈ) ஆஸ்திரியாவின் நினைவுகள்

4. சால்ஃபெரினோவின் நினைவுகள் என்னும் நூலால் ________________ சங்கம் தோன்றியது.

அ) செஞ்சிலுவை ஆ) போர் வீரர்கள் இ) வாணிகம் ஈ) மருத்துவர்

5. ஜீன் ஹென்றி டுனாண்ட் ________________ ஆண்டு நோபல் பரிசு பெற்றார்.

அ) 1900 ஆ) 1901 இ) 1902 ஈ) 1903

## இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(ஜெனிவா, போர் குண்டு வெடிப்பு, மே 8, 191, போர் நிகழ்வுகள்)**

1. செஞ்சிலுவை நாள் ________________ அன்று கொண்டாடப்படுகிறது.

2. ஜீன் ஹென்றி டுனாண்ட் ________________ நகரில் பிறந்தார்.

3. செஞ்சிலுவைச் சங்கம் தோன்றுவதற்குக் காரணமான நிகழ்வு ________________.

4. சால்ஃபெரினோ நினைவுகள் என்னும் நூல் ________________ செய்திகளை விவரிக்கிறது.

5. இன்று ஏறக்குறைய ________________ நாடுகளில் செஞ்சிலுவைச் சங்கம் செயல்படுகிறது.

## ஈ) சேர்த்து எழுதுக.

1. அருமை + செயல்கள் = ________________.

2. செம்மை + சிலுவை = ________________.

3. போர் + களம் = ________________.

4. மருத்துவம் + உதவி = ________________.

5. மனம் + உறுதி = ________________.

## உ) பிரித்து எழுதுக.

1. பின்னாள் = ________________ + ________________.

2. உயிரிழந்தனர் = ________________ + ________________.

3. மனங்கலங்கினார் = ________________ + ________________.

4. வாணிகத்தொழில் = ________________ + ________________.

5. நல்லுள்ளம் = ________________ + ________________.

## 30.3 மொழிக்கூறு

### ஆறு சொல் கொண்ட தொடர்கள்

| | |
|---|---|
|   | எங்கள் பள்ளியில் ஆண்டுவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. |
|   | நான் என் நண்பர்களுடன் நவீனத் திரையரங்கத்திற்குச் சென்றேன். |
|  | குயவர் மண் பானையை மிகவும் அழகாகச் செய்தார். |
|  | மேலைநாட்டினர் தமிழ்மொழியை ஆங்கில மொழியோடு ஒப்பிட்டுக் கற்கின்றனர். |

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(வளங்களுடன், கால்பந்து, கற்கின்றனர், விளையாட்டுத்திடலில், கனமழை)**

1. எங்கள் பள்ளியின் ஆண்டு விழா, ________________ நடைபெற்றது.

2. உலகக் ________________ போட்டியை என் அண்ணனுடன் கண்டுகளித்தேன்.

3. வானிலை அறிக்கையில் இன்று ________________ பெய்யும் என்றனர்.

4. தமிழ்மொழி இலக்கண இலக்கிய ________________ செம்மொழியாய்த் திகழ்கிறது.

5. மேலைநாட்டினர் தமிழ்மொழியை ஆங்கில மொழியோடு ஒப்பிட்டுக் ________________.

### ஆ) இடம் மாறியுள்ள சொற்களை வரிசைப்படுத்துக.

1. நண்பர்களும் கால்பந்துப் கலந்துக்கொண்டோம் என் போட்டியில் நானும்.
2. விருப்பமாக தொலைக்காட்சியில் செய்தி வாசிக்க உள்ளது எனக்கு.
3. கடைப்பிடிக்க வாழ்வில் நல்ல எப்போதும் பழக்கவழக்கங்களை வேண்டும்.
4. மனிதநேயம் நேற்று குறித்த கூட்டம் விழிப்புணர்வு நடைபெற்றது.
5. சான்றிதழ் வேலைவாய்ப்பிற்கான படிப்புகள் உலகில் உள்ளன ஏராளமாக.

### இ) கீழ்க்காணும் தொடர்களைப் படித்துக்காட்டுக.

1. புலிகளின் எண்ணிக்கை பெருகினால் காடு வளம் பெறும்.
2. வானில் இரவுநேரத்தில் விண்மீன்களைப் பார்ப்பது அழகாக இருக்கும்.
3. சின்னக் கிண்ணத்திலிருந்த பழத்தைக் கிளி கொத்தித் தின்றது.
4. கண்ணன் நேர்காணலில் கலந்துகொண்டு சிறப்பாக விடை கூறினான்.
5. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூலகம் கட்டாயம் வேண்டும்.

### ஈ) ஆறு சொல் கொண்ட தொடர்கள் நான்கு எழுதுக.

1. ________________________________________

2. ________________________________________

3. ________________________________________

4. ________________________________________

## 30.4 மொழியோடு விளையாடுவோம்

**வட்டத்தின் நடுவே ஆறு சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு சொல்லின் முடிவு எழுத்து, இன்னொரு சொல்லின் தொடக்க எழுத்தாக இருக்கும்.**

இங்குள்ள வட்டத்தில், முதல் சொல் என்ன என்பதைக் கண்டுபிடித்து, முதலில் எழுதவும். பிறகு, அதன் முடிவு எழுத்தைக் கொண்டு மற்ற சொற்களை எளிதாக வரிசைப்படுத்தலாம். வட்டத்தில் வரிசைப்படுத்த வேண்டிய சொற்கள் வட்டத்தின் நடுவே கொடுக்கப்பட்டுள்ளன.




### தகவல்துளி

சாரணியம் என்பது, நாட்டின் எதிர்காலச் செல்வங்களாகிய சிறுவர்களுக்கு நல்ல பண்புகளை வளர்த்து, நல்லொழுக்கம் கொண்டு நாட்டின் நற்குடிமக்களாகத் திகழ்வதற்கு வழங்கப்படும் ஒரு பயிற்சியாகும். இதனைச் சாரணப் பயிற்சி என்றும் கூறுவர். இப்பயிற்சித் திட்டத்தை உருவாக்கி, உலகினுக்கு ஓர் அன்பளிப்பாகத் தந்தவர் இராபர்ட் பேடன் பவல். இவர் 1907ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சாரணர் பயிற்சியைத் தொடங்கினார். இன்று உலகம் எங்கும் பரவிய இப்பயிற்சி முறை சாரண இயக்கம் என்னும் பெயரில் ஓர் உலகப் பேரியக்கமாகத் திகழ்கிறது.



இராபர்ட் பேடன் பவல்
1857 – 1941

## 30.5 கேட்டல் கருத்தறிதல்

### உதவி வரைத்தன்று உதவி

வாட்டிகன் நகரில் ஓர் உணவகம் இருந்தது. அந்த உணவகத்தில் உணவு உண்ண பெண் ஒருவர் வந்தார். அப்போது, **'பவுல்'** என்பவர் உணவகத்தில் உணவு கேட்டு நின்றார். அவ்வுணவக உரிமையாளர் அவருக்கு உணவளிக்க மறுத்தார். உணவு உண்ண வந்த பெண், அந்த மனிதருக்கும் சேர்த்து உணவளிக்கக் கூறினார். தாம் அதற்கான தொகையையும் அளிப்பதாகவும் கூறினார். இருப்பினும், பவுலுக்கு உணவளிக்க உணவக உரிமையாளர் மறுத்துவிட்டார். இதற்கான காரணத்தைக் கேட்டார் அந்தப் பெண். "இந்த பவுல் என்பவர், சில ஆண்டுக்கு முன்பு என் உணவகத்தில் பணிபுரிந்தார். அப்போது பசியோடு வந்த ஒரு பெண்ணிடம் பணம் பெற்றுக் கொள்ளாமல் உணவளித்தார். அதனால் அவரைப் பணியிலிருந்து நீக்கினேன்" என்றார் உரிமையாளர்.

"உங்களுக்கு ஒன்று தெரியுமா? அன்று உணவு பெற்றுக் கொண்டு பணம் கொடுக்காமல் சென்ற அந்தப் பெண் நான்தான். பவுல் எனக்குத்தான் உணவு அளித்தார். அவரைப் போன்றவர்கள் உதவியதால்தான், நான் இன்று உயிரோடு இருக்கிறேன். உங்கள் உணவகத்திற்கு அதிக அளவில் உணவுப் பொருள்களை வழங்கும் நிறுவனம் டி.எம்.கேபிடல் (DM Capital). இதன் உரிமையாளர் நான்தான். என்பெயர் **கத்ரீன் லில்லி**. இன்றிலிருந்து எமது நிறுவனம் உணவுப் பொருள்களை விற்பனை செய்வதற்காக மட்டுமன்றி, மக்கள் நலனுக்காகவும் இயங்கும் எனக் கூறினார் **கத்ரீன் லில்லி**.

### வினாக்கள்

1. உணவகம் எங்கு அமைந்திருந்தது?
2. உணவக வாசலில் உணவு கேட்டு நின்றவருக்குப் பெண் செய்த உதவி யாது?
3. உரிமையாளர் பவுலுக்கு ஏன் உணவு அளிக்க மறுத்தார்?
4. உரிமையாளர் கூறிய காரணத்தைக் கேட்டு, கத்ரீன் லில்லி என்ன கூறினார்?
5. கத்ரீன் லில்லியின் டி. எம். கேபிடல் நிறுவனம் எத்தகைய பணிகளை மேற்கொள்கிறது?

## 30.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 30.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது

– (குறள் 103)
– திருவள்ளுவர்

(பயன்தூக்கார் - பயனைக் கருதாதவர்; கடலின் பெரிது – கடலைவிடப் பெரிது)

**பொருள்**

உதவுவதால் பயன் விளையும் என்று கருதாமல், பிறர்க்கு உதவுபவர்கள் உள்ளனர். அவர்களின் அன்பினை ஆராய்ந்தால், அவ்வுதவியின் நன்மை கடலையும் விடப் பெரியதாகும்.

**பழமொழி**
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

திசை காட்டும் கருவியிலுள்ள அம்புக்குறி, அக்கருவியைப் பயன்படுத்துபவர்களுக்கு வழிகாட்டியாய் அமைகிறது. அதுபோல சாரணியப் பயிற்சியும் தன்னைப் பின்பற்றும் சிறுவர், சிறுமியர்க்கு வாழ்க்கை வழிகாட்டியாய் அமையும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. செஞ்சிலுவைச் சங்கம்
2. அன்பு
3. உதவி

## 30.8 அறிந்துகொள்வோம்

1. இரைச்சல் – Noise
2. குண்டு வெடிப்பு – Bomb explosion
3. நள்ளிரவு – Midnight
4. செஞ்சிலுவைச் சங்கம் – Red Cross Society
5. படை வீரர்கள் – Soldiers
6. விரோதி – Enemy
7. செஞ்சிலுவை நாள் – Red Cross Day
8. குன்றுகள் – Hills

## 30.9 மொழிபெயர்ப்போம்

முதலுதவி என்பது, திடீரென உடல்நலக் குறைவு அல்லது விபத்து ஏற்பட்ட ஒருவருக்கு உடனடியாகச் செய்யக்கூடிய உதவி ஆகும். இதனை நன்கு அறிந்தவர்கள்தாம் செய்யவேண்டும். மருத்துவமனைக்கு நோயுற்றவரை அழைத்துச் செல்வதற்கு முன் இத்தகைய முதலுதவி வழங்கப்பட வேண்டும்.

______________________________

______________________________

______________________________

## 30.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் பாடலில் விடுபட்ட சொற்களைக் கண்டறிந்து, பொருத்தி எழுதுக.**

**(உதவிடுவோம், வழியறிவோம், கொண்டிடுவோம், வாழ்ந்திடுவோம், நிலைநிறுத்திடுவோம், வளர்த்திடுவோம்)**

சிறுவர்களே ஒன்று சேருங்கள்

சிந்தனை செய்வோம் வாருங்கள்

நாட்டைப் போற்றும் ________________.

நாளும் மனத்தில் ________________.

நற்பண்பை என்றும் ________________.

நமது கடமையாய்க் ________________.

பயன் கருதாது ________________.

பலரும் புகழ ________________.

## 30.11 உயர்நிலைத்திறன்

**கொடுக்கப்பட்ட படத்தில் இரத்த தானம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதுபோன்று, கண் தானம் பற்றிய செய்திகளைத் திரட்டிப் படவிளக்கம் தருக.**




## 30.12 செயல்திட்டம்

நாள்தோறும் நீங்கள் மற்றவர்களுக்குச் செய்யும் உதவிகளைப் பள்ளி நாட்குறிப்பேட்டில் பதிவு செய்க. அவற்றைப் பற்றி வகுப்பில் கூறுக.

## மீள்பார்வை

### 1. கீழ்க்காணும் வினாக்களுக்குப் பொருந்தும் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**(ஔவையார், கோமுகி, தாமஸ் ஆல்வா எடிசன், சாந்தா அம்மையார், ஆபிரகாம் பண்டிதர்)**

1. மருத்துவத் தொழிலை அறம் காக்கும் சேவையாகச் செய்தவர் ________________.
2. கண்டுபிடிப்புகளின் அரசன் ________________.
3. புத்தபீடிகையின் முன்னால் உள்ள குளத்தின் பெயர் ________________.
4. கருணாமிர்த சாகரம் என்னும் இசைத்தமிழ் ஆராய்ச்சி நூலை வெளியிட்டவர் ________________.
5. அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்று கூறியவர் ________________.

### 2. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரியில் விடை எழுதுக.

1. இரட்டைக் காப்பியங்கள் என்று கூறப்படும் நூல்கள் எவை?
2. செஞ்சிலுவைச் சங்கம் என்றால் என்ன?
3. உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு குறித்து, திருமூலர் யாது கூறுகிறார்?
4. புற்றுநோய் நிறுவனம் எங்கு, எப்போது தொடங்கப்பட்டது?
5. ஆபிரகாம் பண்டிதரின் சிறப்பு யாது?

### 3. பொருத்துக.

| | |
|---|---|
| 1. குதிரைவண்டி | - கட்டளைத் தொடர் |
| 2. பேனாவை எடுக்காதே | - தோன்றல் விகாரம் |
| 3. அக்குழல் | - கெடுதல் விகாரம் |
| 4. பூஞ்சோலை | - இயல்பு புணர்ச்சி |
| 5. மரவேர் | - வலிமிகல் |

### 4. பின்வரும் வினாக்கள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக

1. மே மாதம் 5ஆம் நாள், செஞ்சிலுவை நாளாகக் கொண்டாடப்படுகிறது. (     )
2. நொறுங்கத் தின்றால் நூறு வயது என்பது பழமொழி. (     )
3. ஜூலை 1 தேசிய மருத்துவர் நாளாகக் கொண்டாடப்படுகிறது. (     )
4. ஆபிரகாம் பண்டிதர் இசைத்துறையில் மட்டும் சிறந்து விளங்கினார். (     )
5. தாமஸ் ஆல்வா எடிசனின் முதல் கண்டுபிடிப்பு மின்சார வாக்குப்பதிவு இயந்திரம். (     )

### 5. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுக.

1. தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. ஜீன் ஹென்றி டுனாண்டின் எந்தச் செயல் மற்ற போர் வீரர்களையும் நெகிழச் செய்தது?
3. அட்சயப் பாத்திரத்தின் சிறப்பு என்ன?
4. உணவு உண்ணும் முறை குறித்து விளக்குக.
5. வானொலி உரைச்சித்திரம் என்றால் என்ன?

## 6. கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு ஆறு சொல் கொண்ட தொடர் உருவாக்குக.

1. புற்றுநோய் - ______________________.
2. உடற்பயிற்சி - ______________________.
3. முத்தமிழ் - ______________________.
4. மின்சார வாக்குப்பதிவு - ______________________.
5. இரட்டைக் காப்பியம் - ______________________.

## 7. கீழ்க்காணும் நேர்க்கூற்றுத் தொடர்களை அயற்கூற்றுத் தொடர்களாக மாற்றுக.

1. "புலவரே, பரிசைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று அரசன் கூறினான்.
2. "நாளை நான் மதுரை செல்வேன்" என்று நன்மாறன் கூறினான்.
3. "நான் புத்தகம் கொண்டு வருகிறேன்" என்று செல்வி, தோழியிடம் கூறினாள்.
4. இசையாசிரியர், "மாணவர்களே நீங்கள் நாள்தோறும் பாடிப் பழகவேண்டும்" என்றார்.
5. "மகனே! கீரை வாங்கி வா" என்று தாயார் கூறினார்.

## 8. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. செஞ்சிலுவை - __________
2. பல்லாயிரம் - __________
3. முற்பிறவி - __________
4. இசைப்பயிற்சி - __________
5. நிதியுதவி - __________
5. முத்தமிழ் - __________
6. தீப்பந்தம் - __________
7. பசிப்பிணி - __________
8. அச்சுக்கூடம் - __________
10. உடற்பயிற்சி - __________

## 9. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உலகச் செஞ்சிலுவை நாள் எப்போது கொண்டாடப்படுகிறது?

அ) மே எட்டு ஆ) மே ஆறு இ) மே ஐந்து ஈ) மே மூன்று

2. ஸ்கர்வி என்னும் நோய் எந்த உயிர்ச்சத்துக் குறைவினால் ஏற்படுகிறது?

அ) உயிர்ச்சத்து ஏ ஆ) உயிர்ச்சத்து பி இ) உயிர்ச்சத்து சி ஈ) உயிர்ச்சத்து டி

3. ஆபிரகாம் பண்டிதர் இசை மாநாடுகளை எந்த மாவட்டத்தில் நடத்தினார்?

அ) மதுரை ஆ) தஞ்சாவூர் இ) கடலூர் ஈ) அரியலூர்

4. தாமஸ் ஆல்வா எடிசன் எந்த ஆண்டு பிறந்தார்?

அ) 1844 ஆ) 1845 இ) 1846 ஈ) 1847

5. இரட்டைக்காப்பியத்தினுள் ஒன்று, சிலப்பதிகாரம். மற்றொன்று __________.

அ) மணிமேகலை ஆ) வளையாபதி இ) குண்டலகேசி ஈ) சீவகசிந்தாமணி

## 10. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஏன் இரட்டைக்காப்பியம் என்று அழைக்கப்படுகின்றன?
2. நேர்க்கூற்று, அயற்கூற்று என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. தொடரின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. புணர்ச்சி என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. வல்லினம் மிகும் இடங்களுக்கான விதிகளுள் எவையேனும் மூன்றைக் குறிப்பிடுக.

## 11. பழமொழிகளை முழுமையாக்குக.

1. சீரகம் இல்லா உணவு ________________.
2. விருந்தும் ________________ மூன்று நாள்.
3. செய்வன ________________ செய்.
4. முற்பகல் செய்யின் பிற்பகல் ________________.
5. உண்டி கொடுத்தோர் உயிர் ________________.

## 12. பின்வரும் திருக்குறளில் விடுபட்ட சொல்லைக் கண்டறிந்து நிரப்புக.

1. புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
   இகழ்வார்பின் ________________ நிலை.
2. இணர்ஊழ்த்தும் நாறா மலரனையர் ________________
   உணர விரித்துரையா தார்.
3. பயன்தூக்கார் ________________ உதவி நயன்தூக்கின்
   நன்மை கடலின் பெரிது.
4. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
   வாய்நாடி வாய்ப்பச் ________________.
5. வேண்டுதல் ________________ இலானடி சேர்ந்தார்க்கு
   யாண்டும் இடும்பை இல.

## 13. பின்வரும் ஆங்கிலச்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.

1. Epic - ________________
2. Island - ________________
3. Red Cross society - ________________
4. Copyright - ________________
5. Statue of Liberty - ________________
6. Astrology - ________________
7. Personality - ________________
8. Cancer - ________________
9. Recalling - ________________
10. Immunity - ________________

## 14. பின்வரும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், பெரம்பலூர் மக்கள் பண்பாட்டு மன்றம்
பெருமையுடன் நடத்தும்

**8 ஆவது பெரம்பலூர்ப் புத்தகத்திருவிழா**

மார்ச் 25, 2023 சனிக்கிழமை முதல்
ஏப்ரல் 03, 2023 திங்கட்கிழமை வரை

நகராட்சித் திடல், புதிய பேருந்து நிலையம், பெரம்பலூர்.

அனைத்துப் புத்தகங்களுக்கும் **10%** சிறப்புத் தள்ளுபடி

10 நாள்
100 அரங்குகளில்
10,000 தலைப்புகளில்
10,00,000 புத்தகங்கள்

நாள்தோறும் **சிறப்புப் பரிசு**



அனைவரும் வாரீர்!
அறிவைப் பெருக்குவோம்!

அன்புடன் அழைக்கும் ...
பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், பெரம்பலூர் மக்கள் பண்பாட்டு மன்றம்

### வினாக்கள்

1. புத்தகத்திருவிழாவை எந்தத் துறைகள் நடத்துகின்றன?
2. புத்தகத்திருவிழா எங்கு, எத்தனை நாள் நடைபெறுகிறது?
3. புத்தகத்திருவிழாவில் எத்தனை அரங்குகள் உள்ளன?
4. புத்தகங்களுக்கு வழங்கப்படும் சிறப்புத் தள்ளுபடி எவ்வளவு?
5. புத்தகத்திருவிழாவில் எத்தனை தலைப்பில் எத்தனை புத்தகங்கள் இடம்பெறுகின்றன?

## 15. கீழ்க்காணும் தமிழ்ப்பகுதியைத் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

1. நல்ல ஆரோக்கியம் உங்களை நெடுநாள் வாழ வைக்கும். நல்ல ஊட்டச்சத்து, தினசரி உடற்பயிற்சி, போதுமான தூக்கம் ஆகியவை ஆரோக்கியமான வாழ்க்கையின் அடித்தளம்.
2. கண்டுபிடிப்பு என்பது, உலகில் இதுவரை இல்லாத, புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு பொருளையோ, வழிமுறையையோ, தொழில் நுட்பத்தையோ குறிக்கும். மனித வரலாற்றில், ஒரு வேலையைப் புதிய முறையில், எளிமையாக, வேகமாக, செய்து முடிக்கும் நோக்குடன் கண்டுபிடிப்புகள் நிகழ்ந்துள்ளன.
3. மணிமேகலை ஐம்பெரும் தமிழ்க்காப்பியங்களுள் ஒன்று. இக்காப்பியத்தை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார். சிலப்பதிகாரத்தின் கதை நிகழ்வு, மணிமேகலையிலும் தொடர்வதால், இவை இரட்டைக்காப்பியங்கள் என அழைக்கப்படுகின்றன.
4. இளம் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் அதன் தாய் அமைப்பான இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் மிக முக்கியமான அங்கங்களாகும். இவை செஞ்சிலுவைச் சங்கத்தின் 7 அடிப்படைக் கொள்கைகளான மனிதநேயம், பாரபட்சமற்ற தன்மை, நடுவுநிலைமை, சுதந்திரம், தன்னார்வச் சேவை, ஒற்றுமை, உலகளாவிய தன்மை ஆகியவற்றைப் புகுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
5. உளவியலைத் தெரிந்து கொள்வதால் அறிவை மேம்படுத்திக் கொள்ள முடியும். அறிவை மேம்படுத்திக் கொண்டாலே வாழ்வு மேம்படும். நம்மை நாமே மேம்படுத்திக் கொள்வது மட்டுமன்றி, சுற்றி இருப்பவர்களையும் மேம்படுத்துவதற்கு உளவியல் பயன்படும்.

# அடிப்படை மொழித்திறன்கள்
# பாடங்கள் – 17–30 பாடங்கள், இலக்கணம், மொழிப்பயிற்சிகள்

## கேட்டல்

❖ புதிய சொற்களையும் தொடர்களையும் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்

❖ உரைப்பகுதி, உரையாடல் ஆகியவற்றைக் கேட்டுப் பொருளுணர்தல்.

❖ அறக்கருத்துகள் நிறைந்த பாடல்களைக் கேட்டுப் பொருளுணர்தல்.

❖ அறம்/நீதி கூறும் கதைப் பகுதிகளைக் கேட்டறிதல்.

❖ ஒலி வேறுபாடுடைய சொற்களைக் கேட்டுப் பொருள் அறிதல். (ண,ந,ன/ர,ற/ ல,ழ,ள)

❖ இலக்கணக் கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல் (பெயரெச்சம், வினையெச்சம், செயப்படுபொருள் குன்றிய/ குன்றா வினைகள், தன்வினை-பிறவினை, மூவகை மொழிகள், மரபுத்தொடர்கள், உவமைத்தொடர்கள், இணைமொழிகள், நிறுத்தக்குறியீடு, கருத்து மாறாத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலசொல் ஒருபொருள்)

## பேசுதல்

❖ படம் உணர்த்தும் கருத்தைப் புரிந்துகொண்டு பேசுதல்.

❖ அறச்சிந்தனை, நற்பண்பு வளர்க்கும் பாடல்களைப் புரிந்துகொண்டு பேச முயலுதல்.

❖ இலக்கணக் கருத்துகளைப் எளிமையாகப் புரிந்துகொள்ளல். புரிந்துகொண்ட கருத்துகளைத் தம் பேச்சில் பயன்படுத்துதல்.

❖ படக்காட்சிகள், சூழல்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப உரையாடல் உருவாக்கிப் பேசுதல்.

❖ தாம் கேட்ட புதிய சொற்கள், தொடர்கள், உரைப்பகுதிகள் முதலியவற்றின் பொருளுணர வினாக்கள் எழுப்பி விடை காணல்.

❖ எளிய இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு பேசுதல். (பெயரெச்சம், வினையெச்சம், செயப்படுபொருள் குன்றிய/ குன்றா வினைகள், தன்வினை-பிறவினை, மூவகை மொழிகள், ஒலிவேறுபாடு உடைய சொற்களின் பொருள் அறிந்து, சரியாக ஒலித்துப் பழகுதல்).

❖ மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாகப் பேசுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள். நிறுத்தக்குறியீடு, கருத்து மாறாத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலசொல் ஒருபொருள், உவமைத்தொடர்கள்)

❖ நான்கு, ஐந்து, ஆறு சொல்கொண்டு தொடர் உருவாக்கிப் பேசுதல்.

❖ பிறரோடு தயக்கமின்றித் தமிழில் பேசும் திறன் பெறுதல்.

## படித்தல்

❖ எளிய பாடல்கள், உரைப்பகுதிகள், தகவல் துளி, சுவைச்செய்திகள், கதைப்பகுதிகள் போன்றவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளுதல்.

❖ படச்சூழல்களைப் புரிந்துகொண்டு, உரையாடல், கதை, சூழல் உருவாக்க முயலுதல்.

❖ புதிய சொற்களின் பொருளுணர்ந்து தம் முன்னறிவோடு இணைத்தல்.

❖ அறக்கருத்துகள் உணர்த்தும் பாடல்களைப் படித்துப் பொருளுணர்தல்.

❖ இலக்கணக் கருத்துகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (பெயரெச்சம், வினையெச்சம், செயப்படுபொருள் குன்றிய/ குன்றா வினைகள், தன்வினை-பிறவினை, மூவகை மொழிகள், ஒலிவேறுபாடு உடைய சொற்களின் பொருள் அறிந்து, சரியாக ஒலித்துப் பழகுதல்).

❖ எளிய நடைமுறை இலக்கணக் கூறுகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள். நிறுத்தக்குறியீடு, கருத்து மாறாத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலசொல் ஒருபொருள், உவமைத்தொடர்கள்)

❖ நான்கு, ஐந்து, ஆறு சொல்கொண்ட தொடர்களைப் படித்தல்.

❖ விளம்பரம்/ அறிவிப்பு முதலானவற்றைப் படித்துக் கருத்துணர்தல், விடை கூறும் திறன் பெறுதல்.

❖ கருத்து விளக்கப்படத்தின் கருத்தறிதல்.

❖ பாடநூலுக்கு அப்பாற்பட்டும் தமிழ் நாளிதழ்கள், வார, மாத இதழ்கள், கதை நூல்கள் ஆகியவற்றைப் படிப்பதற்கு ஆர்வம் கொள்ளுதல்.

## எழுதுதல்

❖ எளிய எழுத்துப் பயிற்சிகளை மேற்கொள்ளுதல். (சொல்வதனைக் கேட்டு எழுதுதல், சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுதல்.)

❖ சிறுசிறு உரைப்பகுதிகளைக் கேட்டும் படித்தும் புரிந்துகொண்டு விடை எழுதுதல்.

❖ படச்சூழல்களைப் புரிந்துகொள்ளுதல். படக்காட்சிகளைத் தொடர்புபடுத்தி உரையாடல், கதை, கட்டுரை, பாடல் எழுத முயலுதல்.

❖ பாடப்பொருண்மை சார்ந்த படக்காட்சிகளைப் புரிந்துகொண்டு, கருத்துகளைத் தம் சொந்த நடையில் எழுதுதல்.

❖ இலக்கணக் கருத்துகளைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதிப் பழகுதல். (பெயரெச்சம், வினையெச்சம், செயப்படுபொருள் குன்றிய/ குன்றா வினைகள், தன்வினை-பிறவினை, மூவகை மொழிகள், ஒலிவேறுபாடு உடைய சொற்களின் பொருள் அறிந்து, சரியாக எழுதிப் பழகுதல்).

❖ எளிய மொழிப்பயிற்சிகளைப் புரிந்துகொண்டு விடையளித்தல். (ஒலி வேறுபாடுடைய சொற்கள்)

❖ மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள். நிறுத்தக்குறியீடு, கருத்து மாறாத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலசொல் ஒருபொருள், உவமைத்தொடர்கள்)

❖ நான்கு, ஐந்து, ஆறு சொல்கொண்டு தொடர் உருவாக்குதல்.

❖ விடுகதை/ குறுக்கெழுத்துப் புதிர், மொழி விளையாட்டுகள் போன்றவற்றைப் படித்து விடை எழுதுதல்,

❖ உரைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.

❖ ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுதல்.

❖ சிந்தனைக்கு விருந்து அளிக்கும் படைப்பாற்றல் வளர்செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுதல்.

❖ சொற்கள், எளிய தொடர்கள், சிறு உரைப்பகுதி ஆகியவற்றை மொழிபெயர்த்து எழுதுதல்.

❖ எளிய செயல்திட்டங்களை மேற்கொள்ளுதல்.

❖ குறிப்புகளை விரித்து எழுதுதல், முறை மாறிய தொடர்களை முறைப்படுத்துதல், குறிப்புகளைக் கொண்டு கடிதம், கட்டுரை, உரைப்பகுதி நிறைவு செய்தல். எளிய சொற்களைக் கொண்டு பாடல் எழுதுதல்.

## மேலாய்வாளர் குழு

**முனைவர் மருதூர் அரங்கராசன்,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**முனைவர் மு. சுதந்திரமுத்து,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**திரு ச. தமிழ்ச்செல்வன்,**
எழுத்தாளர், சிவகாசி,

## பாடத்திட்ட வல்லுநர் குழு

**முனைவர் ந. நடராச பிள்ளை,**
மேனாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு.

**முனைவர் ப. டேவிட் பிரபாகர்,**
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

**முனைவர் வ. தனலட்சுமி,**
இணைப்பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி & இலக்கியப் புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605014.

**திருமதி பா. மலர்விழி,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர் - 602025, திருவள்ளூர் மாவட்டம்.

## பாட ஒருங்கிணைப்பாளர் குழு

**முனைவர் கி.வேல்முருகன்,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை மாவட்டம்,

**முனைவர் க. ஜானகி,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**முனைவர் இரா. சிங்காரவேலன்,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**செல்வி த. திலகவதி**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## மெய்ப்புத் திருத்துநர்

**திரு ம. அமல்ராஜ்,**
பட்டதாரி ஆசிரியர், பல்லவபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி, ஜமீன் இராயப்பேட்டை , செங்கல்பட்டு மாவட்டம்.

## புத்தக வடிவமைப்பு

**Pranvati Digital Services, Chennai**
No. 49, F1, 4th Street, Parvathy Nagar, Old Perungalathur, Chennai - 63

## பாட ஆசிரியர் குழு

**திரு ந. பாலமுருகன்,**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பெத்தநாயக்கனூர், கோவை

**திரு பி. இராஜேஷ் கண்ணன்,**
முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, தும்பல், சேலம்.

**திருமதி ப. செந்தில் குமாரி,**
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, முதல்மைல், கூடலூர், நீலகிரி மாவட்டம்.

**திருமதி ஆ. சொர்ணலதா,**
பட்டதாரி ஆசிரியை, அரசு உயர்நிலைப்பள்ளி, பாப்பான் குளம், மடத்துக்குளம் ஒன்றியம், உடுமலை. திருப்பூர் மாவட்டம்

**திரு ச. பெல்லார்மின்,**
தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, வெள்ளப்பள்ளம் மீனவர் காலனி, நாகப்பட்டினம் மாவட்டம்

**முனைவர் சு. பலராமன்,**
முதுகலைத் தமிழாசிரியர், ஜெயின் பப்ளிக் பள்ளி, திருமுடிவாக்கம், சென்னை மாவட்டம்

## ஓவியங்கள்

**திரு கா. தனஸ் தீபக் ராஜன்,**
ஓவியர், நலன் தனஸ் ஸ்டுடியோஸ், சேலம்.

**திரு அச்சுதன் ரவி,**
ஓவிய ஆசிரியர், நாடார் கமிட்டி மேல்நிலைப்பள்ளி, தென்காசி

**திரு இரா . ராஜேஷ்**
42 /2 கண்ணகி தெரு, தூளைமேடு, சென்னை - 94

## தட்டச்சுக் குழு

**திருமதி சோ. ஜோதி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திருமதி கோ. கல்விக்கரசி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை – 600025.

www.tamilvu.org

978-81-977380-8-1